சாகித்திய அகாதெமி

இந்திய இலக்கியச் சிற்பிகள்

அழ. வள்ளியப்பா

பூவண்ணன்



அழ. வள்ளியப்பா

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்தரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம். நாகார்ஜுன மலைச் சிற்பம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.

(பட உதவி: நேஷனல் மியூசியம், புதுதில்லி)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

அழ. வள்ளியப்பா

டாக்டர் பூவண்ணன்

சாகித்திய அகாதெமி

Azha. Valliyappa: Monograph in Tamil by Poovannan. Sahitya Akademi, New Delhi, 2008, Rs. 40.

முதல் பதிப்பு: 2008
இரண்டாம் பதிப்பு : 2010

சாகித்திய அகாதெமி

இரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை,
புது தில்லி 110001.

விற்பனை
'ஸ்வாதி' மந்திர் சாலை, புது தில்லி 110 001.

மத்தியக் கல்லூரி வளாகம், பல்கலைக்கழக நூலகக்
கட்டடம், டாக்டர் அம்பேத்கார் வீதி, பெங்களூர் 560 001.

குணா பில்டிங்ஸ், 443, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை 600 018.

ஜீவன் தாரா பில்டிங், நான்காவது மாடி,
டைமண்ட் ஹார்பர் சாலை, கல்கத்தா 700 053.

172, மும்பை மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், மும்பை 400 014.

விலை: ரூ. 40.

ISBN

அச்சிட்டோர்: வி.பி.கே. ஆப்செட், சென்னை – 5.

பொருள் அடக்கம்

	முன்னுரை	7
1.	வாழ்க்கை	10
2.	குடும்பம்	16
3.	உதவிக்கு ஒருவர்	21
4.	பாடல்கள்	19
5.	கதைகள்	48
6.	உரைநடை	56

முன்னுரை

'குழந்தை இலக்கியம்' என்பது ஆங்கிலேயர் வரவுக்குப்பின் நம் நாட்டில் பரவிப் படர்ந்த இலக்கியம் என்று சிலர் கூறுகின்றனர்.

உண்மையில் 'குழந்தை இலக்கியம்' என்னும் பெயர்தான் புதிய வரவே தவிர, குழந்தை இலக்கியம் பழமையானது. மிகமிகத் தொன்மையானது.

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் இலக்கண நூல், 'தொல்காப்பியம்'. அதில் 'பிசி' என்னும் ஓர் இலக்கிய வகை உள்ளது. பிசி என்பது விடுகதையே! இந்நூலுக்குப் பேராசிரியர் என்னும் உரையாசிரியர் எழுதிய உரையில், பிசிக்கு 'பிறை கவ்வி மலை நடக்கும்' என்று ஓர் உதாரணம் தருகிறார். இது என்ன? 'இது யானை' என்பது விடை. எனவே பிசி என்பது விடுகதையே!

தொல்காப்பியம் உரைநடையின் வகைகளுள் ஒன்றாக, 'பொருள் மரபில்லாப் பொய்ம் மொழி' என்பதைக் குறிப்பிடுகிறது. இதற்கு, பேராசிரியர் பின்வருமாறு உதாரணம் தருகிறார்:

> ''பொருள் மரபில்லாப் பொய்ம்மொழி' என்பது,
> ஒரு பொருளின்றிப் பொய்படத் தொடர்ந்து சொல்லுவன.
> அவை: ஓர் யானையும் குரீஇயும் தம்முள் நட்பாடி, இன்னுழிச்
> சென்று இன்னவாறு, செய்தன வென்று அவற்றுக்கிசையாப்
> பொருள்படத் தொடர்நிலையான் வருகின்றன''
>
> (தொல்.பொருள்: 485-பேராசிரியர் உரை)

மேலே உள்ள இரண்டும், குழந்தைப் பாடல் (விடுகதை

ஒருபாடல் வடிவிலேயே அமையும்) குழந்தைக்கதை ஆகியனபற்றிக் கூறுபவை. இந்நூலில் குழந்தை இலக்கியம், சிறுவர் இலக்கியம் ஆகிய தொடர்களை ஒரே பொருளில் கூறியுள்ளேன்.

குழந்தைக்குப் பாடல்களை வழங்கியவர் அழ.வள்ளியப்பா இந்த எளியவரைத்தான் எல்லாம் கற்ற அறிஞர் பெருமக்கள் சிறப்பிக்க அங்கே கூடியுள்ளனர்.

பாராட்டுக்குரியவர் என்ன சாதனை செய்துள்ளார்? எந்தச் சிறப்புக்காக அவர் பாராட்டப்படுகிறார்?

அவர் பாடல் எழுதியமைக்காகப் பாராட்டப்படுகிறார்! அதுவும் பாலர்களுக்காகப் பாடல் எழுதியமைக்காகப் பாராட்டப்படுகிறார்! குழந்தைகளுக்குக் கவிதைகள் கொடுத்த சிறப்புக்காகப் பாராட்டப்படுகிறார்!

இதுவே ஓர் இமலாய வியப்புக்குரிய செய்தி! ஏனெனில் அதுவரை பாலர்க்காகப் பாடல் எழுதிய எவரும் இந்தச் சிறப்பைப் பெற்றதில்லை!

அவர் பெறப்போகும் சிறப்பு என்ன?

''தமிழ்ப் பேரவைச் செம்மல்'' என்னும் மிக உயரிய பட்டத்தை அவர் பெறுகிறார். பல்கலைக்கழகச் சார்பில் கல்வி அமைச்சர் அவருக்குப் பொற்பதக்கம் அணிவித்து, பொன்னாடை போர்த்தி, புகழ்மாலை சூட்டுகிறார்! வேளாண் துறை அமைச்சர் பாராட்டுரை வழங்குகிறார்.

'பேரவைச் செம்ம'லுக்குரிய தகுதி உரையைப் படித்தார்.

''குழந்தைக் கவியென்ற புத்திலக்கியக் கவிஞர் ஒருவரை முதன் முதலாகப் பாராட்டும் ஒரு பல்கலைக்கழகம் நம் பல்கலைக்கழகம் என்று எடுத்துக்காட்டுவதில் இறும்பூது எய்துகிறோம்.

'காணாத காடு' என்று தம் ஆறிரண்டாண்டில் பாடத் தொடங்கியவர் யார்? 'ஏடு தூக்கிப் பள்ளியில் இன்று பயிலும் சிறுவரே, நாடு காக்கும் தலைவராய், நாளை விளங்கப் போகிறார்' என்று எதிர்காலம் கண்டவர் யார்? 'திட்டங்களில் எல்லாம் பெரிய திட்டம், குழந்தைகளை நன்முறையில்

உருவாக்கும் திட்டமே' என்று திட்டவட்டமாக அறைந்தவர் யார்? அவர்தாம் மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தில் பேரவைச் செம்மல் என்ற செம்மாந்த பட்டத்தினை இன்று பெறும் குழந்தைக்கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள். அவரே, தமிழன்னை பல்லாயிரம் ஆண்டு கருக்கொண்டு தாழாது பொறையுயிர்த்த முதற் குழந்தைக் கவிஞர்; குழந்தை இலக்கியத் தந்தை. இப்பிள்ளைக்கவி நாமறிந்த கவிஞர் வரிசையிலே எண்ணத்தக்க புள்ளிக்கவி. இந்தியக் குடியரசில் குழந்தை இலக்கியக் களத்து முடிசூடா மன்னராகப் புகழ் பெற்றுவரும், தமிழ்க் குரிசில் அழ. வள்ளியப்பா அவர்கட்குத் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்ற பட்டத்தினை வழங்கியும், தமிழ்ச் செம்மல்கள் பேரவையின் ஓர் உறுப்பினராக ஏற்றுக் கொண்டும் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் பாராட்டிச் சிறப்பிக்கிறது''

இன்றுவரை இத்தகைய ஒப்பற்ற சிறப்பினை, வேறு எந்தக் குழந்தைக்கவிஞரும் அல்லது குழந்தை இலக்கியப் படைப்பாளரும் பெறவில்லை. 'வள்ளால் உன்னைப் பாடப்பாட வாய் மணக்குதே!' என்று பாடினார், இராமலிங்க அடிகளார். அதைப் போலவே, வள்ளியப்பாவின் தனித்த புகழைப் பாடப் பாட வாய் மணக்கும், படிக்கப் படிக்க நா மணக்கும்; நினைக்க, நினைக்க நெஞ்சம் மணக்கும்.

1

வாழ்க்கை

'குழந்தை இலக்கியக் கோட்டை' என்று போற்றத்தக்க புதுக் கோட்டைக்கு அருகேயுள்ள இராயவரம் என்னும் சிற்றூரில் பிறந்தவர், குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா.

ஒவ்வோர் ஊருக்கும் அதற்குச் சிறப்புத் தரும் தனிப்பண்பு உண்டு! அதனை அந்த மண்ணின் மாண்பு எனக் கூறலாம். இராயவரம் என்னும் சிற்றூரின் சிறப்பு எது? புலமை!

புலமை அந்த மண்ணில், நெல்லையும் புல்லையும் மீறி செழித்து வளர்ந்திருந்தது. ஒரு புலவர், இதனை

> ''பூமகளும் நாமகளும் சேர்ந்து வாழும்
> புகழ் பெருகும் இராஜ நகர்''

என்று குறிப்பிடுகிறார். இராயவரத்தை, இராஜநகரம், இராஜமாநகரம் என்னும் பெயர்களால் வழங்கியுள்ளனர். அந்தப் புலமையைப் பிறக்கும்போதே பெற்றுக் கொண்டு பிறந்தவர் வள்ளியப்பா என்றே தோன்றுகிறது. இவருக்கு முன்னே இங்கே பிறந்து பெருமை சேர்த்தவர்கள், எல்லா ஊர்களிலும் உள்ள புலவர்கள் போன்றவர்கள். ஆனால் வள்ளியப்பதான், மண்ணின் பண்பான புலமையை இளமைக்கு - இளந்தலை முறைக்கு - இன்னும் தெளிவாகச் சொன்னால் குழந்தைகளுக்கு அர்ப்பணித்தார். அதன் மூலம், இராயவரம் அதற்கு முன் பெறாத புகழைப் பெற்றது. எனவே இராயவரம், தான் புகழ் பெறுவதற்குப் பெற்ற ஒரு வரமாக வந்தவர் வள்ளியப்பா என்று கூறுவதும் பொருந்தும்.

இதே இராயவரத்தில்தான், வள்ளியப்பாவின் உற்ற நண்பரும், அவருடைய 'மலரும் உள்ளம்' என்னும் முதல் நூல் உள்ளிட்ட பல நூல்களை வெளியிட்டுவரும் பழனியப்பா பிரதர்ஸ் என்னும் பதிப்பகத்தின் உரிமையாளருமான பழனியப்பா பிறந்தார். சிறுவர் இதழ்களில் ஒரு புரட்சி செய்த 'அணில்' வார இதழை வெளியிட்டவரும், சக்தி காரியாலயம் என்னும் புகழ்பெற்ற பதிப்பகத்தின் உரிமையாளருமான வை. கோவிந்தன் அவர்களும் இந்த ஊரில் பிறந்தவரே!

இராயவரத்தில் வாழ்ந்த பண்புள்ள தம்பதியர், அழகப்பச் செட்டியாரும், உமையாள் ஆச்சியும். இவர்கள் இருவரும் ஊரார்க்கு உதவும் உத்தம குணம் பெற்றவர்கள். இவர்களுக்கு முதலில் தேனப்பன், அருணாசலம் என்னும் இரு ஆண் குழந்தைகள் பிறந்தனர். அடுத்து மூன்றாம் குழந்தையாக, பிற்காலத்தில் புகழ் பெறுவதில் முதல் பிள்ளையாகத் திகழப்போகும் வள்ளியப்பா பிறந்தார்: 1922ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் ஏழாம் நாளில் பிறந்தார்.

பிற்காலத்தில் குழந்தைகள், குழந்தை இலக்கியம் என்று சொன்னாலே, முதலில் நினைவுக்கு வரும் ஒரு மாதம் நவம்பர்! குழந்தை இலக்கியத்தை பேரளவு நேசித்த நேரு பிறந்த மாதம் நவம்பர். குழந்தைகள் விரும்பும் திருநாளான தீபாவளியும் இதே மாதத்தில் வருகிறது! இத்தகைய நவம்ப்ர் மாதத்தில் ஏழாம் நாளில் பிறந்தார் வள்ளியப்பா! இவருக்குப் பெற்றோர் வைத்த பெயர் வள்ளியப்பன்! ஏழாம் தேதியில் பிறந்தவரின் பெயரிலும் ஏழு எழுத்துகள். இவர் பிறந்த நாளை குழந்தை உலகமே கொண்டாடி வருகிறது! இன்றும் கொண்டாடி குதூகளிக்கிறது.

வள்ளியப்பாவுக்குப் பிறகு, வள்ளியம்மை, பிறந்தார். அதனால் இவ்ருக்கு தமையன்மார் இருவர்; தங்கை ஒருவர். இவரைச் சேர்த்து அழகப்பன்-உமையாள் ஆச்சிக்கு மொத்தம் நான்கு குழந்தைகள்.

அழகப்பர்-உமையாள் ஆச்சி வாழ்ந்த வீட்டருகே அழகப்பர்- அலமேலு என்னும் தம்பதியார் வாழ்ந்தனர். அவர்களுக்குக் குழந்தை இல்லை. அதனால் அழகப்பர்-உமையாள் தம்பதியரிடம், வள்ளியப்பாவைச் சுவிகாரம்

தருமாறு வேண்டினர். அதற்கு இரங்கி, அவர்களுக்கு வள்ளியப்பாவைச் சுவீகாரம் செய்து கொடுத்து விட்டனர். அதனால் வள்ளியப்பா, அழகப்பர்-உமையாள் தம்பதியரின் மகனானார்.

வள்ளியப்பா முதலில் இராயவரத்தில் இருந்த காந்தி பாட சாலையில் படித்தார். ஐந்தாம் வகுப்புவரை படித்தார். பின்பு, இராமச் சந்திரபுரத்தில் உள்ள ஸ்ரீ பூமீஸ்வரஸ்வாமி இலவச உயர்நிலைப் பள்ளியில் படித்தார். இதே பள்ளியில்தான் தவத்திரு குன்றக்குடி அடிகளார், கல்கி சதாசிவம், பழனியப்பா பிரதர்ஸ் பழனியப்பா ஆகியோரும் படித்தனர். இந்தப் பள்ளி 22-09-1927இல் அண்ணல் காந்தியடிகள் வருகை தந்த பள்ளி. அப்போது அவர் எழுதிய கருத்துரை, பள்ளியின் விருந்தினர் கருத்துரை நோட்டுப்புத்தகத்தில் இருக்கிறது. பள்ளியிறுதி வகுப்புவரை வள்ளியப்பா இந்தப் பள்ளியில்தான் படித்தார்.

வள்ளியப்பா இந்தப் பள்ளியில் படித்த காலத்தில்தான், அவரது முதல் பாடல் பிறந்தது! 'குழந்தைக் கவிஞர்' என்னும் உதய சூரியனாக நாளை தோன்றப்போவதை, முன்கூட்டியே அறிவித்த நிகழ்ச்சி இந்தப் பள்ளிப் பருவத்தில்தான் நடந்தது.

இராமச்சந்திரபுரத்தில் பள்ளி முடிந்ததும் மாணவர்கள் தத்தம் ஊர்களுக்கு நடந்தே செல்வார்கள். சிறுவன் வள்ளியப்பா, தம் நண்பர்களுடன் ஊர் நோக்கி நடந்தான். அனைவரும் நடந்து களைத்து மெதுவாக நகர்ந்தார்கள்.

அப்போது இராமச்சந்திரபுரத்தில் முகாமிட்டிருந்த ஒரு டூரிங்க சினிமா கொட்டகையின் விளம்பரம் ஒரு சுவரில் ஒட்டியிருந்தது. 'Lost Jungle' என்னும் ஆங்கிலப் படத்தின் பெயரை, 'காணாத காடு' என்று தமிழிலும் பெரிய எழுத்தில் அச்சிட்டிருந்தனர். ஒரு சிறுவன் தளர்நடையை நிறுத்தி, 'காணாத காடு' என்று உரக்கப் படித்தான்.

சிறுவன் வள்ளியப்பா, அதே பெயரை 'காணாத காடு' என்று உரக்கப் படித்தான். அத்துடன் நின்றுவிடாமல், 'காணாத காடு-கண்டுவிட்டால் ஓடு' என்று உரக்கப் பாடிக்கொண்டே ஓடினான். இதைக் கேட்ட - கண்ட மற்றச் சிறுவர்கள், ஒரு புது உற்சாகம் வந்ததுபோல உரத்த குரலில்

''காணாத காடு
கண்டு விட்டால் ஓடு'

என்று பாடினர்; பாடிக் கொண்டே வள்ளியப்பாவைப் பின் தொடர்ந்து ஓடினர்.

சிறுவன் வள்ளியப்பா மீண்டும் பாடினான்: இப்போது ஒருவரியைச் சேர்த்துப் பாடினான்:

'காணாத காடு
கண்டு விட்டால் ஓடு
ஒளிய இடம் தேடு'

என்று பாடினான்.

நண்பர்களும் இந்த வரிகளையும் உரக்கப் பாடியபடி ஓடினார்கள்.

இப்போது வள்ளியப்பா, பாடலின் சந்தத்தை மாற்றி,

''ஏழைகள் படுவதோ அரும்பாடு!
டிக்கெட் விலையோ பெரும் போடு'

என்று பாடினான்.

நண்பர்களும் முந்தைய உற்சாகம் குறையாமல், அந்த இருவரிகளையும் பாடினார்கள்! பாடிக்கொண்டே ஓடினார்கள். இப்படிப் பாடிக் கொண்டே. மீண்டும் - மீண்டும் பாடிக் கொண்டே அனைவரும் இராயவரத்தை அடைந்தார்கள். ஆன ் அதே நேரம் தம் நண்பன் வள்ளியப்பா ஒரு கவிஞானாவிட்டான் என்பதை அவர்கள் அறியவில்லை! ஏன், வள்ளியப்பாவும் அதை உணரவில்லை! என்றாலும் ஒரு கவிஞன் பிறந்துவிட்டான்! ஒரு பாடல் பிறந்துவிட்டது!

காணாத காடு!
கண்டு விட்டால் ஓடு!
ஒளிய இடம் தேடு!
ஏழைகள் படுவதோ அரும்பாடு!
டிக்கெட் விலையோ பெரும்போடு!

இதுதான் இன்று குவலயம் போற்றும் குழந்தைக் கவிஞர் வள்ளியிப்பாவின் முதல் பாடல்! புகழின் உச்சியில் நின்ற வள்ளியப்பாவுக்கு 'பேரவைச் செம்மல்' என்னும் உயர்வினும் உயர்வான விருதை வழங்கிய மதுரைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் வாசித்த தகுதி உரையில் பெருமிதத்தோடு குறிப்பிட்ட பெருமை பெற்ற பாடல்!

முதல் பாடலைப் பள்ளிப்பருவத்தில் வழங்கிய வள்ளியப்பா தொடர்ந்து குழந்தைப் பாடல்களே வழங்கினார்! குழந்தைக் கவிஞராகிச் சிறப்புற்றார்

வள்ளியப்பா உயர்நிலைப் பள்ளிப் படிப்பை அதே பள்ளியில் படித்து முடித்தார். அதற்கு மேலே படிக்க முடியவில்லை.

அதே ஊரினரான வை. கோவிந்தன் அவர்கள், அவரைத் தம்முடன் சென்னைக்கு அழைத்து வந்து தமது சக்தி காரியாலயத்திப் பொருளாளராக (சேஷியர்) நியமித்தார். அங்கேதான் அவர், தி.ஜ.ர. முதலிய எழுத்தாளர்களைச் சந்தித்தார். தி.ஜ.ர.வின் தூண்டுதலினாலும் துணையாலும் எழுத்தளரானார். 'ஆளுக்குப் பாதி' என்னும் தமது முதல் கதையை எழுதினார். இக்கதை பெற்ற பாராட்டே, பின்னர் அவர் சிறந்த எழுத்தாளராக - கவிஞராக உயர்வதற்கு வழிவகுத்தது. இதைத் தொடர்ந்து சில கட்டுரைகள் எழுதினார். அவை பின்னே, 'வாழ்க்கை விநோதம்' என்னும் நூலாக வெளிவந்தன. தொடர்ந்து வள்ளியப்பாவின் நூல்களை வெளியிட்டார் பழனியப்பா.

இந்தக் கட்டுரைகள் மிக எளிய, இனிய நடையில் எழுதப் பெற்றன. அதனால் இவற்றில் சிலவற்றைப் பின்னாளில் 'பாலர் மலர்' என்னும் சிறுவர் இதழில் வெளியிட்டார். இக்கட்டுரைகள், உருவாகக் காரணமான தி.ஜ.ர.வை, 'தம்

எழுத்துலக ஆசான்' என்று குறிப்பிட்டு மகிழ்ந்தார், குழந்தைக் கவிஞர்.

வள்ளியப்பாவுக்கு 4.2.1924இல் திருமணம் நடந்தது. மனைவி பெயர்: வள்ளியம்மை! கணவன்-மனைவியின் பெயர் பொருத்தம் போலவே, மனப் பொருத்தமும் குணப் பொருத்தமும் அமைந்திருந்தன.

திருமணத்துக்குப் பின்னர் இந்தியன் வங்கிப் பணியில் சேர்ந்தார். ஓய்வு பெறும் வரை இந்தப் பணியிலேயே நீடித்தார். வங்கி நிகழ்வுகள், நடை முறைகள் தமிழுக்கு மாறியபோது, வங்கி இயலின் கலைச் சொற்களுக்குச் சரியான தமிழ்ச் சொற்களைத் தந்து புகழ்பெற்றார். இந்த பணிக்காக, பாரத ஸ்டேட் வங்கியும் இவரைப் பயன்படுத்திக் கொண்டது. அங்கும் இவர்தம் தமிழ்-ஆங்கில அறிவுத்திறமை புகழ்பெற்றது.

வங்கியில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது அவரை, தென்ஃமொழிகள் புத்தக டிரஸ்ட், இவரை டிரஸ்டின், குழந்தை இலக்கியச் சிறப்பு அலுவலராக (Special Officer for Children's Literature) நியமித்துக் கொண்டது. இதற்காக இந்தியன் வங்கியிடம் 'பணி மீள் உரிமை' (Lien) யை டிரஸ்டே பெற்றுத் தந்தது. அதன்படி ஐந்தரை ஆண்டுகள், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழியின் சிறுவர் இலக்கியம் பயன் பெற்றது; அம்மொழிகளில் மிகச் சிறந்த நூல்கள் வெளியிடச் செய்த பெருமை, இவரைச் சார்ந்ததே! 1957இல் டிரஸ்ட் பணிமேற்கொண்ட வள்ளியப்பா, மொத்தம் ஐந்தரை ஆண்டுகள் அங்கே சேவை செய்தார்.

பின்னர் இந்தியன் வங்கிப் பணிக்கு மீண்ட வள்ளியப்பா, வட்டார மேலாளராக ப் பதவி உயர்வு பெற்று, காரைக்குடிக்குச் சென்று பணியாற்றினார். அங்கேதான் 1982, நவம்பர் 7ஆம் நாள் கவிஞரின் மணி விழா சிறப்பாக நடைபெற்றது.

வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றபின்பு சென்னைக்குத் திரும்பினார். 1983இல் 'கோகுலம்' சிறுவர் மாத இதழின் கௌரவ ஆசிரியராகத் திகழ்ந்தார்.

1989 மார்ச் மாதம் 10ஆம் தேதி மதுரை காமராாசர் பல்கலைக்கழகத்தின் குழுவில் கலந்து கொண்ட கவிஞர், 'குழந்தை இலக்கியத்தைப் பல்கலைக்கழக அளவில் ஒரு பாடமாக வைக்க வேண்டும்' என்பதை வலியுறுத்திப் பேசிக் கொண்டிருந்தபோது மயங்கிச் சாய்ந்தார். உடனே மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்று உரிய சிகிச்சை அளித்தனர். அது பயன் தரவில்லை. 1989, மார்ச் 16ஆம் நாள் அதிகாலை ஏழுரை மணியளவில் கவிஞரின் உயிர் பிரிந்தது! அப்போதும் அவரது வலக்கையின் மூன்று விரல்கள் மடிந்தும், இரண்டு விரல்கள் பேனாபிடிப்பது போன்றும் இருந்தன. உயிர் பிரியும் தருணத்திலும் குழந்தைக் கவிஞர் ஏதோ ஒரு குழந்தைப் பாடல் எழுத முயன்று, அந்த முயற்சியிலேயே உயிர் துறந்தார் என்று தோன்றுகிறது.

2
குடும்பம்

மனைவி

குழந்தைக் கவிஞரின் குடும்பம் பண்பும் அன்பும் நிறைந்தது. வள்ளியப்பாவின் நல்லலுள்ளத்துக்கேற்றவாறு குடும்பத்தை நடத்தி வந்தார், துணைவியார், வள்ளியம்மை! அவர் ஐந்தாம் வகுப்புவரைதான் படித்தார்.

ஆனால் வள்ளியப்பாவின் உள்ளத்தை நாளும் படித்துப் படித்து, இல்லத்தைப் பேணும் நல்ல தலைவியாக மாறிவிட்டார்.

அவர்தம் குணங்களில் சிறப்பானது விருந்தோம்பல். யார், எப்போது, எத்தனை பேருடன் வந்தாலும் முகம் மலர வரவேற்று, வந்தவரின் அகம் குளிர உபசரிப்பார். ஒரு நாளின் அந்தி நேரத்திலும், நள்ளிரவிலும் சரி, அதிகாலையிலும் சரி, அவரது விருந்தோம்பல் மிகச் சிறப்பாக இருக்கும். இந்தச் சிறப்பை புலவர் தணிகை உலகநாதன் பின்வருமாறு விவரிக்கிறார்:

''விருந்து போற்றுவதில் அவருக் குஇணை அவரேதான்! நான் அவர்தம் வீட்டுக்குப் போகும் போதெல்லாம் அவர்தம் அருமைத் துணைவியார் திருமதி வள்ளியம்மை அவர்கள் இனிய சிற்றுண்டிகள், படைப்பார். அவை யாவும் விடுதியிலிருந்து வாங்கி வந்தவையாக இரா; வீட்டிலேயே செய்தவை. அவற்றை உண்டவர் கையும் மணக்கும், வாயும் மணக்கும். பேர் சொன்னால் நாவில் நீர் சுரக்கும். இப்படி அவர் குடும்பத்தினர் செய்யும் உபசாரத்தைக் கண்டு, 'இவர்கள் தின்பண்டச் சுரங்கம் வைத்திருக்கிறார்களோ, காஃபிக் கிணறு தோண்டி இருக்கிறார்களோ' என அடிக்கடி நான் பிற நண்பர்களிடம் கூறுவதுண்டு.''

உலகநாதர் உரை, உண்மை உரை! வீட்டு நிர்வாகம், குழந்தைகள் கல்வி; கணவரின் தேவைகள் - இப்படி அனைத்திலும் கவனம் செலுத்துவார்.

இத்தகைய இல்லாளைப் பெற்ற வள்ளியப்பாவுக்கு எப்போதும் மனநிறைவுதான்! 'ஒற்றைக் குடும்பந்தனிலே பொருள் ஓங்கிடச் செய்பவன் தந்தை. மற்றைக் கருமங்கள் செய்து மனைவாழ்ந்திடச் செய்பவள் அன்னை' என்று பாரதியார் கூறுவதற்குச் சரியான சான்று, இந்த வள்ளியம்மை! அதனால் வேறு யாரும் செய்யாத புதுமையாக, அழைப்பிதழ் அனுப்பி, உறவினர், நண்பர்களை அழைத்து 17-4-88ஆம் நாளில் சீரும் சிறப்புமாகத் தம் மனைவிக்கு மணிவிழா நடத்திச் சிறப்பித்தார். மற்றவர்கள் செய்யாத புதுமை இது.

மக்கள்

குழந்தைக் கவிஞர்க்கு, ஒரு மகனும் நான்கு மகள்களுமாக ஐந்து குழந்தைகள்.

மகன் அழகப்பன், இரண்டாம் குழந்தை. மூத்தவள் அலமு. இருவர்க்கும் பின்னே கஸ்தூரி, உமா, தேவி என்று மூன்று பெண்கள். அனைவரும் நன்கு கற்றவர்கள். மருமகன்களும், மருமகள்களும் கல்விச் சிறப்புடையவர்களே.

மகன் அழகப்பன் கவிஞர் தொடங்கிய 'குழந்தைப் புத்தக நிலையத்தை, தொடர்ந்து இயங்கச் செய்கிறான். இதன் மூலம் தந்தையாரின் நூல்களின் மறுபதிப்பு வெளியிடுவதில் ஆர்வம் கொண்டுள்ளான்.

கவிஞரின் பேரர்கள் தம் தாத்தா வள்ளியப்பாவுக்காக ஒரு இணைய தளம் தொடங்கியுள்ளனர். 07.11.2006 அன்று, கவிஞரின் 85ஆம் பிறந்தநாள் விழா காரைக்குடியில் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் அஞ்சல் துறை, குழந்தைக்கவிஞர் நினைவு அஞ்சலை வெளியிட்டது. அதே விழாவில் கவிஞரின் மகன்வழிப் பேரர்கள் பிரபுவும், பிரதீப்பும், கவிஞர்க்காக ஓர் இணைய தளம் தொடங்கினார்கள்.

இணைய தளத்தின் முகவரி:

http://www.geocities:/.com/alvalliappa.

இந்த இணைய தளத்திற்குச் சென்றால், கவிஞரின் வாழ்க்கைக் குறிப்பு, இலக்கியத்தொண்டு, அவர் பெற்ற பரிசுகள் - விருதுகள், பாராட்டுகள் - அவர் எழுதிய நூல்கள் - ஒளிப்படப் பிரிவு முதலியவற்றை அறிந்து கொள்ளலாம்.

தந்தை வழியில் தனயள்

குழந்தைக் கவிஞரின் குடும்பத்தினருள் அவரைப் போலவே படைப்பாளராக - குழந்தை இலக்கியப் பற்றாளராகத் திகழ்ந்து தந்தையின் தொண்டைத் தொடர்பவர் தேவி என்று அழைப்பெறும் தேவி நாச்சியப்பன்.

இவர் M.A., M.Ed., படித்து, கீழ்ச்சிவல் பட்டியில் உள்ள S.M.S. மேல் நிலைப் பள்ளியில் தமிழாசிரியையாகப் பணியாற்றி வருகிறார்.

இவர் எட்டாம் வகுப்பு மாணவியாக இருந்தபோதே, சென்னையில், தந்தையின் ஆசியோடு 'கவிமணி குழந்தைகள் சங்கம்' தொடங்கினார். காரைக்குடிக்கு வந்த பின்பும் சங்கம் தொடர்ந்து செயல்படுகிறது. ஆண்டுதோறும் குழந்தைக் கவிஞர் பிறந்த நாள் விழாவைச் சிறப்பாக நடத்தி வருகிறார்.

இவர் அருமையான எழுத்தாளர்! குழந்தை இலக்கியம் படைப்பதில் ஆர்வம் மிக்கவர். இவர் எழுதிய பந்தும் பாப்பாவும், பசுமைப் படை, புத்தகத் திருவிழா, கடவுளைக் கண்டவர்கள், பல தேசத்துக் குட்டிக் கதைகள் ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன. மேலும், 'நினைவில் வாழும் குழந்தைக் கவிஞர்' என்னும் நூலையும் தொகுத்து வெளியிட்டுள்ளார்.

'குழந்தைக் கவிஞரின் இலக்கிய வா.ிசு இவரே' என்னும் சிறப்புப் பெற்றுள்ளார்.

3

உதவிக்கு ஒருவர்

நட்பு என்பதன் முதன்மைப் பண்பு, நண்பனுக்கு ஒரு உதவி தேவைப்படும்போது செய்வது. இதைத்தான் ''காலத்தினால் செய்த நன்றி'' என்கிறார், வள்ளுவர். உதவி செய்யப்பட்ட காலத்தின் அருமை பெருமையை நோக்க வேண்டுமே தவிர, உதவியாய்க் கிடைத்த பொருளினது சிறுமையை நோக்கக்கூடாது என்பது கருத்து.

குழந்தைக் கவிஞர் வள்ளியப்பா பிறர்க்கு உதவும் உத்தமப் பண்பு மெத்தவும் பெற்றவர். இப்பண்பு இளமையிலேயே அவரிடம் வேர்விட்டது; அவர் வளர வளர அப்பண்பும் வளர்ந்து விருட்சமானது. விரிந்து அடர்ந்து குளிர்ந்த நிழல்தரும் ஆலமரமாக நிலை கொண்டது.

ஒருநாள் மாலை கவிஞர் பயின்ற பள்ளியின் மாணவன் ஒருவன், பள்ளிக்கு அருகே ஒரு நெல்லி மரத்தடியில், உட்கார்ந்து அழுது கொண்டிருந்தான். அதே வழியே சென்ற மாணவர் பலர் அவனைப் பார்த்தார்கள். ஆனால் அவனை அணுகி, ''ஏன் அழுகிறாய்?'' என்று எவரும் கேட்கவில்லை. ஆனால் சைகிளில் சென்று கொண்டிருந்த ஒரு மாணவன், அழும் சிறுவனைக் கண்டு, அவனை அணுகி அழுவதன் காரணத்தை விசாரிக்கிறான்.

அழுபவன் தான் தேர்வில், கணக்கில் தேவையான மதிப்பெண் பெறவில்லை. அதனால் வீட்டில் ஏச்சுப் பேச்சும், ஒருவேளை அடியும் உதையும் கிடைக்கக் கூடும் என்பதால், அங்கே உட்கார்ந்து அழுவதாகக் கூறினான். அவனை விசாரித்த மாணவன் அவனைத் தேற்றி, தனது சைக்கிளின் பின்னிருப்பிடத்தில் அமரச் செய்து, அழைத்துச் சென்றான். சைகிள் அளவான வேகத்தில் சென்றது. சிறிது நேரத்திற்குப்

பின் அது ஒரு வீட்டின் முன் நின்றது. சைகிளைச் செலுத்திவந்த மாணவன், இறங்கி, அதில் ஏற்றிவந்த மாணவனையும் இறங்கச் செய்தான். இறங்கிய மாணவன், தான் எங்கே இருக்கிறோம் என்று சுற்றுமுற்றும் பார்த்தான்; பார்த்தவன் உடனே பதறினான். அது அவன் வீடு; குறைந்த மதிப்பெண் பெற்றதனால், வீட்டுக்குச் சென்றால் திட்டும் குட்டும் கிடைக்கும் என்று அஞ்சியே மரத்தடியில் உட்கார்ந்து அழுத மாணவன், தன் வீட்டின் முன்னே நிற்பது அறிந்து கலங்கிப்போனான்.

கவிஞர் அவனைத் தேற்றி வீட்டுக்குள் அழைத்துச் சென்றார்.

வீட்டின் கூடத்தில் கம்பீரமான தோற்றமுடைய ஒரு பெரியவர் உட்கார்ந்திருந்தார். அவர்தான் அழுத மாணவனின் தமையனார். கண்டிப்புக்குப் பேர்போன அவரை அணுகிய கவிஞர், அவரிடம் அன்பும், ஆதரவும் கலந்த இனிய குரலில், நிதானமாகப் பேசலானார்:

''ஐயா, தேர்வில் தேவையான மதிப்பெண் தம்பி பெறவில்லைதான். அதற்காக இப்படியா அடிப்பது? தம்பி மிகவும் பயந்து, வீட்டுக்கு வரவே தயங்கி, வழியில் ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்தான். நான்தான் ஆறுதல் சொல்லி அழைத்து வந்தேன். இவன் கணிதம்தவிர, மற்ற எல்லாப் பாடங்களிலும் நல்ல மதிப்பெண்ணையே பெற்றிருக்கிறான். கணிதம் ஒன்றில் மட்டுமே குறைந்த மதிப்பெண் பெற்றிருக்கிறான். இதோ மதிப்பெண் அட்டையைப் பாருங்கள்'' என்று அவரிடம் மதிப்பெண் அட்டையைக் காட்டுகிறார், கவிஞர்.

அழுத சிறுவனின் அண்ணனாகிய அவர், தம்பியின் மதிப்பெண் அட்டையை வாங்கிப் பார்க்கிறார். கவிஞர் சொன்னது உண்மை என்பதை உணர்கிறார். ''இவன் உன்னைச் சிபார்சுக்கு அழைத்து வந்து விட்டானா?'' என்று கூறி, தம் தம்பியை உள்ளே போக அனுமதித்தார்.

இந்த நிகழ்ச்சி, கவிஞரின் கருணை உள்ளத்தை நாம் உணரச் செய்கிறதல்லவா?

இந்த நிகழ்ச்சியைப் படித்ததும், கவிஞர் ஏதோ பெரியவர் போலவும், கண்ணீர் விட்ட மாணவர் மிகச் சிறியவர் போலவும்

தோன்றும். ஆனால் உண்மை அதுவல்ல! இருவருக்கும் சுமார் ஓராண்டுதான் வித்தியாசம்! கவிஞர் அப்போது பத்தாம் வகுப்பு மாணவர்! அவர் அழைத்துவந்தவர் ஒன்பதாம் வகுப்பு மாணவர்! அதனால் இருவரும் ஏறத்தாழ சம வயதினர். என்றாலும், வள்ளியப்பா, அந்த இளம் வயதிலேயே தன்னையொத்த ஒரு மாணவனின் கண்ணீரைக் கண்டு கலங்கி, அவனைத் தேற்றி அழைத்துச் சென்று, அவன் தமையனாரிடம் பேசி அவர் கோபத்தைத் தணித்திருப்பது, அந்த இளம் வயதிலேயே கவிஞரிடம் பிறர்க்கு உதவும் உத்தம குணம் மெத்தவும் வளர்ந்திருந்தது, என்பதைத் தெரிவிக்கிறது

இந்த நிகழ்ச்சியில் இடம் பெறும் சிறுவன் - போதிய மதிப்பெண் பெறாமல் வருந்திய சிறுவன் யார் தெரியுமா? பிற்காலத்தில் குன்றக்குடி அடிகளாராக உயர்ந்து, உலகுக்கே அறிவுரை வழங்கிய சான்றோர்! இந்த நிகழ்ச்சியைப் பிற்காலத்தில் அடிகளாரே வெளிப்படுத்தியமை மேலும் சிறப்பு! இந்நிகழ்ச்சியைப் பாசத்தோடும் பண்போடும் வெளிப்படுத்திய அடிகளார், தொடர்ந்து,

''வள்ளியப்பா எப்பொழுதுமே பிறர் துன்பத்தைக் கண்டு உருகிப் போகும் குழந்தை உள்ளம் கொண்டவர். பள்ளிப் பருவத்திலேயே உடன் பயிலும் மாணவர்களுடன் சிரித்துப் பழகுவார். ஆசிரியர்களின் நன்மதிப்பைப் பெற்று, பணிவு மிக்க மாணவராக விள்ங்கினார்'' என்று கூறியிருப்பது கவிஞரின் பண்பு நலம், காட்டும் பாராட்டுரையாகும்! இந்நிகழ்ச்சி 1937ஆம் ஆண்டு, கவிஞரின் பதினைந்தாம் வயதில் நடந்தது.

இந்நூலாசிரியரும் சிறந்த குழந்தை எழுத்தாளர் ஜெ. எத்திராஜனும் நண்பர்கள்; ஒரே பள்ளியில் படித்த மாணவர்கள். ஓராண்டு பள்ளி திறந்து, மாணவர்கள் மேல் வகுப்புக்கு மாறி, புதிய வகுப்புக்கான புத்தகங்கள் வாங்கி, மகிழும் காலம். எத்திராஜனும் பத்தாம் வகுப்புக்குத் தேர்ச்சி பெற்றுப் பரவசத்துடன், புதிய பாடபுத்தகங்களை எதிர் நோக்கி யிருந்தார். ஆனால், அவர் தந்தையாரிடம் உடனடியாகப் பாட புத்தகங்கள் வாங்கப் பணம் தரும் வசதியில்லை. பள்ளியில் வகுப்புகள் தொடங்கிவிட்டன. பாடம் நடத்தும் ஆசிரியர்களோ

பாடபுத்தகத்துடன்தான் வகுப்பு வர வேண்டும் என்று வற்புறுத்தினர்.

எத்திராஜனின் தந்தையால் அந்த நேரத்தில் பாடபுத்தகங்கள் வாங்கப் பணம் தர முடியவில்லை. 'என்ன செய்வது?' என்று யோசித்த எத்திராஜன் ஒரு முடிவுக்கு வந்தார். அந்த முடிவு, அவருக்கும், எனக்கும் நன்கு அறிமுகமான குழந்தைக் கவிஞரிடம் பாடப்புத்தகம் வாங்கப் பணம் கேட்பது என்னும் முடிவுதான்.

எத்திராஜனும் இந்நூலாசிரியரும் பள்ளித் தோழர்கள்! நல்ல நண்பர்கள்! இருவருமே சிறுவர் இலக்கியப் படைப்பாளிகள்! இந்தத் தகுதியில் குழந்தைக்கவிஞரை நன்கு அறிந்தவர்கள். அதனால், எத்திராஜன் தன் நண்பனான இந்நூலாசிரியருடன், கவிஞரைக் கண்டு, உதவி கேட்கப் புறப்பட்டார்.

பெரியவர்களைப் பார்க்க வெறுங்கையோடு போக முடியாது! பழமோ, இனிப்போ வாங்கிச் செல்ல வேண்டும். எத்திராஜன் கவிஞரைப் பார்க்க எதை எடுத்துக் கொண்டு புறப்பட்டார், தெரியுமா? ஒரு சிறுகதை எழுதி எடுத்துக் கொண்டு, இந் நூலாசிரியரை உடன் அழைத்துக் கொண்டு கவிஞரின் வீட்டுக்குச் சென்றார்.

கவிஞர் இருவரையும் இன்முகத்தோடு வரவேற்றார். 'என்ன விஷயம்' என்று கேட்பதுபோல் பார்த்தார். உடனே எத்திராஜன், ''பாலர் மலருக்கு ஒரு சிறுகதை எழுதிக் கொண்டு வந்திருக்கிறேன்'' என்றபடி, தான் கொண்டு வந்த கதையை நீட்டினார்.

கவிஞர் கதையைப் பெற்றுக் கொண்டு, ''சரி, படித்துப் பார்க்கிறேன்'' என்றார்.

அதன்பின்னும் எத்திராஜனோ, உடன் வந்தவரோ ஒன்றும் பேசாமல் வீற்றிருக்கவே, கவிஞர் ''வேறென்ன விஷயம்?'' என்று கேட்டார்.

உடனே எத்திராஜன், தான் மேல் வகுப்புக்குத் தேர்ச்சி பெற்றும், பாட நூல்களை வாங்க முடியாத சூழலைச் சொல்லி, ''பாடநூல்கள் வாங்க, ஒரு பத்து ரூபாய் வேணுங்கோ'' என்று கூறினார். மறுநிமிடமே வள்ளியப்பா பத்து ரூபாய் கொண்டு

வந்து எத்திராஜனிடம் கொடுத்தார். எத்திராஜன் நன்றியுடன் பெற்றுக் கொண்டு நண்பருடன் புறப்பட்டுச் சென்றார்.

பாலர்மலருக்கு ஒரு கதை கொடுத்துவிட்டு, கவிஞரிடமிருந்து பத்து ரூபாய் பெற்றுக் கொண்டதால், பிறகு கதையைப் பிரசுரித்து விட்டு, கதையின் சன்மானத்தைத் தான் கொடுத்த பணத்துக்குக் கவிஞர் சரி செய்து கொள்வாரோ? - என்று நினைக்கத் தோன்றும். அப்படி நினைத்தால் அது, தவறு. அந்தக் காலத்தில் பாலர்மலர், டமாரம் போன்ற இதழ்களில் வெளியிடும் கதைகளுக்குப் பணம் தருவதில்லை. படைப்புகள் வழங்கும் அந்தக் காலப் பாலர்கள் பணம் எதிர்பார்த்ததும் இல்லை! எத்திராஜனுக்குக் கவிஞர் தம் சொந்தப் பணத்தையே தந்தார்.

இப்படிப் பலருக்குத் தம் சொந்தப் பணத்தை நன்கொடை போல வழங்கிய வள்ளியப்பாவை, ''அவர் வள்ளலப்பா!'' என்று போற்றியவர்கள், ஏராளம். மேலே குறிப்பிட்ட எத்திராஜன், வள்ளியப்பாவின் வள்ளன்மையை, இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்து அவர்களைப் பிரபல எழுத்தாளர்களாக்கியது மட்டுமல்ல, துன்பப்படுவோருக்கு உதவிக்கரம் நீட்டும் உயரிய பண்பும்கொண்டிருந்தார், குழந்தைக் கவிஞர். இது என் அனுபவத்தில் கண்ட உண்மையாகும்'' என்ற மகிழ்ந்து பாராட்டியுள்ளார்.

வள்ளியப்பாவின் வள்ளன்மையை வாயாரப் போற்றிய சிலருள் ஒருவர், கலைமாமணி டாக்டர் விக்கிரமன் அவர்கள்.

விக்கிரமன் தம் மகளுக்கு 1977இல் திருமணம் உறுதி செய்தார். அந்தக் காலத்தில் அவர்க்குப் பொருளாதாரச் சிக்கல் இருந்தது. திருமணச் செலவுகள் அவரை நெருக்கின. என்றாலும் நெருங்கிய நண்பர்களின் உதவியோடு அவற்றைச் சரிகட்டி வந்தார். என்றாலும் திருமண நெருக்கத்தில் ஒரு சிக்கல். மணப் பெண்ணுக்குத் தேவையான நகைகளையும் புடவைகளையும் வாங்கிவிட்டார். மணமகனுக்கும் மற்றுள்ள நெருங்கிய உறவினர்க்கும் வேட்டி புடவை, முதலியன வாங்க வேண்டும். விக்கிரமன் அந்த நிலையில் குழந்தைக் கவிஞரைச் சந்தித்து, தமது பொருளாதாரச் சிக்கலைத் தெரிவித்தார். கவிஞர் சில நொடியும் தயங்காமல், ஒரு தாளெடுத்து, தமக்கு அறிமுகமான

பாண்டி பஜாரில் இருந்த ஒரு துணிக்கடை உரிமையாளர்க்கு, ''இக்கடிதம் கொண்டு வருபவருக்குத் தேவையான துணிகளைக் கொடுக்கவும்'' என்று எழுதி அவரிடம் கொடுத்தார்.

கவிஞர் தந்த கடிதத்தை விக்கிரமன் அவர்கள் தம் மனைவியிடம் கொடுத்து, துணிமணிகள் வாங்கிவரச் சொல்லியனுப்பினார். அவர் மனைவியோ தயங்கித் தயங்கி, கவிஞர் குறிப்பிட்ட கடைக்குச் சென்று கடிதத்தைக் கொடுத்தார். கடைக்காரரோ, அவரை உரிய முறையில் வரவேற்று அவருக்குத் தேவையான துணிகள் அனைத்தையும் முகமலர்ச்சியுடன் எடுத்துக் கொடுத்தார். தயக்கமும் சந்தேகமுமாகச் சென்ற விக்கிரமன் துணைவியார், துணி மூட்டையுடன் மகிழ்ச்சியோடு வீடு திரும்பினார்.

ஒரு நொடி தயக்கமும் இன்றி, 'இவ்வளவு தொகைக்குத் துணி கொடுங்கள்' என்று எல்லை வரையறுக்காமல் கடிதம் வழங்கி, விக்கிரமனின் துன்பத்தை அறவே துடைத்து கவிஞர் செய்த உதவியை-காலத்தால் செய்த உதவியை மற்றவர்களாயிருந்தால் மறந்திருப்பார்கள். அல்லது மறைத்திருப்பார்கள். ஆனால் உதவி பெற்றுக் கால் நூற்றாண்டுக்கும் பின்னே அதை நன்றியுடன் எழுத்திலே பதிவு செய்தார் விக்கிரமன் என்பது நினைத்து மகிழத்தக்க நேரிய செயல்.

1945-50 ஆண்டுகளில் சிறுவர் இதழ்கள் மிகப்பல தோன்றின. அவை மாணவர்களுக்கு - சிறுவர்களுக்கு நிறைய வாய்ப்பளித்தன. அதனால் புகழ்பெற்ற மாணவர்களில் ஒருவரான தூத்துக்குடி கே. கண்ணுசாமி, சிறுவர் இதழ்கள் நடத்திய சிறுகதைப் போட்டிகளில் பல பரிசுகள் பெற்றவர். *1950*இல் குழந்தை எழுத்தாளர் சங்கம் தோன்றுவதற்கான அமைப்புக் கூட்டத்துக்கே மாணவரான கண்ணுசாமி தூத்துக்குடியிலிருந்து சென்னை வந்து, கலந்து கொண்டவர்.

அவர் வாழ்வில், மாற்றாந்தாயாரால் சில கொடுமைகளை அனுபவித்தார். வீட்டைவிட்டும் விரட்டப்பட்டார். அதனால் 'தற்கொலை செய்து கொள்ளலாம்' என்று நினைத்தவரை, அவர்தம் நண்பர்கள் தடுத்தனர். அவர்கள் உதவியுடன் சென்னைக்கு வந்து, கவிஞரைச் சந்தித்தார். தமது துன்பச் சூழலை எடுத்துச் சொன்னார். அதை அறிந்து வருந்திய கவிஞர்

கண்ணுசாமியைத் தம் வீட்டிலே தங்க வைத்து அவருக்கு ஒருவேலை கிடைத்து, வருமானம் வரும்வரை ஆதரித்தார். ''அப்போது வள்ளியப்பா அண்ணா பாங்கியில் குறைந்த சம்பளமே பெற்றுவந்தார்கள். அதுவோ பஞ்சகாலம். 'ஆறு அவுன்ஸ்' ரேஷன் காலம். அந்தப் பயங்கரமான நேரத்தில் அவர்கள் அந்நியனான என்னைத் தமது சொந்த உயிராக மதித்துக் காப்பாற்றிய அருஞ்செயலை என் வாழ்நாளில் மறக்க முடியாது. அவர்கள் வீட்டுப் பிள்ளையாகவே வளர்ந்தேன்'' என்று கண்ணுசாமியே பிற்காலத்தில் இந்நிகழ்வைப் பதிவு செய்துள்ளார்.

குழந்தைக் கவிஞர் இப்படி ஏராளமானவர்க்கு உதவி செய்துள்ளார். 'ஏராளமனவர்' என்னும் சொல்லின் பொருளை உணர்ந்தே இச்சொல்லை இங்கே பயன்படுத்தியுள்ளேன். ஏறத்தாழ அவர்கள் அனைவருமே வள்ளியப்பா செய்த உதவிகளை மகிழ்ச்சியோடும் நெகிழ்ச்சியோடும் வெளிப் படுத்திக் களிப்படை கிறார்கள். இதுவும் வள்ளியப் பாவின் தனிச்சிறப்பு!

4

பாடல்கள்

பாட்டுக்கே முதன்மை

''பாட்டினைப் போல் ஆச்சர்யம் பாரின்மிசை இல்லையடா!'' என்று வியந்தார் ப்ாரதியார்.

பெரியவர்களுக்குப் பாட்டு ஆச்சர்யம் என்றால், சிறியவர்களுக்கு - சிறுவர்களுக்குப் பாட்டு பேராச்சர்யம்! பெரியர்வர்களுக்குப் பாட்டு இனிமை எனறால், சிறுவர்களுக்கு அது பேரினிமை! பெரியவர் களுக்குப் பாட்டு இன்பம் என்றால் சிறுவர்களுக்கு அது பேரின்பம்! பெரும் பேரின்பம்!

குழந்தை பிறந்தவுடனே தாயின் குரலைக் கேட்கிறது! தாலாட்டின் இனிமையில் மகிழ்கிறது! தொடர்ந்து தாய் பாடும் பாட்டை, பாட்டி பாடும் பாட்டைக் கேட்டுக் கேட்டு, சுவைத்துச் சுவைத்து, பாட்டின் இசைக்கேற்ப, தலையை ஆட்டி, உடலை அசைத்து, கைகளைத் தட்டித் தாளம் போட்டுப் பாட்டைச் சுவைத்து மகிழ்ந்து வளர்கிறது!

குழந்தையை மகிழ்விக்கும் இந்தப் பாடலைப் போல, பின்னர் கவிஞர்களும் பாடல்கள் எழுதினார்கள். அவற்றையும் சிறுவர்கள் சுவைக்கிறார்கள்! வளரும்போது அவற்றின் பொருள் உணர்கிறார்கள்! அவற்றை மனத்தில் இருத்தி - இருத்த வேண்டும் என்றுகூட இல்லை - குழந்தையின் முயற்சி இல்லாமலே அந்தப் பாடல் அதன் மனத்தில் இறங்கி - இணைந்து, அதன் கருத்துகளை இசையோடு கலந்து பதித்து விடுகிறது. அதனால்தான் குழந்தை இலக்கியம் என்று சொன்னவுடன், அதன் கூறுகளான சிறுகதை-நாவல்-நாடகம்-உரைநடை முதலியவற்றைப் பின்னுக்குத் தள்ளி, பாடல் முன்னே வருகிறது.

குழந்தை இலக்கியத்தின் தலைமைப் பகுதியே பாடல்தான்! வள்ளியப்பா சிறுவர்களுக்காகச் சிறுகதை, நாவல் முதலியவற்றை வழங்கியிருந்தாலும் அவரைக் 'குழந்தைக் கவிஞர்' என்றே குவலயம் கொண்டாடுகிறது.

கவிஞரின் முதல்பாடல்

வள்ளியப்பா எப்போது குழந்தைக் கவிஞர் ஆனார்?

அவர் ஏறத்தாழ ஒரு குழந்தையாக இருந்தபோதே - பள்ளியில் பயிலும் மாணவனாக இருந்தபோதே, கவிஞராகி விட்டார்.

இராயவரத்தில் வசிக்கும் அவர் படித்தது இரண்டு மைல் தூரத்தில் உள்ள இராமச்சந்திரபுரத்தில் இருந்த பள்ளியில். இந்தத் தூரத்தை நடந்தே கடந்து பள்ளிக்குச் செல்ல வேண்டும். பள்ளியிலிருந்து வீடு திரும்ப வேண்டும். இப்படி ஒருநாள் அவர் சோர்வோடு பள்ளியி லிருந்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். அப்போது வழியில் ஒரு சுவரில் ஒரு திரைப்பட விளம்பரம் ஒட்டப்பட்டிருந்தது. அருகில் உள்ள ஒரு கொட்டைகையில் 'Lost Jungle' என்னும் ஆங்கிலப் படத்துக்கான சுவரொட்டி அது. படத்தின் பெயரைத் தமிழில் 'காணாத காடு' என்று மொழி பெயர்த்திருந்தார்கள்.

வீடு திரும்பிக் கொண்டிருந்த சிறுவன் வள்ளியப்பா அதைப் படித்தான். 'காணாத காடு' என்று படித்தவனின் மனத்தில் அதுவரை பதுங்கியிருந்த கவிதைக்கலை - கவியாற்றல் விழித்துக் கொண்டது. அதனால் அவன் உரத்த குரலில்,

'காணாத காடு'
கண்டுவிட்டால் ஓடு!'

என்று தாளம்போட வைக்கும் சந்தத்தோடு கூறினான் - இல்லை பாடினான். அதைக் கேட்ட, அவனுடன் நடந்து வந்த மாணவர்கள் - நண்பர்கள். உரத்த குரலில், அதே சந்தத்தில் 'காணாத காடு, கண்டுவிட்டால் ஓடு' என்று பாடினார்கள்; பாடிக் கொண்டே ஓடினார்கள்.

அவர்களடன் சேர்ந்து ஓடியவாறே வள்ளியப்பா, அதே பாடலை மேலும் சிலவரிகள் சேர்த்துப் பாடினான்:

> காணாத காடு!
> கண்டுவிட்டால் ஓடு!
> ஒளிய இடம் தேடு!
> ஏழைகள் படுவதோ அரும்பாடு!
> டிக்கெட்டு விலையோ பெரும்போடு!

நண்பர்கள் அந்தப் பாடலைத் தாமும் உரக்கப் பாடினார்கள்! பாடிக்கொண்டே ஓடினார்கள்! ஐந்து வரியில் பாடலை முடித்துவிட்டான், வள்ளியப்பா! ஆனால் நண்பர்களோ அந்த ஐந்து வரிப் பாடலை எவரும் 'ஒன்ஸ்மோர்' என்று கூறி, மீண்டும் பாடுமாறு வேண்டாமலே பாடினார்கள்! பாடிக் கொண்டே ஓடினார்கள்!

இந்தக் காணத காடு'தான் வள்ளியப்பா, பாடிய முதல்பாட்டு! முதல் பாட்டே மற்றவர்களுக்கு உற்சாகம் அளித்து, மீண்டும் மீண்டும் பாடச் செய்தது!

வள்ளியப்பாவின் உள்ளத்திலே பதுங்கியிருந்த கவியாற்றல் ஊற்றுக்கண் திறந்ததுபோலப் பீறிட்டு வெளிக்கிளம்பியது! அது அவர் வாழ்நாள் முழுதும் தொடர்ந்தது! தமிழ்க் குழந்தைகள் அனைவரும் - தமிழ் நாட்டுக்கு வெளியே இருக்கும் தமிழ்க் குழந்தைகள் - இந்தியாவுக்கு வெளியே, அயல்நாட்டில் இருக்கும் தமிழ்க் குழந்தைகள் - அனைவரும் அவர் பாடல் களைப் படித்து, பாடி, மனத்தில் அவற்றின் கருத்துகளைப் பதித்துக் கொண்டு பரவசப்பட்டார்கள்! பயனடைந்தார்கள்!

குழந்தைப் பருவத்துக் கவிஞராக மலர்ந்து, குழந்தை களுக்கே பாடிக் 'குழந்தைக் கவிஞர்' என்று தமிழுலகமே போற்ற வளர்ந்து, அவர் வழங்கிய பாடல்களை - அவற்றின் சிறப்புகளை இனிக் காண்போம்.

முதல் நூல்

வள்ளியப்பா சென்னையில் குடியேறி வாழ்ந்தபோது, அவருடைய ஊர்க்காரரும் உற்ற நண்பருமான பழனியப்பா

அவர்கள் அவர் வீட்டுக்கு அவ்வப்போது வருவார். அப்போதுதான் வள்ளியப்பா சில குழந்தைப் பாடல்களை எழுதியிருந்தார். அவற்றைப் படித்துப் பார்த்த பழனியப்பா ''இன்னும் சில பாடல்கள் எழுது. புத்தகமாக வெளியிட்டு விடுவோம்'' என்று கூறினார். அந்த உற்சாக வார்த்தைகளை ஊன்று கோலாகக் கொண்டு மேலும் சில பாடல்கள் எழுதினார். அவற்றை நூலாக வெளியிட பழனியப்பா முன்வந்தபோது, உடனே அவரிடம் அவற்றைத் தரவில்லை. அவருக்கு நன்கு அறிமுகமான கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் ஐயன் பெருமாள் கோனாரிடம் கொடுத்து, அவர் அறிவுரை பெற்று, அவர் கூறிய திருத்தங்களைச் செய்து, பிறகே நூலாக வெளியிட இசைவு தந்தார்.

நூலின் பெயர்: மலரும் உள்ளம்

இந்தப் பெயர் இன்று ஊரறிந்தது; உலகறிந்தது; வள்ளியப்பா என்று சொன்னாலும், குழந்தைப் பாடல் பற்றிப் பேசினாலும் மலரும் உள்ளமே முதலில் நினைவில் தோன்றும். குழந்தைப் பாடல் தொகுதிக்கு மிகப் பொருத்தமாக அமைந்த இந்தப் பெயரை - 'மலரும் உள்ளம்' என்னும் தலைப்பைத் தந்தவர், வள்ளியப்பாவின் நண்பரான முத்தையா என்று வள்ளியப்பா நன்றியுடன் குறிப்பிட்டுள்ளார்.

'மலரும் உள்ளம்' என்னும் வள்ளியப்பாவின் முதல் நூல் - முதல் கவிதைத் தொகுதி 1944இல் வெளிவந்தது. இந்நூலில் 23 பாடல்கள் இருந்தன. பாடல்கள் யாவும் பத்திரிகையில் வெளிவராதவை. படங்கள் இல்லாமல் பாலர் நூல் இல்லை; இருக்கக் கூடாது. மலரும் உள்ளம் நூலில் 25 படங்கள் இருந்தன. விலை: 12 அணா. (75 காசு).

முப்பெரும் தொகுதிகள்

பத்தாண்டுகள் கழித்து 1954 இல் வள்ளியப்பா மேலும் பல பாடல்கள் சேர்த்து மொத்தம் 135 பாடல்கள் கொண்ட பெரிய தொகுதியை வெளியிட்டார். அதற்கும் 'மலரும் உள்ளம்' என்றே பெயரியிட்டார். 1961 ஆம் ஆண்டு, 118 புதிய பாடல்கள்

கொண்ட மற்றொரு தொகுதியை, 'மலரும் உள்ளம்' -இரண்டாம் தொகுதி' என்னும் பெயரில் வெளியிட்டார். 1986 இல் மேலும் 110 பாடல்கள் கொண்ட தொகுதியை வெளியிட்ட போது, மலரும் உள்ளம் மூன்றாம் தொகுதி என்று பெயரிடாமல் 'சிரிக்கும் பூக்கள்' என்னும் பெயரில் வெளியிட்டார். இம்மூன்று நூல்களுமே தமிழ் குழந்தைப் பாடலின் மூன்று சிகரங்கள்- பிறர் எளிதில் எட்ட முடியாத எவரெஸ்ட் போன்ற சிகரங்களாகும்.

கவிஞர் தொடர்ந்து, விடுகதைப்பாடல்கள் என்னும் நூலையும் வெளியிட்டுள்ளார். மலரும் உள்ளம் முதல் தொகுதியின் சில பாடல்களை 'பாப்பாவுக்குப் பாட்டு', என்னும் பெயரிலும், இரண்டாம் தொகுதியின் சில பாடல்க்ளைச் 'சின்னஞ்சிறு பாடல்கள்' என்னும் பெயரிலும் சிறுசிறு நூல்களாக வெளியிட்டார். இவற்றைப் போலவே 'குழந்தைக் கவிஞரின் கதைப்பாடல்கள்' (இரு தொகுதிகள்), சுதந்திரம் பிறந்த கதை ஆகியவையும் மேலே சொன்ன பெரிய தொகுதிகளில் வெளிவந்த பாடல்கள் கொண்டவை.

இவற்றைத் தவிர 'ஈசாப் கதைப் பாடல்கள்', 'வெளிநாட்டு விடுகதைகள்', 'நேரு தந்த பொம்மை' -ஆகிய பாடல் நூல்களும், 'பாட்டிலே காந்தி கதை' என்னும் சிறுவர் காப்பியமும் வெளிவந்துள்ளன.

'மலரும் உள்ளம்' முதல் தொகுதி, தமிழ்ச் சிறுவர் இலக்கியத்தின் தனிப்பெருமை என்று சொல்ல வேண்டும். 135 பாடல்களும், 240 பக்கங்களும், பக்கத்துக்குப் பக்கம் படங்களும் கொண்ட அருமையான சிறுவர் பாடல் நூல். இப்படி ஒரு நூல், இதற்கு முன் வெளிவந்ததில்லை.

இந்த நூலுக்கு, வள்ளியப்பா பெரிதும் மதித்துப் போற்றி வந்த- 'தோட்டத்தில் மேயுது கன்றுக்குட்டி' என்பது போன்ற அருமையான குழந்தைப் பாடல்கள் தந்த தமது 'மலரும் மாலையும்' நூலையே, 'செந்தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர்க்கு' உரிமையாக்கிய கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையிடம் வாழ்த்துப் பெற விரும்பி நேரில் சென்றார். கவிமணி நூல் முழுவதையும் படித்து மகிழ்ந்தார்-பின்பு,

''பாலும் பழமும் ஏனம்மா?
பசியே இல்லை'' எனக் கூறிச்
சீலச்சிறுவர் சிறுமியர்கள்
சிறந்த 'மலரும் உள்ளம்' இதைக்
காலை மாலை என்றென்றும்
கற்று மகிழச் செயும் இந்த்ர
ஜாலக் கவிஞன் வள்ளியப்பன்
தழைத்து வாழ்க, வாழ்கவே!''

என்னும் பாடல் உட்பட ஐந்து வாழ்த்துப் பாக்கள் வழங்கிச் சிறப்பித்தார்.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை,

''மலரும் உள்ளம்' என்னும் இந்நூல் ஒரு கவிதைப் பூஞ்சோலை. அங்கே அரும்பு மலர்ந்து விரியும்; அருணன் கதிரைச் சொரியும்; சின்னஞ்சிறு குருவி பறக்கும்; பென்னம் பெரிய யானை நடக்கும்; பத்துமாதக் குழந்தை தத்தித்தவழும், பஞ்சுக்கால் பூனை பையச் சென்று பாலைக் குடிக்கும்; புத்தர் அறுமுரைப்பார்; பாரதியார் பாட்டிசைப்பார்; கண்ணனும் காந்தியும் காட்சி தருவர்'' என்று அந்நூலின் சிறப்பை விளக்கினார்.

'மலரும் உள்ளம்' இரண்டாம் தொகுதிக்கு டாக்டர் மு. வரதராசனார் அணிந்துரை வழங்கி, 'நல்ல கற்பனையும் சிறந்த உணர்ச்சிகளும், உயர்ந்த நோக்கங்களும் குழந்தைகளின் மனத்தில் பதியுமாறு பல பாடல்களைத் தொகுத்துத் தந்துள்ளார்' என்று பாராட்டியுள்ளார்.

'சிரிக்கும் பூக்கள்' நூலுக்கு சிலம்பொலி செல்லப்பன் அளித்த அணிந்துரையில் 'படிக்கப் படிக்க நெஞ்சில் சுவையேற்றும் பாத்தொகுப்பே இந்நூல்' என்று போற்றுகிறார்.

'குழந்தைக் கவிஞர்' என்னும் பெயரை - பலருக்கும் பொதுவான ஒரு பெயரை வள்ளியப்பாவுக்கே உரிமை 'பாக்கியவை இந்த முத்தான மூன்று பாலர் பாடல் தொகுதிகளே!

ஒரு குழந்தைப் பாடல் எப்படி இருக்க வேண்டும்?

எளிமை, இனிமை, தெளிவு ஆகிய மூன்று பண்புகள் படைத்ததாய்த் திகழ வேண்டும்.

சொற்களில் எளிமை! படிக்கும்போது இனிமை! பொருள் உணரும் போது தெளிவு!

இம்மூன்றும் வள்ளியப்பாவின் பாடல்களில் வாழ்கின்றன. அவர் இயற்றிய எந்தப் பாடலுக்கும் 'அருஞ்சொற்பொருள்' அளிக்க வேண்டியதில்லை.

பாடலின் சொற்கள் பெரும்பாலும் சீர் சீராக வரும். எல்லாச் சீர்களும் ஈரசை, மூவசையாகவே இருக்கும். நாலசைச் சொற்களைக் காண்பது அரிது. பாடலின் மொத்தவரிகள் பெரும்பாலும் பதினாறு இருபது அடிகளாக இருக்கும். இந்த வரம்பை மீறுவன கதைப் பாடல்களாக அமையும். பாடலின் சீர்கள் பெரும்பாலும் முழுச் சொற்களாக அமைந்திருக்கும்.

'கூறியன கூறல் குற்றம்' என்பது பெரியோர் கவிதைக்கான விதி. பாலர் பாடலில் வந்த சொற்கள் மீண்டும் மீண்டும் வரலாம்! வரும்! வருவது சிறப்பு என்றும் சொல்லலாம்.

மலரும் உள்ளம் I

மலரும் உள்ளம் - முதல் தொகுதியின் முதல் பாடல் 'கண்ணன்'.

'கண்ணன் எங்கள் கண்ணனாம்!' என்று சொன்னாலே, இன்றைய பெரியோர்கூட, 'கார்மேக வண்ணனாம்!' என்னும் அடுத்த வரியை மிக இயல்பாக-சிரமப்பட்டுச் சிந்திக்காமல் கூறிவிடுவர்கள். 'லட்டும் தட்டும்' என்னும் பாடலைப் பெரும்பாலான குழந்தைகள் அபிநயத்தோடு - செயல் விளக்கத்தோடு சொல்லிக் கொண்டே பாடுவதைப் பார்க்கலாம்.

வட்டமான தட்டு
தட்டு நிறைய லட்டு
லட்டு மொத்தம் எட்டு

எட்டில் பாதி விட்டு
எடுத்தான் மீதி கிட்டு

மீதம் உள்ள லட்டு
முழுதும் தங்கை பட்டு
போட்டாள் வாயில் பிட்டு

கிட்டு நான்கு லட்டு;
பட்டு நான்கு லட்டு;
மொத்தம் தீர்ந்த தெட்டு.
மீதம் காலித் தட்டு!

இந்தப் பாடலில், 'எனக்கு அதிகம் வேண்டும்' என்னும் ஆசை-பேராசை கொள்ளாமல் இருப்பதை, இருவரும் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளும் சிறப்பைப் பார்க்கிறோம். படிக்கும் சிறுவர் மனத்தில், 'எனக்கு அதிகம் வேண்டும்' என்னும் ஆசை ஏற்படாமல் காக்கும் கருத்தை ஓசைபடாமல் தன்னுள் ஒளித்து வைத்துள்ளது, இந்த ஓசைப் பாடல்.

குழந்தைகள் பறவை, விலங்கு போன்ற உயிர்களை நேசிக்கும்:

அணிலே அணிலே ஓடி வா.
அழகு அணிலே ஓடி வா.
கொய்யா மரம் ஏறி வா.
குண்டு பழம் கொண்டு வா.
பாதிப் பழம் உன்னிடம்!
பாதிப் பழம் என்னிடம்!
கூடிக் கூடி இருவரும்
கொறித்துக் கொறித்துத் தின்னலாம்!

இந்தப் பாடலிலும் அணிலுக்குப் பாதி, குழந்தைக்குப் பாதி என்னும் பகிர்ந்து உண்ணும் பண்பு, பாலில் இனிமை போலப் பதுங்கி யிருக்கிறது.

ஒரு சிறுவனுக்கு மோட்டார் வண்டி வாங்கித் தருகிறார்கள். அதனால் சிறுவனுக்கு அதிலே பெருமை! ஆனால் அவன் அதில் நண்பர்களை ஏற்றிச் செல்ல விரும்பி அழைக்கிறான்.

''சுப்பா நீயும் தோழர்களும்
சொகுசாய் ஏறிச் சென்றிடலாம்!''

மற்றவர்களை ஏற்றிக் கொள்ளும் சிறுவன், கார் தன்னுடையது என்பதால் தானே ஓட்டுவதாகச் சொல்கிறான். எவ்வளவு நேரம் இப்படியே காரில் சவாரி செய்வது? பள்ளிக்கூடம் செல்ல வேண்டாமா? அதையும் வள்ளியப்பா மிக நேர்த்தியாகப் பாடலில் சேர்த்துவிடுகிறார்:

நான்தான் காரை ஓட்டிடுவேன்.
நாலா பக்கமும் சுற்றிடலாம்.
'டாண், டாண்' பள்ளிக் கூடமணி
நம்மை அழைக்கச் சென்றிடலாம்!

மாணவரின் முக்கியக் கடமை, கற்பது! படித்து மேலே-மேலே தேர்ச்சி பெறுவது, இதன் அவசியத்தை கவிஞர் தம் கூற்றாகக் கூறாமல், மாணவனே உணர்ந்து உரைப்பது போலப் பாடியிருப்பது, அறிந்து மகிழத்தக்கது.

உழைப்பு முக்கியம்! படிப்புக்கும் இது முக்கியம்! வேறு பயன்களை அடையவும்- அனுபவிக்கவும் முக்கியம்! இதை விளக்கும் 'பாடும் பலனும்' என்னும் கவிஞரின் சிறு பாடல் சிறார்களை உயர்த்தும் சிறப்புப் பாடலாகும்.

தோலை உரித்த பிறகுதான்
சுளையைத் தின்று பார்க்கலாம்!

ஓட்டை உடைத்த பிறகுதான்
உள்ளே பருப்பைக் காணலாம்.

உலையில் அரிசி வெந்துதான்
உண்டு பசியைப் போக்கலாம்!

துணியைத் தைத்த பிறகுதான்
சொக்காய் போட்டு மகிழலாம்.

எழுத்தைக் கற்ற பிறகுதான்
ஏட்டைப் படித்து அறியலாம்.

பாடு பட்ட பிறகுதான்
பலனைக் கண்டு மகிழலாம்!

வள்ளியப்பாவின் மிகச்சிறந்த பாடல்களில் ஒன்றே, இந்த 'பாடும் பலனும்' பாடல். இந்தப் பாடலில் படுகிற பாடும், பெறுகிற பலனுமாக அவர் எடுத்துக் காட்டும் உண்மைகள், நாம் உணர்ந்து உயரச் செய்பவை.

நன்மை செய்தால் நன்மை கிடைக்கும்!
தீமை செய்தால் தீமை கிடைக்கும்!

இது ஆன்றோர்கள் அன்று முதல் இன்றுவரை கூறிவரும் அழியாத பேருண்மை! இதைப் பாலர்கள் மனத்தில் எப்படிப் பதியச் செய்வது? வள்ளியப்பாவும் இதைச் சிந்தித்துப் பார்த்துள்ளார். பின்னர் சிறுவர் எளிதில் அறியும், தெளிவாக உணரும் ஓர் எடுத்துக்காட்டைக் கண்டுபிடித்து, அதன் மூலம் எல்லாக் காலத்திலும் எல்லார்க்கும் தெரிய வேண்டிய பேருண்மையைக் கூறுகிறார். தான் வற்புறுத்த வேண்டிய உண்மையை எளிதில் விளக்கும் - தெளிவாக விளக்கும் ஒரு பொருளாகக் 'கண்ணாடி'யை- முகம் பார்க்கும் கண்ணாடியை எடுத்துக் கொள்கிறார். இப்போது உவமையான கண்ணாடி மூலம் உண்மையான - நன்மைக்கு நன்மை, தீமைக்குத் தீமை கிடைக்கும் என்னும் அழியாத உண்மையை-அனைவரும் அறிய வேண்டிய உண்மையை, சிறுவர் உள்ளம் ஏற்கும் வகையில் கூறுகிறார். பாடலின் தலைப்பு: கண்ணாடி.

மெத்தப் பெரிய கண்ணாடி
வீட்டில் என்னிடம் இருக்கிறது.
நித்தம் நித்தம் அதன் முன்னால்
நின்றே அழகு பார்த்திடுவேன்.

அதனைப் பார்த்துச் சிரித்தபடி
அப்படி இப்படி ஆடிடுவேன்.

அதனில் தெரியும் உருவமுமே
அதுபோல் ஆடிச் சிரித்திடுமே!

'கொன்றிடு வேன்' என விரலைநான்
கோபமாய் எதிரே நீட்டிடுவேன்.
'நானும் அப்படித் தான்'என்றே
நன்றாய்த் திருப்பிச் செய்திடுமே!
நன்மை செய்தால் நன்மைதான்,
நம்மை நாடி வந்திடுமே!

தீமை செய்தால் தீமைதான்
திரும்பி வந்து சேர்ந்திடுமே!

நூலைப் படிக்கும் பாலர்களின் மூளைக்கு வேலை தருகிற பாடலையும் வள்ளியப்பா வழங்கி, சிறுவர்களிடம் வேலை வாங்குகிறார். 'மொத்தம் எத்தனை?' என்று ஒரு பாடல்.

'பட்டணம் செல்ல ஒரு ராஜா
பயணம் வைத்தார்'

அவருடன் சென்றவர் ஒன்பது மனைவியர்; ஒவ்வொரு மனைவி யுடனும் ஒன்பது குழந்தைகள்; ஒவ்வொரு குழந்தையுடனும் ஒன்பது நாய்கள்; ஒவ்வொரு நாயுடனும் ஒன்பது குட்டிகள், சென்றனவாம்.

பட்டணம் செல்ல ராஜனுடன்
பயணம் வைத்தவர் மொத்தத்தில்
எத்தனை என்று சரியாக
என்னிடம் சொல்வாய் பட்டென்று?

கவிஞர் இப்படிக் கேட்கிறார். இந்தக் கணினி காலத்துக் குழந்தைகள் உடனே சொல்லுமா? மனக்கணக்குக் காலத்துக் குழந்தைகள் உடனே சொல்லுமா?

'கணக்கதிகாரம்' என்னும் ஒரு பழைய நூலில் அதன் ஆசிரியர் காரிநாயனார் இப்படிப் பலப்பல கணக்குகளைக் கவிதையில் கூறுகிறார். நூலின் இறுதியில் விடைகள் கிடைக்கும். வள்ளியப்பா பிள்ளைகளை இப்படி அலைய விடாமல்,

'தெரிந்திட வில்லை யானோலோ,
திருப்பிடு இதனைத் தலைகீழாய்!'

என்று கூறுகிறார்.

குழந்தைகள் நூலைத் தலைகீழாகப் பிடித்தால் அங்கே, '*7380*' என்னும் எண்ணைப் பார்க்கலாம்! இப்படிப்பட்ட பாடல்கள் பாலர்களை ஈர்க்கும் என்பதில் ஐயம் இல்லை. ⋆

மலரும் உள்ளம் II

குழந்தைக் கவிஞரின் மலரும் உள்ளம் முதல் தொகுதி வெளிவந்து மாபெரும் வெற்றிப் பெற்றது. வெற்றி, பாராட்டில் மட்டுமன்று; விற்பனையிலும் வெற்றி பெற்றது. என்றாலும் ஏறத்தாழப் பத்தாண்டுகளுக்குப் பிறகு 1961-இல் மலரும் உள்ளம் - இரண்டாம் தொகுதியை வெளியிட்டார். இந்தத் தொகுதியும் சிறந்த வரவேற்பு பெற்றது; விற்பனையிலும் வெற்றி பெற்றது.

முதல் தொகுதியின் முதல் பாடல், கண்ணன் பாடல். இரண்டாம் தொகுதி 'தொந்திக் கணபதி' பாடலுடன் தொடங்கியது. இதன் இரண்டாம் பாடல் 'மாம்பழம்' எல்லோரையும் கவர்ந்தது. திரைப்படத்துறையினரும் இதன் வரிகளை எடுத்துக் கொண்டுள்ளனர்.

⋆ இப்பகுதியில் இதுவரை இடம் பெற்ற பாடல்கள் யாவும் மலரும் உள்ளம் - முதல் தொகுதியில் உள்ளவை.

மாம்பழமாம் மாம்பழம்
மல்கோவா மாம்பழம்
சேலத்து மாம்பழம்
தித்திக்கும் மாம்பழம்
அழகான மாம்பழம்
அல்வா போல் மாம்பழம்
தங்கநிற மாம்பழம்
உங்களுக்கும் வேண்டுமா?
இங்கு ஓடி வாருங்கள்;
பங்கு போட்டுத் தின்னலாம்!

மல்கோவா மாம்பழம் போலவே சுவையான பாடல் இது. முதல் தொகுதியின் 'லட்டும் தட்டும்' பாடல் போல இனிப்பானது. லட்டுப் பாட்டு 'எனக்கு, எனக்கு', அல்லது 'உன்னைக் காட்டிலும் எனக்கு அதிகம் வேண்டும்' என்னும் ஆசையில்லாத பாட்டு. இந்த 'மாம்பழம்' பாட்டும் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பரந்த மனப் பான்மையைப் பாலர் மனத்தில் பதிய வைக்கிறது. 'இங்கு ஓடி வாருங்கள் - பங்கு போட்டுத் தின்னலாம்' என்று பாலர்களே தம் தோழர்களை அழைப்பது, கொண்டாட வேண்டிய குணம்.

மரம் ஏறலாம்

மூன்றாம் பாடல்: 'மரம் ஏறலாம்'

வள்ளியப்பா வழங்கிய குழந்தைப் பாடல்கள் அனைத்திலும் சிறந்த பாடல் எது என்னும் கேள்வி எழுந்தால், இந்த மரம் ஏறலாம் பாடல் என்று கூறலாம். பாடலைப் பார்ப்போம்:

மாமரத்தில் ஏறலாம்.
மாங்காயைப் பறிக்கலாம்.
தென்னைமரத்தில் ஏறலாம்.
தேங்காயைப் பறிக்கலாம்.
புளிய மரத்தில் ஏறலாம்
புளியங்காயைப் பறிக்கலாம்.

நெல்லிமரத்தில் ஏறலாம்.
நெல்லிக் காயைப் பறிக்கலாம்.

-இதுவரை பாடலைக் கூறி, குழந்தைகளையும் கூடவே பாடச் செய்துவரும் நபர், அடுத்து,

''வாழை மரத்தில் ஏறலாம்...''

என்று சொல்லி நிறுத்தினால், குழந்தைகள் அனைவரும் ஒரே குரலில் ''வாழைக் காய் பறிக்கலாம்'' என்று உரக்கக் கூறுவார்கள்; உற்சாகத்தோடு கூறுவார்கள்.

உடனே பாடலைச் சொல்லி வருபவர், ''இல்லை! அப்படி இல்லை!'' என்று மறுத்துக் கூற, ''பின் எப்படி?'' என்று எதிர்பார்ப்பதுபோல குழந்தைகள் அவர் முகத்தைப் பார்க்க, அவர், ''வாழை மரத்தில் ஏறினால் - வழுக்கி வழுக்கி விழுகலாம்!'' என்று முடிக்க, குழந்தைகள் கூட்டமாகச் சிரித்துச் சிரித்து மகிழ்வார்கள். இது மிகப் பல குழந்தைகள் கூட்டத்தில் நிகழ்வதை இந்நூலாசிரியர் பார்த்து மகிழ்ந்துள்ளார்.

'மரம் ஏறலாம்', வள்ளியப்பாவின் பிள்ளைப் பாடல்களில் அவர்கள் உள்ளம் கவர்ந்த - கவருகின்ற உவகைப் பாடல்; உன்னத பாடல்!

ஓசை தரும் உவகை

ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பம். அதனால் குழந்தைகளுக்குக் கதை எழுதினாலும், சொன்னாலும்- பாடல் எழுதினாலும், சொன்னாலும்- பாடலின் பொருளாய் விளங்கும் உயிர்களின் அல்லது வண்டிகளின் ஓசை - ஒலிகளைச் சேர்த்தே சொல்வார்கள். வள்ளியப்பா இதற்கே முதலிடம் தந்து 'வண்டி வருகுது' என்றொரு பாடல் வழங்கியுள்ளார்.

கடகடா கடகடா வண்டி வருகுது!
காளை மாடு இரண்டு பூட்டி வண்டி வருகிறது!

டக்டக் டக்டக் வண்டி வருகுது
தாவித் தாவி ஓடும் குதிரை வண்டி வருகுது

-இப்படிப் போகிறது பாட்டு. இது மழலையரை மகிழ்விக்கும் - மற்றவரையும் மகிழ்விக்கும் பாட்டு.

அப்பா தந்த புத்தகம்

குழந்தைகள் எதைக் கேட்டாலும் வாங்கித் தருவதற்குப் பெற்றோர்கள் தயங்குவதில்லை. விலையுயர்ந்த பொம்மை, இனிப்பான பண்டம் - என்று அவர்கள் கேட்பதை வாங்கித் தருவார்கள். அவர்கள் கேட்காமலே வாங்கித் தரவேண்டியது ஒன்று உண்டு. அது புத்தகம்! அறிவை வளக்கும் புத்தகம்! அறியாமையை அழிக்கும் புத்தகம்! இன்று புத்தகக் காட்சிகள் மாபெரும் வெற்றி பெறுகின்றன. இது நல்ல செய்தி. ஆனால் அங்கே செல்பவர்கள் தமக்கு நூல்கள் வாங்குவது போலத் தம் குழந்தைகளுக்கும் புத்தகம் வாங்கித் தருவதில்லை. அதுவும் தமிழ்ப் புத்தகங்கள் வாங்கித்தருவதில்லை. இது இன்றும் நின்று நிலவும் குறை!

குழந்தைக் கவிஞர் வள்ளியப்பா இதை அறிந்தவர். அதனால் அப்பா தம் குழந்தைக்குப் புத்தகம் வாங்கித் தந்ததாகவும், குழந்தை அதைப் பெற்று, பெரு மகிழ்ச்சியடைந்து, புத்தகத்தின் சிறப்பைப் பேசுவதாகவும் ஒரு பாடல் - 'அப்பா தந்த புத்தகம்' - என்னும் தலைப்புடைய பாடல் தந்துள்ளார்.

அப்பா வாங்கித் தந்தது
அருமையான புத்தகம்!
அதில் இருக்கும் படங்களோ
ஆஹா! மிகவும் அற்புதம்!

பாலர் நூல்களுக்குப் படங்கள் மிகவும் அவசியம் என்பதை இந்தப் பாடல் அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறது.

காசும் ஆசையும்

'உனக்கு ஆயிரம் ரூபாய் கிடைத்தால் என்ன செய்வாய்? லட்சம் ரூபாய் கிடைத்தால் என்ன செய்வாய்?' - என்று சிறுவர்களிடம் கேட்பதுண்டு. அவர்கள் சொல்லும் பதிலில் அவர்தம் பண்பு வெளிப்படும் என்பது உண்மை.

குழந்தைக் கவிஞர் ஒரு சிறுவனிடம் இப்படிக் கேட்காமல், அவனே அப்படி ஒரு நிலை வந்தால், 'என்ன செய்வேன்' என்று சொல்வது போல 'நானே ராஜா' என்று ஒரு பாடல் இயற்றியுள்ளார். அவர் காட்டும் சிறுவன் என்ன செய்வான் - என்ன செய்ய விரும்புகிறான் என்பது சுவையானது. அவனது மனத்தையும் குணத்தையும் விளக்குவது.

ஆயிரம் தங்கக் காசிருந்தால்
ஆனை ஒன்று வாங்கிடுவேன்
ஆனை ஒன்று வாங்கிடுவேன்
அதன்மேல் ஏறி அமர்ந்திடுவேன்
'அருமை நண்பன் முத்துவையும்
அருகில் ஏற்றிச் சென்றிடுவேன்.

என்றெல்லாம் கூறி, ''ஆனை வாங்கப் பணம் தேவை? ஆசை உண்டு காசில்லை!'' என்று பாடலை முடிக்கிறார், கவிஞர்.

இப்பாடலில் 'ஆயிரம் ரூபாய் இருந்தால்' என்று கூறவில்லை. அவர் எழுதிய காலத்து ஆயிரம் ரூபாய், இன்றும் ஆயிரம் ரூபாய்தான். ஆனால் 'ஆயிரம் தங்கக் காசு இருந்தால்' என்று கூறுவது', 'ஆயிரம் சவரன் இருந்தால்' என்று கூறுவதாகும். தங்கத்தின் மதிப்புக் கூடும்- ரூபாயின் மதிப்புக் குறையும் என்று கவிஞர் உணர்ந்தே இப்படி உரைத்திருப்பாரோ-என்று நினைக்கச் செய்கிறது.

முதல் எழுத்துக்கு முதன்மை

காக்கை 'கா...கா' என்கிறது! குயில் 'குகூ குகூ' என்கிறது. கிளி 'கிகீ, கிகீ', என்கிறது. இப்படிச் சொல்வது ஏன் ஏன்று கேள்வி எழுப்பி,

''முழுப் பெயரையும் சொல்லவே
முடியவில்லை. ஆகையால்,
முதல் எழுத்தை மட்டுமே
முச்சுப் பிடித்துக் கூறுமே!''

என்று விடையளிக்கிறார் கவிஞர். இது நல்ல கற்பனை! ஏற்கத்தக்க கற்பனை!

உவமை புதிது

இதைப் போலவே 'பிறைச் சந்திரன்' பாடலில், அதன் பிறைவடிவத்துக்குப் புதிய உவமைகளைச் சொல்வது சிறப்பு.

பிறை நிலா எப்படித் தோன்றுகிறது?

நறுக்கி எறிந்த நகத்தைப் போலே, கொம்பைப் போலே, வில்லைப் போலத் தோன்றுவதாகச் சிறுவர் நினைப்பது புதுமை.

நறுக்கி எறிந்த நகத்தைப் போலே
இருக்கும் நிலாவே-நீ
நகர்ந்து நகர்ந்து போவ தெங்கே?
சொல்லு நிலாவே.
கொம்பைப் போலக் கூர்மையாக
இருக்கும் நிலாவே-என்னைக்
குத்திக் கீழே தள்ளுவாயோ?
சொல்லு நிலாவே!

பாடல் பிறந்த கதை

நாள்களின் பெயர்களை-மாதங்களின் பெயர்களைக் குழந்தைகள் நினைவு கொள்ளுமாறு பாடல்கள் எழுதுவது கவிஞர்களின் வழக்கம். வள்ளியப்பாவும் இப்படி ஒரு பாடல் வழங்குகிறார். அதன் தலைப்பு: 'ஞாயிற்றுக் கிழமை பிறந்த பிள்ளை'. நூலின் முன்னுரையில் இந்தப் பாடல் எப்படிப் பிறந்தது என்பதை விளக்கியுள்ளார்.

ஒரு ஞாயிற்றுக்கிழமையில் கவிஞர் வீட்டில் கூடிய குழந்தைகளில் ஒரு சிறுவன் ''இன்று என் பிறந்த நாள். அதனால்

தான் புதுச்சட்டை அணிந்திருக்கிறேன்'' என்று சொல்ல, அன்று ஞாயிற்றுக் கிழமை, அதனால் 'நீ ஞாயிற்றுக் கிழமை பிறந்தவன்' என்று ஒரு சிறுமி அவனிடம் கூறுகிறாள். அதைக் கேட்டுக்கொண்டிருந்த கவிஞர், ''ஞாயிற்றுக் கிழமை பிறந்த பிள்ளை எப்படி யிருக்கும் தெரியுமா?'' என்று கேட்டு விட்டு,

ஞாயிற்றுக் கிழமை பிறந்த பிள்ளை
நன்றாய்ப் பாடம் படித்திடுமாம்.

என்று கூறினார்.

உடனே மற்றக் கிழமைகளில் பிறந்த குழந்தைகள் 'நாங்கள் எப்படி யிருப்போம்?' என்று கேட்க, கவிஞர் ஒவ்வொரு கிழமையில் பிறந்த பிள்ளைக்கும் ஒரு சிறப்புச் சொல்கிறார்.

ஞாயிற்றுக் கிழமை பிறந்த பிள்ளை
நன்றாய்ப் பாடம் படித்திடுமாம்
திங்கட் கிழமை பிறந்த பிள்ளை
தினமும் உண்மை பேசிடுமாம்
செய்வாய்க் கிழமை பிறந்த பிள்ளை
செய்வதை ஒழுங்காய்ச் செய்திடுமாம்.

இப்படி ஏழு நாளுக்கும் ஏழு சிறப்புச் சொல்ல, ஒரு அருமையான பாடல் பிறந்து விட்டது. மலரும் உள்ளம்-இரண்டாம் தொகுதியின் 'ஆசிரியர் முன்னுரை'யில் குழந்தைக் கவிஞர் இந்த நிகழ்ச்சியைக் கூறுகிறார். தொடர்ந்து,

''இந்த நிகழ்ச்சியை நான் கூறமுற்பட்டதற்குக் காரணம் வேறொன்றுமல்ல; நான் எழுதியுள்ள பல குழந்தைப் பாடல்கள் குழந்தைகளிடமிருந்தே உருவாயின, என்பதை எடுத்துக் காட்டவேதான்.

''குழந்தைகளுடன் நெருங்கிப் பழகும் போது நமக்கும் குழந்தை உள்ளம் உண்டாகிறது. நாமும் குழந்தையாகி விடுகிறோம். அப்போது நம் உள்ளத்தில் தோன்றும் பாடலே குழந்தைப் பாடலாக அமைகிறது'' என்று நான் நினைக்கிறேன்.

குழந்தைகளுக்குப் பாடல் எழுதும் மற்றக் கவிஞர்களுடைய அனுபவமும் இப்படித்தான் இருக்கும் எனக் கருதுகிறேன்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஒரு பாடலுக்கு இங்கே தந்த அனுபவம் போல, பல பாடல்களுக்கு- பலப்பல பாடல்களுக்குப் பல சுவையான அனுபவங்கள் இருந்திருக்கின்றன.

இறகுப் பாடல்

ஆற்றங்கரையில் ஓர் அழகான இறகைக் கண்டெடுக்கும் சிறுவன் ஒருவன் அதன் அழகை - சிறப்பைச் சொல்லி,

''எந்தப் பறவை போட்ட தோ?
எங்கு தேடி அலையுதோ?
சொந்தக் காரப் பறவையே
வந்து கேட்டால் தருகிறேன்''

''பார்க்கப் பார்க்க அழகுதான்
பளபளக்கும் இறகுதான்''

என்று முடிக்கிறான்.

இந்த இறகுப் பாடல், குழந்தை இலக்கியத்தில் புதுமைப் பாடலே.

சுதந்திரம் பிறந்த கதை

மலரும் உள்ளம்-இரண்டாம் தொகுதியின் இறுதியில் 'சுதந்திரம் பிறந்த கதை' என்னும் நீண்ட பாடல்-16 பக்க அளவில் இடம் பெற்றுள்ளது.

வெள்ளைக்காரர் நம் நாட்டுக்கு வந்ததில் தொடங்கி, சுதந்திரப் போரில் ஈடுபட்டு, இன்னுயிர் தந்த தியாகிகளின் சிறப்பைச் சொல்லி, முடிவில் ஆங்கிலேயர்,

''இருநூறு ஆண்டுகள் ஆண்டுவிட்டோம்
இனியும் முடியாது''என உணர்ந்தே
அருமைத் தலைவர்கள் கைகளிலே
ஆட்சிப் பொறுப்பினை ஒப்படைத்தார்
அன்னை விலங்கு முறிந்ததே!
அடிமை வாழ்வும் அகன்றதே!
என்றே எண்ணி நாமுமே
இன்று பெருமை அடைகிறோம்.

என்று சுதந்திரம் வந்த வகையை விளக்கி, ''சுதந்திரத்தை வாங்கித் தந்த தலைவர், வாழ்கவே! துணைவராக நின்றுழைத்த தொண்டர் வாழ்கவே'' என்று முடிக்கிறார், கவிஞர்.

இந்தப் பகுதி மட்டும் தனிநூலாக வெளிவந்து மேலும் புகழ் பெற்றது.

சிரிக்கும் பூக்கள்

'மலரும் உள்ளம்' நூலின் மூன்றாம் பகுதி என்று சொல்லத் தக்கது இந்தச் 'சிரிக்கும் பூக்கள்' நூல்.இரண்டாம் தொகுதிக்கும் இதற்கும் இடைவெளி அதிகம். இந்நூல் இரண்டாம் தொகுதி வெளிவந்து ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின், 1986 இல் வெளிவந்தது. நூலின் அமைப்பு, பாடல்களும் படங்களும் இடம் பெற்ற முறை, பக்கங்க்ளின் அமைப்பு ஆகிய அனைத்தும் மாறியிருந்தன. பொருளடக்கத்திலேயே பாடல்களின் வரிசை எண் வழங்கியிருந்தனர். மொத்தம் 110 பாடல்கள்!

இந்நூலுக்கு சிலம்பொலி செல்லப்பன் மிக விரிவாக எழுதிய 16 பக்க அணிந்துரையுடன் 'ஆந்திரப் பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் கே. ஆர். சீனிவாச ஐயங்கார் எட்டுப் பக்கத்தில் ஆங்கிலத்தில் ஒரு முன்னுரை வழங்கியிருந்தார்! அதில் நூலின் சில பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வழங்கியிருந்தார். வழக்கம் போல் ஆசிரியர் முன்னுரை பத்துப் பக்க அளவில் எழுதியிருந்தார்.

கைத்திறன்-புதிது

மலரும் உள்ளம் இரண்டாம் தொகுதியில் ஒரு பாடல் உருவான நிகழ்ச்சியை விவரித்தது போல, இந்தத் தொகுதியில் உள்ள 'ஆண்டவன் தந்த கை' என்னும் பாடல் பிறந்த கதையைக் கூறியிருந்தார் கவிஞர்.

கவிஞரின் பேரன் அரவிந்தன் யாரேனும் ஊட்டி விட்டால்தான் சாப்பிடுவான். அதைக் கண்ட கவிஞர் ''ஆண்டவன் நமக்குக் கை கொடுத்திருக்கிறாரே, எதுக்காக?'' என்று கேட்டார். பேரனும் ''எதுக்காக? ''என்று திருப்பிக் கேட்டான், உடனே கவிஞர்

''ஆண்டவன் கொடுத்த கை எதற்கு?
அள்ளிச் சோறு தின்பதற்கு''

என்று பாட்டிலே பதிலளித்தார். அரவிந்தன் அதன்பின் தானே உண்டு முடித்தான்.

ஒரு முறை வெளியே புறப்பட்ட கவிஞருடன் 'நானும் வருவேன்' என்று புறப்பட்டான் அரவிந்தன். ஆனால் அவனால் தொடர்ந்து நடக்க முடியாமல் நின்றான்.

'அப்போது கவிஞர்,

''ஆண்டவன் கொடுத்த கால் எதற்கு?''

என்று கேட்டார்.

பேரன்,

''ஆண்டவன் கொடுத்த கால் எதற்கு?

கால் எதற்கு?''

என்று இருமுறை கூறியபின், ''அரவிந்தன் ஜோராய் நடப்பதற்கு'' என்று கூறிவிட்டு அவனே ஜோராய் நடக்க ஆரம்பித்துவிட்டான்.

இந்த நிகழ்ச்சியின் விளைவாய் ''ஆண்டவன் கொடுத்த கை அள்ளிச் சோறு தின்பதற்கு மட்டும்தானா?'' என்று எண்ணிப்

பார்த்து, கைகளின் பயன்களைக் கூறும் சில வரிகளைச் சேர்த்து, ''ஆண்டவன் தந்த கை'' என்னும் தலைப்பில் வெளியிட்டார்.இந்தப் பாடல் 'சிரிக்கும் பூக்கள்' நூலில் உள்ளது.

ஆண்டவன் தந்த கை எதற்கு?
அள்ளிச் சோறு தின்பதற்கு.

ஆண்டவன் தந்த கை எதற்கு?
அழுக்குத் தேய்த்துக் குளிப்பதற்கு.

ஆண்டவன் தந்த கை எதற்கு?
ஆடை ஒழுங்காய் அணிவற்கு.

ஆண்டவன் தந்த கை எதற்கு?
அழகாய் எழுதிப் படிப்பதற்கு.

ஆண்டவன் தந்த கை எதற்கு?
அனுதினம் வேலை செய்வதற்கு.

ஆண்டவன் தந்த கை எதற்கு?
அனைவருக் குதவி செய்வதற்கு.

ஆண்டவன் தந்த கை எதற்கு?
அவரை நன்றாய்த் தொழுவதற்கு.

இப்படி, கை செய்யும் வேலைகள் ஏழினை எழுதி ஒரு முழுப் பாடலாக்கி இந்தத் தொகுதியில் இணைத்துவிட்டார்.

இப்பாடல், கவிமணி எழுதிய 'கைத்திறன்' என்னும் அருமையான பாடலை நினைக்கச் செய்கிறது.

பிஞ்சு நெஞ்சுக்கு ஒரு பெருமை

'சிரிக்கும் பூக்கள்' நூலின் மிகச் சிறந்த பாடல் 'அருமை நேரு' - பாடலாகும்.

அருமை நேரு பிறந்தது
அலகா பாத்து நகரிலே!
இளைஞர் நேரு படித்தது
இங்கி லாந்து நாட்டிலே.
தீரர் நேரு வாழ்ந்தது
தில்லி நகரம் தன்னிலே.
இன்று நேரு வாழ்வது
எங்கள் பிஞ்சு நெஞ்சிலே!

இந்தப் பாடலை ஒருமுறை சொன்னால் போதும், கேட்ட குழந்தைகள் பிழையில்லாமல் திரும்பப் பாடுகிறார்கள். அதிலும் 'எங்கள் பிஞ்சு நெஞ்சிலே' என்பதைப் பிள்ளைகள் பாடும்போது, யாரும் சொல்லிக் கொடுக்காமல் தாமாகவே தம் கையால் தம் நெஞ்சைத் தொட்டுக் காட்டும் அதிசயத்தை இந்நூலாசிரியர் பார்த்திருக்கிறார். நேருவைப் பற்றிய சிறுவர் பாடல்களில் இந்தச் சின்னப் பாடலே சிறந்த பாடலாகும்.

சங்கு சக்கரச்சாமி

'சங்கு சக்கர சாமிவந்து சிங்கு இங்கென ஆடுமாம்' என்று ஒரு பாடல் உண்டு. அதே 'சங்கு சக்கரசாமி'யை வள்ளியப்பாவும் பாடுகிறார்:

சங்கு சக்கர சாமியாம்;
சாய்ந்து படுத்துக் கிடக்குமாம்.
எங்கே, எங்கே தெரியுமா?
எங்கள் ஊருக் கோயிலில்.

நீட்டிப் படுத்துக் கிடக்குமாம்;
நீல வண்ணச் சாமியைப்
பாட்டுப் பாடி எழுப்பலாம்
கூட்ட மாக வாருங்கள்!

மேலே எடுத்துக்காட்டிய பாடலின் அதே எளிமை, அதே இனிமை, அதைப் போலவே கவிதைப் பொருளான சாமியைக்

கண்முன்னே கொண்டு வரும் அருமை!- அனைத்தும் இந்தப் பாடலிலும் உள்ளன.

நேரம் ஒதுக்கு

'விளையாட வேண்டிய நேரத்தில் விளையாடு!
படிக்க வேண்டிய நேரத்தில் படி!'

இப்படிக்கூறும் ஒரு பிறமொழிக் கூற்று உண்டு. அதே பணியை, அதே பாணியில், இன்னும் சில சிறந்த பணிகளை உள்ளடக்கிய, 'இப்படி நேரம் ஒதுக்கிடுவேன்!' எனும் எட்டுவரிப் பாடல், சிறுவர் எட்ட வேண்டிய கடமைகளை எடுத்துக் கூறுகிறது.

ஓடி ஆட ஒரு நேரம்!
உணவை உண்ண ஒரு நேரம்!
பாடம் படிக்க ஒரு நேரம்!
படுத்துத் தூங்க ஒரு நேரம்!
பெற்றோ ருக்கு ஒரு நேரம்
பிறருக் காக ஒரு நேரம்!
இப்படி நேரம் ஒதுக்கிடுவேன்!
என்றும் இன்பம் பெற்றிடுவேன்!

நாட்டிய நாடகம்

இந்தத் தொகுதியின் இறுதிப் பகுதியாய், சண்டையும் சமாதானமும்' என்னும் தலைப்புடைய ஒரு நாட்டிய நாடகம் உள்ளது. மல்லிகைப்பூ, தாமரைப்பூ, அரளிப்பூ, சாமந்திப்பூ, ஆகியவை தாமே சிறந்த பூ என்று வாதிடுவதும், ரோஜாப்பூ 'இங்குள நாமெல்லாம் ஓரினமே! நாம் இணைந்து வாழ்வோம் ஒற்றுமையாய்!' என்று கூறி, 'சண்டை வேண்டாம்! சாந்தம் கொள்வோம்' என்று சமாதானம் பேசுவதும், இந்திய மக்களுக் குரிய போதனையாகத் திகழ்கிறது. இதை நடாகவடிவில் நல்கியுள்ளார், கவிஞர்.

குழந்தைக் கவிஞரின் மூன்று தொகுதிகளுமே, குழந்தை களை மகிழ்வித்து, நன்னெறி மேற்கொள்ளச் செய்யும் சிறப்பு வாய்ந்தவையாகும்.

பாட்டிலே காந்தி கதை

சிறுவர்களுக்கான பாடல்கள் எழுதி வந்த வள்ளியப்பா, அவர்களுக்காக ஒரு காவியம் உருவாக்க விரும்பினார். அவர் காந்தியவாதி. காந்தி வழி நடப்பவர். முன்னரே காந்தி அண்ணலைப் பற்றியும், அவர்தம் வாழ்வின் சில நிகழ்ச்சிகளையும் பாடல்களாக எழுதி வெளியிட்டிருந்தார். அவை மேலே குறிப்பிட்ட மூன்று தொகுதிகளில் இடம் பெற்றுள்ளன. தம்மைக் கவர்ந்த காந்தியின் முழு வாழ்வையும் ஒரு சிறுகாவியமாக எழுதிக் குழந்தைகளுக்குக் கொடுக்க நினைத்தார்.

அந்தச் சமயம் இந்நூலாசிரியர் 'கரும்பு' என்னும் சிறுவர் வார இதழின் ஆசிரியராகத் திகழ்ந்தார். அவர் தம் குருநாதரான கவிஞரை அணுகி, காந்தியின் வாழ்வைத் தொடராக எழுதித் தருமாறு கேட்டுக் கொண்டார். அதன்படி கவிஞர் காந்தியின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சுவையான பாடல்களாகச் சிலகாலம் எழுதித் தந்தார். அவற்றைக் கரும்பு இதழ் வெளியிட்டது. ஆனால் காந்தி வரலாறு முழுமையும் எழுதவில்லை. பின்னர் கல்கி இதழில் அண்ணல் வரலாற்றைச் சுருக்கமாக எழுதிக் கொடுத்தார். அப்பாடல்கள், 1957இல் இரண்டு இதழ்களில் வெளிவந்தன. கரும்பு, கல்கி இதழ்களில் எழுதிய பாடல்களுடன் மேலும் பல பாடல்களை எழுதி, காந்தி அடிகள் வரலாற்றை நிறைவு செய்தார். அவற்றைத் தொகுத்து, 'பாட்டிலே காந்தி கதை' என்னும் பெயரில் 1968இல் வெளியிட்டார். இவ்வாறு குழந்தைக் கவிஞர் குழந்தை இலக்கியத்துக்கு ஒரு காவியம் வழங்கிச் சிறப்பித்தார்.

'பாட்டிலே காந்தி கதை', அருமையான படங்களோடு சிறப்பான நூலாக அமைந்து கவிஞர் புகழை மேலும் உயர்த்தியது.

அந்த நாள் சிறப்பு

காந்தி அண்ணல், 1869ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இரண்டாம் தேதி, பிறந்தார். அதனால் அந்த நாள் இந்தியர்கள் போற்றும் புனித நாளாகத் திகழ்ந்துவிட்டது என்கிறார் கவிஞர்.

அந்தநாளே இந்தியர்க்கு
அதிட்டம் பிறந்தநாள்!
அந்த நாளே காந்திமகான்
அவதரித்த நாள்!
தந்தையாகத் தலைவராகத்
தருமம் காக்கவே
சத்தியமே குழந்தையாக
வந்து துதித்த நாள்!

சத்தியமும் தகுந்த கவனமும்

பள்ளியில் படித்துக் கொண்டிருந்த போது, ஒரு நாள் நோயுற்ற தந்தைக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தார். அந்நேரம் வானில் மேகம் படர்ந்து சூரியனை மறைத்து விட்டதால் சரியான நேரம் தெரியவில்லை. அதனால் காலம் கடந்து பள்ளிக்குச் சென்றார். தாமதமாக வரநேர்ந்ததை ஆசிரியரிடம் கூறினார். அதை அவர் நம்பாமல், அபராதம் விதித்தார். அப்போதுதான் காந்தி சத்தியம் பற்றிய ஒரு உண்மையைத் தெரிந்து கொண்டார். அதைக் கவிஞர்,

''சத்தியம் பேசும் மனிதனுக்கு,
தகுந்த கவனமும் வேண்டுமென
அன்றே காந்தி அறிந்தாரே;
அறிந்த படியே நடந்தாரே!''

என்று குறிப்பிட்டுள்ளார்.

சத்தியாக்கிரகம்

காந்தியின் வாழ்வில் சத்தியாக்கிரகத்துக்குத் தனியிடம் உண்டு. 'சத்தியாக் கிரகம்' என்றால் என்ன? சிறுவர்க்காக இதைத் தெளிவாக விளக்க விரும்பிய கவிஞர்,

''சத்தியம் உறுதி சேர்ந்ததனால்
'சத்தியாக் கிரகம்' என்றனரே''

என்று விளக்கினார்.

தாய்மொழியே தாய்ப்பால்

காந்தி அடிகள் தாய்மொழியை நேசித்தார். அதன் அவசியத்தை உணர்த்தினார். அதோடு தம் சுயசரிதமான 'சத்திய சோதனை'யைத் தம் தாய்மொழியான குஜராத்தி மொழியில் எழுதியதைப் பதிவு செய்கிறார் கவிஞர்:

''தாய்ப்பால் போலே அவசியமாம்
தாய்மொழி'' என்றே உணர்த்திவந்தார்.
தாய்மொழி தன்னில் சுயசரிதை
'சத்திய சோதனை' எழுதி வைத்தார்.

காந்திவழியில் கண்ட வெற்றி

ஆயுதம் ஏந்தாமல், அறப்போர் நடத்தி அகிம்சை வழியில் இந்தியா சுதந்திரம் பெற்ற சிறப்பையும் கவிஞர் அழுத்தமாகக் குறிப்பிட்டார்:

குண்டு துப்பாக்கிகள் ஏதுமில்லை,
கோரமாய் யுத்தமும் செய்யவில்லை;
அண்ணலாம் காந்திஜி காட்டி வந்த
அகிம்சை வழியில் வெற்றிபெற்றோம்!
சாந்தப் போரிலே வெற்றி பெற்றோம்,
சத்தியப் போரிலே வெற்றி பெற்றோம்,
காந்தி வழியிலே வெற்றி பெற்றோம்.
கருணை வழியிலே வெற்றி பெற்றோம்.

மாந்தருள் தெய்வத்தின் மறைவு

சத்தியப் போரின் வெற்றியை இப்படிப் பெருமையோடு வர்ணித்த கவிஞர், காந்தியடிகள் கயவன் ஒருவனின் துப்பாக்கிக்குப் பலியான சோகத்தைக் கல்லும் கசிய, கண்ணீர் பெருகக் குறிப்பிட்டுள்ளார்.

கோபுரம் கீழே சாய்ந்தது போல்
குலுங்கும் பழமரம் வீழ்ந்ததுபோல்,
பாபுநம் காந்தி புனிதஉடல்
பாதகன் செயலால் சாய்ந்ததையோ!

தங்க நிலவு மறைந்தது போல்
சட்டென இன்னிசை நின்றதுபோல்
மங்கல தீபம் அணைந்ததுபோல்
மாந்தருள் தெய்வம் மறைந்ததையோ!

'பாட்டிலே காந்தி கதை' - குழந்தை இலக்கியத்துக்குப் புகழ் சேர்க்கும் சிறந்த நூல் என்பது முற்றிலும் உண்மை.

ஈசாப் கதைப் பாடல்கள்

இதுவரை குறிப்பிட்ட மூன்று கவிதைத் தொகுதிகள், பாட்டிலே காந்தி கதை - தவிர, இவற்றைப் போலச் சிறப்புடைய மற்றொரு பாடல் நூலையும் வழங்கியுள்ளார், கவிஞர். அது 'ஈசாப் கதைப் பாடல்கள்'

கிரேக்க ஞானி ஈசாப்

கிரேக்க ஞானி ஈசாப்பை அறியாத சிறுவரோ, பெரியோரோ இருக்க முடியாது. பள்ளியில் படிக்கும்போதே ஈசாப் கதைகளைப் பாட நூல்களிலேயே பார்க்கலாம்.

ஈசாப் தம் கதைகளை ஏட்டிலே எழுதவில்லை. அவ்வப்போது மக்களின் பல்வேறு செயல்களைக் கண்டு, அவர்கள் நல்லறிவு பெறுவதற்கு உரிய சிறந்த கருத்தைக் கதைகளாகக் கூறி வந்தார். இவ்வாறு சுமார் முந்நூறு கதைகள் கூறியுள்ளார். சிலர் 'இன்னும் அதிகமான கதைகள் கூறினார், ஈசாப்' என்கிறார்கள். கிருத்துவரின் பைபிளுக்கு அடுத்த நிலையில் உலகில் அதிகமானவர்கள் படித்த, படித்துவரும் சிறப்புடையவை ஈசாப் கதைகள்.

ஈசாப் கதைகளைக் குழந்தைகளுக்குக் கூறவிரும்பிய குழந்தைக் கவிஞர், அவற்றைப் பாடல்களாகத் தந்தார். இப்பாடல்கள் 'பாலர் மலர்' இதழில் அட்டைப்படப் பாடல்களாகத் தொடர்ந்து வெளிவந்தன. கவிஞர் அவற்றைத் தொகுத்து, இரண்டு நூல்களாக வெளியிட்டார். பின்னர், இரண்டையும் சேர்த்து ஒரே தொகுதியாக வழங்கினார்.

உணவும் உயிரும்

கவிஞர் ஈசாப் கதையை எவ்வளவு எளிமையாக - எவ்வளவு தெளிவாகப் பாடல் வடிவில் தந்திருக்கிறார் என்பதை உணர, 'வித்தியாசம்' என்னும் கதைப்பாடலைப் பார்ப்போம்.

காட்டில் ஒரு வெள்ளை முயலை விரட்டிக் கொண்டு ஓடுகிறது வேட்டை நாய். ஆனால் அந்த வேட்டை நாயால் முயலைப் பிடிக்க முடியவில்லை. அதனால் அலுத்துக் களைத்து ஓட்டத்தை நிறுத்த, முயல் ஓடி மறைகிறது. அருகே ஆடு மேய்த்துக் கொண்டிருந்த ஒரு சிறுவன் இதைக் கண்டு வியப்படைகிறான். அவன் வேட்டை நாயிடம் ''வேட்டை வீரனான உன்னால் முயலைப் பிடிக்க முடியாதது ஏன்?'' என்று கேட்க, ''வேட்டை நாய்க்கும் முயலுக்கும் உள்ள வித்தியாசம் உனக்குத் தெரியவில்லையா? சொல்கிறேன், கேள்'' என்று கூறிய நாய், பின் வருமாறு வித்தியாசத்தைக் கூறுகிறது:

''உணவுக் காகத் தொடர்ந்து சென்ற
எனது ஓட்டத்தால்,
உயிரைக் காக்க ஓடும் முயலை
வெல்ல முடியுமோ?

இப்படியே ஒவ்வொரு கதையையும் பாடலாகத் தந்துள்ளார், கவிஞர்.

வெளிநாட்டு விடுகதைகள்

தொல்காப்பியம் சொல்லும் 'பிசி' என்பது விடுகதை என்று முன்னரே பார்த்துள்ளோம். இந்த விடுகதை இல்லாத நாடு, இல்லாத மொழி உலகில் இல்லை என்றே சொல்லலாம்.

கவிஞர் ஒருமுறைப் பல நாட்டு விடுகதைகள்' (Riddles of Many Lands) என்னும் நூலைப் பார்த்தார். அவற்றை நம் குழந்தைகளும் அறிந்து ஆனந்திக்க வேண்டும் என்று விரும்பினார். அதன்படி 155 பல நாட்டு விடுகதைகளை, விடுகதையின் மரபுப்படி பாடல்களாக்கிக் கொடுத்துள்ளார். அந்த நூலின் பெயர்: 'வெளிநாட்டு விடுகதைகள்' அந்த நூலின் சிறப்பறிய இரு விடுகதைகளை இங்கே காணலாம்:

வட அமெரிக்க விடுகதை

என்னிடம் ஒரு தாள் உண்டு
மடிக்க முடியாது!
ஏராளமாய்ப் பணம் உண்டு
எண்ண முடியாது!
கண்ணைக் கவரும் ஆப்பிள் உண்டு;
கடிக்க முடியாது!
பளபளக்கும் வைரம் உண்டு
பார்க்க முடியாது.
இது என்ன?

வட அமெரிக்க நாட்டின் விடுகதை, இது.

இதன் விடை: முறையே, வானம், நட்சத்திரங்கள், நிலா, சூரியன்.

போர்ச்சுகல் விடுகதை

கூரை வீட்டைப் பிரித்தால்
ஓட்டு வீடு;
ஓட்டு வீட்டைப் பிரித்தா
வெள்ளை மாளிகை.
வெள்ளை மாளிகைக்கு
உள்ளே குளம்.

இது போர்ச்சுகலின் விடுகதை

விடை: தேங்காய்.

இன்று குழந்தைகளுக்குப் பாடல் எழுதுகிறவர்கள் மிகப் பலர் உள்ளனர். என்றாலும் 'குழந்தைக் கவிஞர்' என்று கூறியதும் அனைவரும் வள்ளியப்பாவையே நினைப்பது இவரது தனிச் சிறப்பாகும்.

வள்ளியப்பாவின் பாடல்களில் மிகுந்த புகழ் பெற்ற நான்கு வரிகள் இவை:

ஏடு தூக்கிப் பள்ளியில்
இன்று பயிலும் சிறுவரே
நாடு காக்கும் தலைவராய்
நாளை விளங்கப் போகிறார்!

அப்படி அவர்களை உயர்த்த உதவும் சிலவற்றுள் வள்ளியப்பாவின் பாடல்கள் முக்கிய இடம் பெறுகின்றன என்பதில் ஐயம் இல்லை. குழந்தைக் கவிஞரின் பாடல்களை, பாலர் முதல் பண்டிதர் வரை படித்துப் பரவசமடைகின்றனர். அவரைப் பின்பற்றி மிகப் பலர் எழுதி வருகின்றனர். சிலர், வெண்பா ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா என்னும் நால்வகைப் பாவகைகளில், வள்ளியப்பாவின் பா எந்த வகைப் பா என்று கேட்பதுண்டு. குழந்தைப் பாடல் எழுத முற்படுவர்களில் பெரும்பாலோர், வள்ளியப்பாவின் பாடல்களையே வழிகாட்டியாகக் கொண்டு பாடல்கள் எழுதி வருகின்றனர் என்பது யாவரும் அறிந்த உண்மை!

குழந்தைக் கவிஞரின் பா இவ்வகையில் குழந்தைப் பாடல் எழுதுவோர்க்கு வழிகாட்டியாகவும், முன்மாதிரியாகவும் திகழ்வதால், அவர் பாடல்களைப் பின்பற்றியே தம் பாடல்களை அமைத்துக் கொள்கிறார்கள். இந்த உண்மையை உணர்ந்த, குழந்தைப் பாடல் கொடுப்பதில் சிறப்புப் பெற்ற கவிமாமணி இளையவன் அவர்கள், வள்ளியப்பா வழங்கும் பாக்கள் எந்த வகைப் பாவைச் சார்ந்தவை என்பதை ஒரு வெண்பாவின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

வஞ்சிப்பா, வெண்பா, களிப்பா வகையெல்லாம்
செஞ்சொல் கவியினத்துச் செல்வங்கள்-நெஞ்சாரும்
வள்ளியப்பா என்றோர் மரபு, குழந்தைகள்
துள்ளியப்பா செய்யும் திறம்.

இளையவன் கூறுவது முற்றிலும் பொருந்தும்; வள்ளியப்பா வாழ்ந்த காலத்திலும் சரி, இன்றும் சரி, குழந்தைப் பாடல் எழுத முனைபவர்கள் வள்ளியப்பா பாடல்களையே, வழிகாட்டியாகவும், குழந்தைப் பாடலுக்கு வகுக்கப்பட்ட இலக்கணமா

கவும் கொண்டு எழுதி வருகின்றனர் என்பது யாவரும் அறிந்த உண்மை! ஆம்!, நால்வகைப் பாடலோடு 'வள்ளியப்பா" என்னும் புதிய பா வகை இணைந்துவிட்டது! இப்படி ஒரு கவிஞரின் பெயரே, அவர் வழங்கிய பாவின் பெயராக அமைந்து விட்டதை, குழந்தைக் கவிஞர்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்பது வள்ளியப்பா மட்டுமே பெற்ற ஒப்பற்ற தனிச்சிறப்பு.

5

கதைகள்

பாட்டிக் கதைகள்

குழந்தை இலக்கியத்தின் முக்கிய கூறு கதை! சிறுகதையும் இதில் அடங்கும்; நெடுங்கதைகளும் இதில் அடங்கும். பழங்காலத்தில் கதை, வாய்மொழி இலக்கியமாக வளர்ந்து வாழ்ந்து வந்தது. அச்சுப் பொறி வருகிற வரை சிறுவர் கதைகள் வாய்மொழி இலக்கியமாகவே வாழ்ந்தன; வளர்ந்தன. அந்தக் காலத்தில் வீட்டில் இருந்த தாத்தாவும் பாட்டியும் கதைகள் கூறினர். அவர்களிலும் சிறப்பாக, பாட்டியே பேரன் - பேத்திகளுக்குக் கதைகள் கூறிவந்தார். அதனால் அவை, 'பாட்டிக் கதைகள்' என்று வழங்கின.

அச்சுப்பொறி நம் நாட்டுக்கு வந்து, நூல்களும் இதழ்களும் தோன்றிய பின்பு குழந்தைக் கதைகள் - சிறுவர் கதைகள்- நூல்களாக வெளிவந்து பல ஆண்டுகள் நிலைபெறும் பேற்றைப் பெற்றன.

கவிதையைத் தமது முதன்மைக் கூறாக - தாம் விரும்பும் குழந்தை இலக்கியத்தின் முதன்மைக் கூறாகக் கொண்ட குழந்தைக் கவிஞர் வள்ளியப்பா சிறுவர் கதைகளும் எழுதினார். வானொலிக்காகவும் சில கதைகள் வழங்கினார். அவை ஒலிபரப்பப்பட்டுக் குழந்தை உள்ளங்களைக் கவர்ந்தன.

வள்ளியப்பா சில சிறுவர் இதழ்களைத் தயாரிக்கும் பொறுப் பேற்றபோது, அவற்றில் நிறைய சிறுகதைகள் எழுதும் வாய்ப்புக் கிடைத்தது. என்றாலும் பிறருக்கே அதிக வாய்ப்பை வழங்கினர்.

நெடுங்கதைகள்

வள்ளியப்பாவின் நண்பரான, 'மலரும் உள்ளம்' கவிதைத் தொகுதியை முதலில் வெளியிட்ட பழனியப்பா அவர்கள் சிறுவர் களுக்கான கதை நூல்கள் வெளியிட 'குழந்தைப் பதிப்பகம்' என்று ஒரு பதிப்பகம் தொடங்கினார். அதன் பதிப்பாசிரியராக வள்ளியப்பாவை நியமித்து, அவரிடம் முழுப்பொறுப்பையும் ஒப்படைத்தார். அதன் வெளியீடுகள் எப்படி யிருக்க வேண்டும் என்று எழுத்தாளர்களுக்கு உணர்த்துவதற்காக வள்ளியப்பாவையே முதல் கதையை எழுதி வெளியிடச் செய்தார். அந்நூலின் பெயர்: 'பாட்டிக்குப் போட்டி'.

அது டெம்மி 1/16 அளவு என வழங்கப்படும் கையகல அளவில் 32 பக்கங்கள் கொண்ட நூல். அதில் சில பக்கங்களில் படங்கள். அதனால் படிக்கும் பகுதி ஒரு சிறுவர் இதழின் சுமார் பத்துப் பக்க அளவைக் கொண்டதாய் அமைந்தது. ஆனாலும் தனி நூல் என்னும் தகுதி பெற்றது.

சிறுவர் மிகவும் நேசிக்கும், சிறுவர்களை மிகவும் நேசிக்கும் பாட்டியின் அன்பையும் பண்பையும் விளக்கும் நல்ல கதையே' பாட்டிக்குப் போட்டி!

ஐந்து வயது சிறுவன் கண்ணன் செல்வர் வீட்டுச் செல்லப் பிள்ளை. அவனுக்குக் கேட்டதெல்லாம் கிடைக்கும். அவன் தந்தை அவனுக்கு ஒரு சிறிய மோட்டார் கார் கூட வாங்கித் தருகிறார். கண்ணனின் விளையாட்டுத் தோழி ராஜம் வீட்டில் பாட்டி இருந்தார். அவர் விதவிதமான கதைகள் கூறுகிறார். அந்தக் கதைகளை ராஜம் கூறக் கேட்ட கண்ணன், தனக்கும் அப்படி ஒரு பாட்டி வேண்டும் என்று கேட்கிறான். பணக்கார அப்பாவால் பாட்டியை வாங்கித் தர முடியவில்லை. இதற்கிடையில் கண்ணனின் காரைப் பார்த்து அதன் மேல் ஆசை கொள்கிறாள் ராஜம். அதை அறிந்த கண்ணன், 'என் மோட்டார் தருகிறேன்; உன் பாட்டியை எனக்குத் தந்துவிடு' என்று கேட்கிறான். ராஜம் மனம் காரை விரும்பினாலும், முடிவில் பாட்டிதான் வேண்டும் - கார் வேண்டாம் என்று கூற, கண்ணன் ஏமாறுகிறான். பாட்டியோ கண்ணனின் பாசத்தைப் பார்த்து நெகிழ்ந்து, ''நான் இன்று முதல் உங்கள் இருவருக்கும் பொது.

கண்ணன் வீட்டிலும் இருப்பேன். ராஜம் வீட்டிலும் இருப்பேன். இருவருக்கும் கதைகள் சொல்வேன்'' என்று கூறுகிறார். கண்ணனும் 'என் கார் நம்ப ரெண்டு பேருக்கும் சொந்தம்' என்று கூறுகிறான்.

இந்தச் சிறுநூல் 1949ஆம் ஆண்டு வெளி வந்தது. இந்த நூலின் பதிப்புரையில், ''அழ. வள்ளியப்பா அவர்கள் பாடல்கள் எழுதுவதில் மட்டும்தான் கெட்டிக்காரர் என்று எண்ண வேண்டாம். கதைகள் எழுதுவதிலும் திறைமயுள்ளவர், என்பது இந்தப் புத்தகத்தைப் பார்த்தாலே தெரியும்'' என்று பதிப்பகத்தார் குறிப்பிட்டுள்ளனர். அதை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் அவர் எழுதிய நல்ல நண்பர்கள், குதிரைச் சவாரி ஆகிய இரண்டு கதை நூல்களையும் வெளியிட்டனர். இந்த இரண்டு நூல்களை பெரிய அளவில் (டெம்மி 1/8) மேலும் சிறந்த படங்களுடன் பிற்காலத்தில் பழனியப்பா பிரதர்ஸ் வெளியிட்டார்கள். 'நல்ல நண்பர்கள்' கதை, வீரன் என்னும் நாயும், கஸ்தூரி என்னும் வாத்தும், கொண்ட நட்பையும், அவற்றை ஆதரித்த முரளி-சீதா ஆகிய குழந்தைகளின் பாசத்தையும் கூறுகிறது. கதையின் முடிவில் நாயும் வாத்தும் இறந்து போகின்றன. சோக முடிவு கொண்ட இந்தக் கதையைப் படித்து கண்ணீர் சிந்திய குழந்தைகள் ஏராளம்.

குதிரைச் சவாரி

கடற்கரையில் குதிரைகளில் சிறுவர்களை ஏற்றிச் சவாரி செய்விக்கும் ஒரு குதிரைக்காரனுக்கும் மோகன் என்னும் சிறுவனுக்கும் இடையே மலர்ந்த நட்பு, தன்னிடம் ஒப்படைத்த குதிரைகளைத் தொலைத்து விட்டோம் என்னும் பயம், குதிரைகள் தொலைந்து போகவில்லை என்பதை அறியும்போது ஏற்பட்ட ஆனந்தம் - இவற்றைச் சொல்லும் நெடுங்கதையே, 'குதிரைச் சவாரி'. இச்சிறு நூலும் பெரிய அளவில் உரிய படங்களோடு பின்னே வெளிவந்து புகழ்பெற்றது.

ரோஜாச்செடி

வள்ளியப்பாவின் 'ரோஜாச் செடி' நெடுங்கதையும் சிறுவர்க்கான பெரிய அளவு நூலாக - வண்ணப் படங்களுடன் வெளிவந்தது.

ரோஜாச் செடி நூலும் சரி, வள்ளியப்பாவின் வேறு நூல்களும் சரி, சிறந்த படங்களுடனே வெளிவந்தவை. ஓவியரை அருகே அமர்த்தி, தம் நூலின் படங்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்று கூறி, சிறந்த படங்களோடு வெளிவரச் செய்வார், கவிஞர்.

ரோஜாச் செடியின் கதைஇதுதான்:

பூம்புகார் என்னும் ஊரில் மலர்க்காட்சி நடைபெற விருக்கிறது. அதில் சிறுவர் சிறுமிகள் தாம் வளர்க்கும் மலர்ச் செடிகளைக் கொண்டு வந்து வைக்கலாம். சிறந்த செடிக்கு ஐம்பது ரூபாய் பரிசு தருவார்கள். அந்த வருடம் காட்சியைப் பார்த்து, சிறந்த செடியைத் தேர்வு செய்து, பரிசளிக்கக் கல்வி அமைச்சர் வரவிருந்தார்.

அந்த ஊர் மிரசுதாரின் மகள் மீரா இந்தப் போட்டியில் கலந்து கொள்ள விரும்புகிறாள். ஆனால் அவள் எந்தச் செடியும் வளர்க்கவில்லை.

அதே ஊரில் பார்வதி என்னும் ஏழைச்சிறுமி இந்தப் போட்டிக்காக ஒரு அழகான ரோஜாச் செடியை வளர்த்து வருகிறாள். மீரா அவள் வீட்டுக்குச் சென்று பார்வதிக்குத் தெரியாமல், பத்து ரூபாய் அவள் தாயாரிடம் கொடுத்து அந்த ரோஜாச் செடியை வாங்கிச் செல்கிறாள்.

விலை கொடுத்து வாங்கிய ரோஜாச் செடியை தன் செல்வச் சிறப்பைக் காட்ட, மண்தொட்டியில் வைக்காமல் எவர் சில்வர் தொட்டியில் வைத்து, அதைக் கண்காட்சியில் இடம் பெறச் செய்கிறாள் மீரா.

கல்வி அமைச்சர் மலர்க்காட்சிக்கு வந்து செடிகளைப் பார்வையிடுகிறார். மீராவின் ரோஜாச் செடிதான் மிக அழகாகவும் செழிப்பாகவும் இருப்பதாகத் தேர்வு செய்கிறார். 'அதற்கு முதல் பரிசு' என்று அறிவிக்கிறார்கள்.

மீரா மிகுந்த மகிழ்ச்சியுடன் பரிசு வாங்க அமைச்சர் முன்னே வந்து நிற்கிறாள்.

மீராவின் செடி எவர்சில்வர் தொட்டியில் இருப்பதால் அமைச்சருக்கு சந்தேகம் வருகிறது. அவர் மீராவிடம் சில கேள்விகள் கேட்கிறார்.

மீரா, தன் செடிக்கு ஒரு நாளைக்குப் பத்துப் பதினைந்து முறை தண்ணீர் ஊற்றுவதாகவும், சில்வர் தொட்டியில் ஒரு ஓட்டையும் இல்லை என்றும் கூறுகிறாள்.

அதை கேட்ட அமைச்சர், ''உனக்குச் செடி வளர்க்கத் தெரியவில்லை. துவாரம் இல்லாத தொட்டியில் செடி வளராது. உனக்குப் பரிசு இல்லை'' என்று கூறி, செடிக்கு உரிய பார்வதியை வரவழைத்து, அவளுக்குப் பரிசு வழங்குகிறார்.

இந்த 'ரோஜாச்செடி' கதை சிறுவர்களை வெகுவாகக் கவர்ந்தது. இது நாடகமாக்கப்பட்டு மேடையிலும் வெற்றியடைந்தது.

பாலர் மலர் முதலிய இதழ்களில் கவிஞர் பல புனைபெயர்களில் கதைகள் எழுதினார். அவற்றைத் தொகுத்துப் புத்தகமாக வெளியிடவில்லை. அதனால் அவற்றை இன்றைய சிறுவர் படிக்கும் பேறு பெற முடியவில்லை.

கோகுலம் இதழின் கௌரவ ஆசிரியராக வள்ளியப்பா திகழ்ந்தபோது, அதில் அவர் சில சிறுகதைகள் எழுதினார். அவற்றுள் எட்டுக்கதைகளைத் தொகுத்து 'திரும்பி வந்த மான் குட்டி' என்னும் தலைப்பில் அண்மையில்(2002-இல்) நூலாக வெளியிட்டுள்ளனர்.

பொன்னனின் சுதந்தரம்

இந்நூலில் உள்ள 'பொன்னனின் சுதந்தரம்' என்னும் சிறுகதை 'எது சுதந்திரம்?' என்பதைச் சுவையாக விளக்குகிறது. 'சுதந்திர நாளில் நான் விரும்பியபடி தூங்கச் சுதந்தரம் இல்லையே! பல்துலக்காமல் சிற்றுண்டி உண்ண சுதந்தரம் இல்லையே! ஒரு நாய் மேல் கல் எறியக்கூட சுதந்தரம் இல்லையே! விரும்பியபடி நடுரோட்டில் நடக்கச்கூடச் சுதந்தரம் இல்லையே!''என்று பொன்னன் வருத்தப்படுகிறான்.

''உன் இஷ்டபடி நீ செய்வது போல ஒருவர் தம் இஷ்டப்படி உன்னைத் தடியால் அடித்தால்...'' என்று கேட்கும் அப்பா, ''மற்றவங்களை மதிக்கிறது சுதந்தரம். பேசுகிற பேச்சிலே, செய்கிற செயலிலே சுத்தமாய் இருப்பது சுதந்தரம். உரிமைகள் கடமைகள்னு சொல்றோமே, அந்த ரெண்டையும் நல்லா உணர்ந்து நடந்தால், அதுதான் சுதந்தரம்!'' என்று விளக்குகிறார்.

பொன்னன் அப்போதுதான் 'சுதந்தரம் என்பது எது?'' என்பதைப் புரிந்து கொள்கிறான்.

இத்தகைய சிறந்த கருத்துகளை வள்ளியப்பாவின் எல்லாக் கதைகளிலும் காணலாம்.

கவிஞர் 'வேட்டை நாய்' என்னும் பிறமொழிக்கதைகள் அடங்கிய ஒரு சிறுகதைத் தொகுதியும் படைத்துள்ளார்.

வள்ளியப்பா பல இதழ்களின் பொறுப்பாசிரியராகத் தொண்டாற்றியவர். அதனால் என்றும் தம் படைப்புகளால் இதழ்களை நிரப்ப எண்ணாதவர். கூடியவரையில் குழந்தைகளுக்கும் குழந்தை எழுத்தாளர்களுக்கும் பேரளவு இடம் தருவார். அதனால் அவர் தம் சிறுகதைத் தொகுதிகள் நாவல்கள் குறைந்த எண்ணிக்கையில் உள்ளன.

கௌரவ ஆசிரியர்

வள்ளியப்பா பாலர் மலர், டமாரம், சங்கு, ஆகிய இதழ்களின் அறிவிக்கப்படாத ஆசிரியராக இருந்தார். ஆனாலும் இதழ்களின் முழு பொறுப்பும் இவருடையதே. 'பூஞ்சோலை' இதழில் 'கௌரவ ஆசிரியர் அழ. வள்ளியப்பா'' என்று வெளியிட்டிருந்தார்கள். கோகுலம் இதழுக்கும் இவர் கௌரவ ஆசிரியராகப் பணியாற்றினார்.

கோகுலத்தில் 'நீலா-மாலா' என்னும் தொடர் கதை எழுதினார். இது 1976ஆம் ஆண்டு அந்த இதழில் வெளிவந்தது. இதற்கு முன்னர் 'பர்மாரமணி' என்னும் தொடர்கதை, கல்கி வார இதழில் வெளிவந்தது. அப்போது சோமு அவர்கள் அதன் ஆசிரியராகத் திகழ்ந்தார். அவர் வேண்டுகோளின்படி இந்தத் தொடர் கதையை எழுதினார்.

நகைச்சுவைக் கதைகள்

கவிஞர் நகைச்சுவையாக எழுதுவதில் வல்லவர். அவர் பாலர் மலரில் 'அண்டப் புளுகன்' என்னும் நகைச்சுவைத் தொடர்கதை எழுதினார்; ஆனால் அதை, 'கோமாளி' என்னும் புனைபெயரில் எழுதினார். இது பின்னர் நூலாக வெளிவந்தது. டிங்-டாங் இதழில் 'கழுதை வீரன்' என்னும் நகைச்சுவை தொடர்கதை எழுதினார். இது நூலாக வெளிவரவில்லை.

கவிஞரின் சிறுவர் நாவல் என்று குறிப்பிடத்தக்கவை, புகழ் பெற்றவை, பர்மாரமணி, நீலா-மாலா ஆகிய இரண்டுமே! இரண்டும் நூல்களாக வெளிவந்தன; பல பதிப்புகள் பெற்றன.

பர்மாரமணி

பர்மாரமணி ஒரு சிறுவனின் துன்பக் கதையைச் சொல்வது.

ரமணி சின்ன வயதிலேயே பெற்றோரை இழந்து அனாதையானவன்: அவனை ஒரு பால நாடக சபாவின் மேனேஜர் ஆதரித்து, நாடகக் கம்பெனியில் வேலையில் சேர்த்துக் கொள்கிறார். ரமணியின் மீது திருட்டுப் பழி விழுகிறது. பட்டகாலிலே பாடும் என்பது போல, துன்பத்துக்கு மேல் துன்பமாகத் தொடர, வேலை யில்லாமல், புதிய வேலை தேடி அலைகிறான். அதிர்ஷ்டவசமாக அவன் பர்மாவுக்குப் போகும் வாய்ப்புக் கிடைக்கிறது. அங்கேயும் துன்பம் தொடர்கிறது. என்றாலும் தன் கதை சொல்லும் திறமையால் புகழ் பெறுகிறான். 'கோமாளி குப்பன்' என்னும் ஒரு கதையைத் தானே சொந்தமாகக் கற்பனை செய்து சொல்கிறான். அது புத்தகமாகிப் புகழ் பெறுகிறது. பர்மாவுக்கு வரும் பால நாடக சபா, ரமணியின் 'கோமாளி குப்பன்' கதையை நாடகமாக மேடையேற்றுகிறது. அதன் வெற்றியால் ரமணி பெரும் புகழ் பெறுவதுடன் 'பர்மா ரமணி' என்னும் சிறப்புப் பெயரும் பெறுகிறான்.

நீலா-மாலா

'நீலா-மாலா' தொடர்கதை கோகுலத்தில் வெளிவந்து, பின் நூலாகிப் புகழ் பெற்றது. நீலா ஒரு சிறிய கிராமத்துப் பெண்.

மாலா சென்னையில் வசிக்கும் புகழ்பெற்ற டாக்டரின் மகள். இருவரும் இணை பிரியாத தோழிகளாகின்றனர். 'சோவியத் நாடு' நடத்திய போட்டி மூலம் நேரு பரிசு பெற்று சோவியத் நாடு சென்று திரும்பும். புதுமையான நிகழ்வுகள் கொண்ட அருமையான நாவல் இது.

மணிக்கு மணி

'மணிக்கு மணி' என்னும் ஒரு நாவலையும் கவிஞர் எழுதி யுள்ளார். இது முதலில் வானொலியில் இடம் பெற்றது. பின்பு இதனை விரிவுபடுத்தி, தினமணிக் கதிரில் வெளியிட்டார். ஒரு சிறுவனுக்கும் ஆட்டுக் குட்டி ஒன்றுக்கும் இடையே ஏற்பட்ட அன்பை-நட்பை விளக்கும் சுவையான நாவல், இது.

இந்த மூன்று நாவல்களும் சிறுவர் நாவல் உலகின் மும்மணிகளாகப் போற்றத்தக்கன.

மொழிபெயர்ப்புக் கதைகள்

கவிஞர் ஆங்கிலமொழியைப் பாங்குற அறிந்தவர். அதனால் சில ஆங்கிலக் கதைகளைத் தமிழில் மொழிபெயர்த்தார். இவ்வாறு மொழிபெயர்த்த நான்கு கதைகள் 'வேட்டை நாய்' என்னும் தலைப்பில் நூலாக வெளிவந்தன. அயர்லாந்துக் கதை, கிரேக்கக் கதை, பர்மியக் கதை, அரேபியக் கதை என்று நான்கு நாடுகள் சார்ந்த நான்கு கதைகளை ஆங்கில மொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்த்தார். இந்தக் கதைகள், முதல் கதையான 'வேட்டை நாய்' என்னும் பெயரில் நூலாக வெளிவந்தன.

நேஷனல் டிக் டிரஸ்ட் நேரு பால புத்தகாலயம் வரிசையில் அருமையான சிறுவர் நூல்கள் வெளியிட்டு வருகிறது. அவற்றுள் சாந்தாரங்காச்சாரி வழங்கிய “Tales for All Times” என்னும் நூலை வள்ளியப்பா, 'எக்காலத்துக்கும் ஏற்ற கதைகள்' என்னும் தலைப்பில் தமிழில் மொழிபெயர்த்தார். இதே வரிசையில் கிருஷ்ண சைதன்யாவின், “Rohanta and Nandriya” என்னும் நூலை 'ரோகந்தாவும் நந்திரியாவும்' என்னும் பெயரில் தமிழில் மொழி பெயர்த்தார்.

நாடகம்

கவிஞர் அவ்வப்போது நாடகங்களை எழுதியுள்ளார். அவை வானொலியிலும் தொலைக்காட்சியிலும் ஒலி-ஒளி பரப்பப்பட்டன. சில மேடைகளிலும் நடிக்கப்பட்டன. ஆனால் 'வெற்றிக்கு வழி' என்னும் ஒரே ஒரு நாடகம் மட்டுமே நூல் வடிவம் பெற்றுள்ளது.

வள்ளியப்பா கவிஞர் என்று அறியப்பட்டுப் புகழ்ப்பட்டாலும் சிறந்த கதாசிரியர் என்பதை மேலே கண்ட நூல்கள் நிரூபிக்கின்றன.

6

உரைநடை

வாழ்க்கை வரலாறு

'வாழ்க்கையைப் போலச் சிறந்த பாடம் வேறெதுவும் இல்லை' என்று கூறுவார்கள். சாதாரண மனிதர் வாழ்வுக்கே இது பொருந்தும் என்றால், சான்றோர் வாழ்வுக்கு எவ்வளவு சிறப்பாகப் பொருந்தும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தச் சான்றோர், ஒரு கவிஞராக, கதாசிரியராக, விஞ்ஞானியாக இருந்தால் அவர்தம் வாழ்க்கையில் சுவையான நிகழ்வுகளுக்குப் பஞ்சமே இருக்காது. குழந்தைக் கவிஞர் வள்ளியப்பாவுக்கு இத்தகைய பெருமக்களின் வாழ்க்கை வரலாற்றைப் படிப்பதில் மிகுந்த ஆர்வம் இருந்தது. ஒருவரது வாழ்வை முழுவதுமாக அறிந்து கொள்ள, பிழையில்லாமல் அறிந்து கொள்ள, அவரைப் பற்றிய நூல்கள் பலவற்றைப் படிப்பார். அந்த வாழ்க்கையிலிருந்து சிறுவர்களுக்கு வழிகாட்டும், சுவையூட்டும் சிறந்த சம்பவங்களைத் தனியே தேர்ந்தெடுத்து சிறுசிறு கட்டுரைகளாக எழுதிவந்தார். கையகலம் அளவே இருந்த 'சங்கு' இதழில் தொடங்கி, பாலர் மலர். பூஞ்சோலை, கோகுலம் முதலிய இதழ்களில் எழுதி வந்தார். அவற்றைப் படித்த சிறுவர்கள் மகிழ்ந்தார்கள். பெரியவர்கள் பாராட்டினார்கள்.

பாடல நூலகளாக மாறிய சிறுவர் நூல்கள்

அவை, சின்னஞ்சிறு வயதில், பெரியோர் வாழ்விலே (இரு தொகுதிகள்) இளமையில் இவர்கள், பிள்ளைப் பருவத்திலே, கதை சொன்னவர் கதை, முதலிய நூல்களாக வெளிவந்தன. இவற்றின் சிறப்புக் கருதி, பல நூல்கள் பள்ளியில் பாட புத்தகங்களாக அமைக்கப்பட்டன. தமிழ்நாடு தவிர, இலங்கை,

சிங்கப்பூர், மலேசியா, பர்மா போன்ற அயல்நாடுகளும் இந்நூல்களுக்கு இதுபோன்ற அங்கீகரத்தைத் தந்து பாராட்டன; பயன்டைந்தன.

சின்னஞ்சிறு கட்டுரைகள்

'சங்கு', காலணா (ஒன்றரை காசு) விலையுள்ள சிறிய இதழ். சாதாரண புத்தக அளவில் பாதியளவே உள்ள இதழ். அதன் உள்ளே ஒரு பக்கமே உள்ள சிறிய நிகழ்ச்சி - ஒரு சான்றோரின் நிகழ்ச்சி எழுதி அட்டைப் பக்கத்தில் - அதாவது முதல் பக்கத்தில் அந்த நிகழ்ச்சியை விளக்கும் படத்தை வெளி யிடுவார். இப்படித் தொடங்கின, அவரது சான்றோர் வாழ்க்கைச் சம்பவக் கட்டுரைகள்.

படமில்லாமல் கட்டுரை இல்லை

கட்டுரை கூறும் நிகழ்ச்சி உண்மைதான் என்பதை, அதே வாழ்வைக் கூறும் வேறு நூல்களைப் படித்து உறுதி செய்து கொள்வார். கட்டுரையுடன், அது குறிப்பிடும் சான்றோரின் படத்தையும் வெளியிடுவார். அதற்காகப் பல நாள்கள் செலவிடுவார்; பல நூலகங்களில் நுழைந்து தேடுவார். கவிஞர் நூல்களில், ஒரு நிகழ்வு யாரைப் பற்றியதோ, அவரது படம் நிச்சயம் இடம் பெற்றிருக்கும். .இந்நூல்கள் பல பதிப்புகள் பெற்றவை; சில பத்துப் பதிப்புகள் வெளிவந்துள்ளன. இன்றும் இந்த நூல்களின் விற்பனை சிறப்பாகவே உள்ளது.

'சின்னஞ்சிறு வயதில்' நூலில் முப்பத்தெட்டு சம்பவங்கள் உள்ளன. ஒவ்வொரு சம்பவமும் இரண்டே பக்கங்களில் முடியும். சம்பவங்களுக்குரிய முப்பத்தெட்டுச் சான்றோர்களின் சிறிய படங்கள் - ஆனால் தெளிவான படங்கள் அட்டையில் இடம் பெற்றுள்ளன.

'இளமையில் இவர்கள்' நூலில், முப்பத்தேழு சான்றோர் பற்றிய நிகழ்ச்சிகள் உள்ளன. இவை கோகுலம் இதழில் வெளிவந்தவை.

'பிள்ளைப் பருவத்திலே' என்னும் நூலில் முப்பது பெரு மக்கள் பற்றிய நிகழ்வுகள் உள்ளன. இவை மதுரை 'தமிழ்நாடு' இதழில் வெளிவந்தன.

'பெரியோர் வாழ்விலே...' நூல், இரண்டு தொகுதிகளாக வெளிவந்தன. இவற்றில் பெரும்பாலானவை பூஞ்சோலை இதழில் வெளிவந்தன. முதல் தொகுதியில் எழுவர், இரண்டாம் தொகுதியில் ஐவர் பற்றிய கட்டுரைகள் உள்ளன.

'கதை சொன்னவர் கதை' என்னும் நூல் பல்வேறு நாடுகளில் கூறப்பட்ட கதைகள்; அம்மாக்களும் பாட்டிகளும் இந்தக் கதைகளைக் குழந்தைகளுக்குக் கூறிவந்தனர். இவை காலப் போக்கில் குறைந்து, மறைந்து போகாமல் காப்பாற்ற விரும்பிய சான்றோர் சிலர், ஊர் ஊராக, நாடுநாடாகத் திரிந்து, அவற்றைக் கேட்டு, வாய்மொழியாக வாழ்ந்த அந்தக் கதைகளைத் தொகுத்தளித்தனர்.

தொகுப்பாளர், எழுவர்

ஈசாப், ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்சன், ரவீந்திரநாத் தாகூர், சார்லஸ் பெராட், லூயிகரோல், கிரிம் சகோதரர்கள், பியேட்ரிக்ஸ் பாட்டர் ஆகியோர் இவ்வாறு வாய்மொழியாக வழங்கப்பட கதைகளைத் தேடி-நாடித் தொகுத்து நூல்களாக வழங்கியுள்ளனர். அதற்கான முயற்சியில் அவர்கள் அனுபவித்த துன்பங்கள், கதைகளை அறிந்தபோது அடைந்த ஆனந்தங்கள் முதலிய அனைத்தையும், வள்ளியப்பா, 'கதை சொன்னவர் கதை' என்னும் நூலாக வெளியிட்டுள்ளார். இவை சுவையும் பயனும் மிகுந்த சிறுவர் நூல்கள். எந்த வயதினர் எடுத்துப் படிக்கத் தொடங்கினாலும், முடித்துவிட்டே வேறு வேலை பார்ப்பார்கள். அதனால் இவை இன்றளவும் மறுபதிப்புகள் கண்டு வாழ்கின்றன.

நேருவும் குழந்தைகளும்

பாலர்களின் நூலில் படிப்பதற்கான பகுதி குறைவாகவும், பார்ப்பதற்கான பகுதி - அதாவது - ஓவியங்கள் - புகைப் படங்கள் நிறைந்த பகுதி அதிகமாகவும் இருக்க வேண்டும் என்று கூறுவதுண்டு, வள்ளியப்பா வழங்கிய 'நேருவும் குழந்தைகளும்' என்னும் நூல் இத்தகைய அருமையான நூல்.

பெரிய அளவில் (டெம்மி 1/4) 66 வண்ணப்படங்களும் கொண்ட இந்த நூலில், ஒரு பக்கம் படிக்கும் விஷயம், எதிர்பக்கம் பார்க்கும் படம் - இந்தப் படங்கள் யாவும் புகைப்படங்கள் - அதிலும் அத்தனையும் நேருவும் குழந்தைகளும் சேர்ந்திருக்கும் படங்கள். இதிலே வள்ளியப்பா நேருமாமாவின் வரலாற்றைச் சுவையாக எழுதியிருந்தார். தமிழ்க் குழந்தை இலக்கிய உலகில் இதுபோல் இன்னொரு நூல் இருப்பதாகத் தெரியவில்லை.

நம் நதிகள்

நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா - என்னும் அரசுத்துறை சார்ந்த பதிப்பகம் வெளியிடும், நேரு பால புத்தகாலயம் என்னும் வரிசையில் 'நம் நதிகள்' என்னும் நூலை வள்ளியப்பா எழுதியுள்ளார். இது 'நம் நதிக'ளின் இரண்டாம் பகுதி. இதன் முதல் பகுதியை லீலா மஜூம்தார் என்பவர் எழுதியுள்ளார். மஜூம்தார் தம் நூலில் கங்கை முதலிய வட இந்திய நதிகள் பற்றி எழுதினார். வள்ளியப்பா இரண்டாம் பகுதியான நூலில் தென்னிந்திய நதிகள் பற்றி எழுதியுள்ளார். இந்நூலில் காவேரி, கோதாவரி, கிருஷ்ணா, துங்கபத்ரா, நருமதை, பாலாறு முதலிய தென்னிந்திய நதிகள் பற்றி மிகச் சிறப்பாக எழுதியுள்ளார்.

மிருகங்கள் பேசினால்...

குழந்தைக் கவிஞர் 'மிருகங்கள் பேசினால்...' என்று ஓர் அறிவியல் நூலையும் குழந்தைகளுக்காக எழுதியுள்ளார்.

''பஞ்சதந்திரக் கதைகளிலே, ஈசாப் கதைகளிலே மிருகங்கள் பேசுகின்றன. வேறு சில கற்பனைக் கதைகளிலும் மிருகங்கள் பேசலாம். ஆனால், உண்மையிலேயே மிருகங்கள் நம்மைப் போல பேசுமா? 'பேசாது' என்பதுதான் எல்லார்க்கும் தெரியுமே!

மிருகங்களுக்குப் பேசும் சக்தி இருந்தால்...?

ஒவ்வொன்றும் தன்னுடைய கதையைத் தானே நமக்குக் கூறுமல்லவா? அவைகளுக்குப் பேசும் சக்தியில்லாததால், அவைகளுக்குப் பதிலாக அவை கூறுவதுபோல் இப்புத்தகத்தில் நான் கூறியிருக்கிறேன்...''

-இப்படி நூலின் தொடக்கத்தில் அமைந்துள்ள 'மிருகங்கள் பேசினால்...?' என்னும் நூலின் முன்னுரைப் பகுதியில் வள்ளியப்பா குறிப்பிட்டுள்ளார். இல்லை வாசகர்களான குழந்தைகளிடம் பேசியிருக்கிறார்.

மிருகங்கள் பேசப்போகும் நூலில், முதலில் கவிஞரே குழந்தைகளிடம் மேற்கண்டவாறு பேசியுள்ளார். இந்நூலில் சிங்கம், கங்காரு முதலிய பத்து மிருகங்கள் பேசுவதுபோலச் சுவையாக எழுதியுள்ளார் ஆசிரியர்.

''ஆமாம், இந்த மிருகங்களைப் பற்றி யெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று தானே கேட்கிறீர்கள்'' - என்று தாமே கேட்டுக் கொண்டு, தாம் பல ஆங்கில நூல்களைப் படித்துத்தெரிந்து கொண்டதையும், சென்னை மிருகக் காட்சி சாலைக்குச் சிலமுறை நேரில் சென்றதையும், அங்குள்ள பணியாளர்களிடம் பேசிப் பல செய்திகளைத் தெரிந்து கொண்டதையும் குறிப்பிடுகிறார்.

நிபுணர் கருத்து

கவிஞர் அத்துடன் மனநிறைவு கொள்பவர் அல்லர். அதனால் நூல் முழுவதையும் எழுதிய பிறகு, அச்சுக்குத் தரவில்லை. ''மிருகங்களைப் பற்றி நன்கு தெரிந்த ஒரு நிபுணர் அதைப் பார்வையிட்டால் நன்றாயிருக்குமே!'' என்று நினைக்கிறார். அதன்படி, தமிழ் நாட்டு வனவிலங்கு அதிகாரி திரு.எம்.ஏ. பாட்சா அடவர்களிடம் தாம் எழுதியதைக் கொடுக்கிறார். அவர் நூலைப் படித்து சில யோசனைகள் கூறியுள்ளார். அவற்றை ஏற்று, செய்ய வேண்டிய திருத் தங்களைச் செய்து - பின்னரே நூலை அச்சுக்குத் தந்துள்ளார்.

இதுதான் குழந்தைக் கவிஞர் இயல்பு. அவர் எதை எழுதினாலும் பாலர்கள் முதல் கற்றுத் தேர்ந்த நண்பர்கள் வரை பலரிடமும் காட்டுவார். கருத்துக் கேட்டு, ஏற்க வேண்டியதை ஏற்றுக் கொள்வார். விலங்கியல் பற்றிய இந்த நூலில் அதையே மேலும் கவனத்துடன் செய்திருக்கிறார்.

வியக்கச் செய்யும் உண்மைகள்

இந்த நூலைப் படிக்கும் சிறுவர்கள் வியப்பும் களிப்பும் அடைவதைப் போல, பெரியவர்களும் இதில் உள்ள சில உண்மைகளைப் படித்து, வியந்து மகிழ்வார்கள்.

''பன்றி பல குட்டி, சிங்கம் ஒரு குட்டி!''

''பன்றி பல குட்டி என்பது சரிதான். ஆனால் சிங்கம் ஒரு குட்டி என்பதுதான் தவறு. ஒரே பிரசவத்தில் மூன்று, நான்கு குட்டிகள் எங்கள் இனத்தில் பிறக்கும்''

* * *

கங்காரு குட்டி பிறந்தவுடன் ஓர் அங்குல உயரம்தான் இருக்கும்.

* * *

''மூன்று சக்கர சைக்கிள் வண்டியை என் வாய்க்குள் நிறுத்தி, அதன்மேல் ஒரு சிறுவன் அல்லது சிறுமி தாராளமாக உட்கார்ந்து கொள்ளலாம்'' என்கிறது நீர்யானை.

* * *

''உலகிலேயே அதிக நீளம் தாவியவர் ஒரு ரஷ்யக்காரராம். அவரும் எவ்வளவு தூரம் தாவினார் என்று நினைக்கிறீர்கள்? என்னைப்போல் முப்பது அடி தூரமா? இல்லை! இருபத்தேழு அடி, மூன்று அங்குலம்தான்!... ஒரே தாவில் என்னால் முப்பதடி தூரம் தாவ முடியும்.''

வள்ளியப்பா 1962ஆம் ஆண்டு இத்தகவல்களைத் திரட்டித் தம் நூலை வெளியிட்டார். அதனால் தாவும் வீரர் சாதனை, அந்த ஆண்டுச் சாதனை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இதுவரை இங்கே குறிப்பிட்ட நூல்கள் யாவும் வள்ளியப்பா குழந்தைகளுக்காக எழுதிய உரைநடை நூல்கள்.

இவற்றைத் தவிர தமிழ்க் குழந்தை இலக்கியம் பற்றி மிகச் சிறந்த ஒரு நூலை, 'வளர்ந்து வரும் குழந்தை இலக்கியம்' என்னும் தலைப்பில் எழுதியுள்ளார். உண்மையில் இது சென்னைப் பல்கலைக் கழகத்தில், 1979ஆம் ஆண்டு, அக்டோபர், 11, 12, 13 தேதிகளில், கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி

நினைவு அறக்கட்டளைச் சொற் பொழிவுகளாகக் கவிஞர் வழங்கியவை. இது, குழந்தை இலக்கிய வரலாற்றைக் கூறும் நூல். இந்த இலக்கியத்தில் ஆர்வமும் ஆற்றலும் மிக்கவர் களுக்குப் பெரிதும் துணை செய்யும் நூலாகும். இது பெரியோர்க்காக எழுதப்பட்ட நூல்.

பல்லைக்கழகத்தில் வழங்கிய இந்த ஆய்வுரையில் வள்ளியப்பா ஒரு புதிய கருத்தை முன்வைத்தார்:

''குழந்தைகளுக்காக எத்தனையோ நாடோடிப் பாடல்கள் தமிழ் மொழியில் வாய்மொழியாக வழங்கி வந்திருப்பினும், நூல் வடிவிலே குழந்தைப் பாடல்களைத் தந்த பெருமை ஔவையாருக்கே உரியது எனச் சிலர் கருதுகின்றனர்.

> அறம் செய விரும்பு
> ஆறுவது சினம்

என மிகச்சிறு குழந்தைகளுக்கும்,

> அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
> ஆலயம் தொழுவது சாலவும் நன்று

எனச் சற்று வளர்ந்த குழந்தைகளுக்கும் ஔவையார் அகர வரிசையில் பாடல்களை அமைத்துத் தந்துள்ளார் எனவும் அவர்கள் எடுத்துக் கூறுகின்றனர்.

குழந்தைகளை மனக்கண்முன் நிறுத்தி இப்பாடல்களை ஔவையார் பாடியிருப்பாரா? - என்பது ஐயத்துக்குரியது. படித்தவர், படிக்காதவர் அனைவருக்கும் பயன்படும் வகையில் பழமொழி போல் இப்பாடல்களை ஔவையார் பாடியிருக்க வேண்டும் என்றே தோன்றுகிறது...

... ஔவையாரின் மற்றொரு நூலான 'கொன்றை வேந்தன்', ஔவையாரைப் பின்பற்றி அதிவீர ராமபாண்டியன் இயற்றிய, 'வெற்றி வேற்கை', உலகநாதரின் 'உலகநீதி' - இவற்றில் எதையுமே சிறுவர் இலக்கியத்தில் சேர்க்க இயலாது.''

வள்ளியப்பா அவர்களின் இந்தக் கருத்துப் புதுமையாக இருந்தது. அதே கட்டுரையில் தமது கருத்துக்கு ஆதாரமாக டாக்டர் மு. வரதராசனாரின் கருத்தான பின் வரும் வரிகளை எடுத்துக் காட்டுகிறார்.

'தமிழ் இலக்கிய வரலாறு' நூலில டாக்டர் மு. வரசராசனார், ஔவையாரின் ஆத்திசூடியையும் சேர்த்துத் தமது கருத்தைக் கூறுகிறார்:

''இவற்றில் குழந்தைகளின் அறிவுக்கு எட்டாத ஆழ்ந்த கருத்துக்கள் உள்ளன. சிறுசிறு சொற்களால், சில தொடர்களால் அமைந்தமை பற்றிச் சிறுவர்களின் இலக்கியம் என்று சொல்லி விட முடியாது. அவற்றின் வடிவம் மட்டுமே குழந்தை இலக்கியத்திற்கு உரியது. அவற்றின் பொருள் குழந்தை மனதுக்கு எட்டாதது.''

ஔவையாரின் மற்றொரு நூலான 'கொன்றை வேந்தன்', ஔவையாரைப் பின்பற்றி அதிவீர ராம பாண்டியன் இயற்றிய 'வெற்றி வேற்கை', உலகநாத பண்டிதரின் 'உலகநீதி' - இவற்றில் எதையுமே சிறுவர் இலக்கியத்தில் சேர்க்க இயலாது.''

(நூல்: வளர்ந்து வரும் குழந்தை இலக்கியம் - பக். 9-10)

வள்ளியப்பா அவர்கள் தமது புதிய கருத்தை இத்துடன் நிறுத்திவிடவில்லை.' இதற்கு - பெரியோர்க்காகப் படைக்கப் பட்டவற்றைக் குழந்தைகளுக்காகப் படைக்கப் பட்டவை என்று தவறாக எடுத்துக் கொண்ட மைக்கு ஈசாப் கதைகளையும் சான்றாகக் கூறுகிறார்:

''கிரேக்க அறிஞரான ஈசாப் கூறிய கதைகளில் எதையுமே அவர் குழந்தைகளுக்காகக் கூறவில்லை. நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று, ஆங்காங்கே அவர் மக்கள் மத்தியில் கதைகள் கூறிவந்தார். குட்டிக் குட்டிக் கதைகளாக அவை இருந்தாலும், பெரும்பாலான கதைகளில் மிருகங்களும் பறவைகளுமே இடம்பெற்றிருந்ததாலும் சிறுவரும் அக் கதைகளைக் கேட்டு மகிழ்ந்தனர். அச்சிறுகதைகளுக்குப் புது மெருகிட்டு அவற்றை இன்று பல மொழிகளிலும் வெளி 0யிட்டுக் குழந்தை இலக்கியமாக்கிவிட்டனர்!

ஈசாப்பைப் போலவே மக்கள் மத்தியில் ஔவையாரும் அதிவீர ராம பாண்டியரும், உலகநாத பண்டிதரும் நீதிகளை எடுத்துக்கூறிப் பாடிய பாடல்கள், சிறுசிறு சொற்களால், சிறிய வடிவத்துடன் அமைந்ததால் பிள்ளைகள் பாடுதற்கு ஏற்ற வகையாகக் கருதப்பட்டிருக்க வேண்டும்.

-மேலே காட்டிய நூல் பக்.9-10

இதைத் தொடர்ந்து, ஆத்தி சூடியில் வரும்,

தையல் சொல் கேளேல்
மெல்லினல்லாள் தோள் சேர்
மோகத்தை முறி

முதலிய வரிகளையும்,

'கொன்றை வேந்தனில்' இடம்பெறும்

'ஒருவனைப் பற்றி ஓரகத்திரு'
'பிறன்மனை புகாமை அறம்எனத் தகும்'
'மைவிழியார் தம்மனை அகன்று ஒழுகு'

என்னும் வரிகளையும், .

வெற்றி வேற்கையில் இடம் பெறும்,

'விலை மகட்கு அழகு தன் மேனி மினுக்குதல்'

வரியையும் எடுத்துக் காட்டினார்.

வள்ளியப்பாவின் இந்த ஆய்வு, தமிழுல கத்துக்குப் புதியதாய் இருந்தது.

இந்த ஆய்வுரை - சென்னைப் பல்கலைக்கழகத்தில் நிகழ்த்திய ஆய்வுரை, 1981-இல் நூலாக வெளி வந்தது. அந்நூலுக்கு ம.ப. பெரியசாமி தூரன் அவர்கள் ஓர் அணிந்துரை வழங்கினார். அதில் மேற்கண்ட வள்ளியப்பாவின் புதிய கருத்தை, ஆத்திசூடி முதலியன சிறுவர் நூல்கள் அல்ல என்னும் கருத்தை ஆதரித்ததுடன், தமக்கும் அதே கருத்து என்பதைப் பின்வருமாறு தெரிவித்திருந்தார்:

'அறம் செய விரும்பு' போன்ற ஔவையார் இயற்றிய 'ஆத்திசூடி', 'கொற்கை வேந்தன்' போன்ற நூல்கள் எவ்வாறு குழந்தை இலக்கியம் ஆகா என்று துணிச்சலோடு கூறியவர் நம் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளிப்பாதான். நானும் இக்கருத்தை முற்றிலும் ஆமோதிக்கிறேன். சிறுசிறு அழகிய சொற்களைக் கொண்டு உயர்ந்த நீதிகளைப் புகட்டுவதில் தனிச்சிறப்பு உடையவை என்றாலும், அவை குழந்தைப் பாடல்கள் ஆகமாட்டா.''

(அதே நூல், பக்.9)

ஆத்திசூடி, கொன்றை வேந்தன் முதலிய நூல்களைப்பற்றிய வள்ளியப்பாவின் புதிய கருத்து, இவ்வாறு தமிழறிஞர்களும் ஆர்வலர்களும் நிறைந்த அவையில் அரங்கேறி, குழந்தை இலக்கியத்துறையில் பேரனுபவமும் ஆற்றலும் பெற்ற தூரன் அவர்களின் அங்கிகாரத்தையும் பெற்றது.

இங்கே, முன்னரே எழுதப்பட்ட சின்னஞ்சிறு இலக்கியம் பற்றிய, ஓரளவு சர்ச்சை உண்டாக்கிய வள்ளியப்பாவின் கருத்தைப் பார்த்தோம். இதுபோலவே குழந்தை இலக்கியம் தொடர்பான வேறொரு சர்ச்சையிலும் வள்ளியப்பா அவர்கள் ஈடுபட நேர்ந்தது. அதையும் இங்கே காண்போம்:

சிறுவர் இதழ்களின் பொற்காலம் என்று கூறத்தக்கது 1942 முதல் 1952 வரையிலான காலம். அதன் பிறகும் அவ்வப்போது ஓரிரு சிறுவர் இதழ்கள் தோன்றினாலும் மேலே குறிப்பிட்ட பத்தாண்டுகளில் தோன்றிய சிறுவர் இதழ்களில் விற்பனையில் ஒரு பரபரப்பு ஏற்படுத்திய பெருமை 'கல்கண்டு' இதழையே சாரும்.

*1951*ஆம் ஆண்டின் இறுதியில் *(1.10.1951 இதழில்)* கல்கண்டு இதழில் அதன் ஆசிரியர் தமிழ்வாணன், தாம் கல்கண்டில் தொடங்கவிருந்த 'மர்ம மனிதன்' என்னும் தொடர்கதைக்கு முன்னோட்டம் போல ஓர் அறிவிப்பு வெளியிட்டார். அதில் ''இப்பொழுது நமக்கு வேண்டியது நீதிகள் அல்ல; துப்பாக்கியைக் கண்டு தூர ஓடக்கூடாது. அதைத் தொட்டுப் பார்க்கும் வீர உணர்ச்சி வேண்டும்'' என்று அழுத்தம் திருத்தமாய்க் கூறி, துப்பாக்கிக் கதைகளின் அவசியத்தை வலியுறுத்தினார். இந்த அறிக்கையிலிருந்த ''இப்பொழுது

நமக்கு வேண்டியது நீதிகள் அல்ல'' என்னும் வரியைப் படித்து, பெற்றோர்கள், ஆசிரியர்கள் திகைப்படைந்தனர். இந்தக் கருத்து வளரும் குழந்தைகளின் மனத்தைக் கெடுக்கும் என்று நம்பினர். அவர்கள், அப்போது பூஞ்சோலையின் ஆசிரியராய்த் திகழ்ந்த குழந்தைக் கவிஞர் வள்ளியப்பாவை தொலைபேசி மூலமும், கடிதங்கள் மூலமும், நேரிலும் தொடர்புகொண்டு, தமிழ்வாணனின் அறிவிப்பைக் கண்டிக்குமாறு வேண்டினர்.

பொதுவாக எந்த சர்ச்சைக்கும் இடம்கொடுக்காத வள்ளியப்பா இப்போது அமைதியாய் இருக்கவில்லை. குழந்தைகள் நலன் கருதியும், குழந்தை இலக்கியத்தின் நலம் கருதியும், மேலே கண்ட கருத்துக்கு, தாம் கௌரவ ஆசிரியராகத் திகழும் பூஞ்சோலை (நவம்பர்-1, 1951) இதழில் ''துப்பாக்கிக் கதைகள்'' என்றும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினார்.

''இப்பொழுது நமக்கு வேண்டியது நீதிகள் அல்ல''

-இந்த வாக்கியத்தைத் திரும்பத் திரும்பப் படித்துப் பார்த்தோம். படிக்கப் படிக்க நம்முடைய மனம் மிகவும் வேதனைப்பட்டது.

இப்பொழுதுதான் நமக்கு நீதிகள் தேவை! நீதிக்கதைகள் தேவை! அரிசிப் பஞ்சம், துணிப்பஞ்சம், வீட்டுப் பஞ்சம் முதலியவற்றுடன் ஒழுக்கப் பஞ்சம், நீதிப் பஞ்சம், முதலியவை பெருகி நிற்கும் இந்தக் காலத்தில்தான் நமக்கு நீதிக் கதைகள் தேவை. எங்கு பார்த்தாலும் லஞ்சம்! எங்கு பார்த்தாலும் கள்ள வியாபாரம்! நீதி மன்றத்தில் தினந்தோறும் வரும் வழக்குகளுக்குக் கணக்கில்லை. சிறைச் சாலைகளில் கைதிகளை அடைத்து வைக்க இடமில்லை.

இப்பொழுதுதான் இப்படி மோசமாக இருக்கிறதென்றால் வருங்காலத்திலாவது, நீங்களெல்லாம் பெரியவர்களான பிறகாவது, நாடு நன்னிலை அடையாதா என்று அறிவாளிகள் ஏங்கி, எதிர்பாக்கின்றனர். இச்சமயத்தில் நீதிகள் தேவை இல்லை என்று ஓர் ஆசிரியர், அதிலும் குழந்தைப் பத்திரிகை ஆசிரியர் 'உபதேசம்' செய்வது?

....

சிறிய வயதில் ஏற்படக்கூடிய பழக்க வழக்கங்களும் மனத்தில் பதியக்கூடிய உண்மைகளுமே சாகும்வரையில் ஒருவனிடம் நிலையாக நிற்கின்றன.

நீதிக்குக் காலம் கிடையாது, கணக்குக் கிடையாது. எந்தக் காலத்திலும், எந்த நேரத்திலும் அது நமக்கு வேண்டியதுதான்! நீதி நம் இரத்தத்திலே ஊற வேண்டும்! நெஞ்சிலே நிலைக்க வேண்டும்! வாழ்க்கையில் கலக்க வேண்டும். "There is no moral holiday" என்று ஆங்கிலத்தில் கூறுகிறார்கள். அதாவது, நீதிக்கு விடுமுறையே கிடையாது! எந்தக் காலத்திலும் நீதியை மறந்து நாம் வாழக் கூடாது! .... பொதுவாக எல்லோருக்கும், விசேஷமாக குழந்தைகளுக்கு முக்கியமானவை நீதிக்கதைகளே! இது நாங்கள் புதிதாகக் கண்டு பிடித்த உண்மையல்ல; உலகம் முழுதும் ஒப்புக் கொண்ட ஓர் உயர்ந்த உண்மை!''

வள்ளியப்பாவின் இந்தக் கட்டுரை மிகுந்த வரவேற்புப் பெற்றது. வள்ளியப்பா பிள்ளைகளின் பண்பு நலனில் கொண்டிருந்த அக்கறைக்கு இக்கட்டுரையும் ஒரு சான்றாகும்.

கவிஞர் வழங்கிய இவ்வுரை நடை நூல்கள் குழந்தைகள் விரும்பிப் படிக்கும் எளிமை உடையவை; கதைகள் போலச் சுவைக்கத் தக்கவை. அவர் மறைந்த பின்பும் மறுபதிப்புகள் காணும் பெருமை பெற்றுள்ளவை.

7
இதழ்கள்

"மண்ணில்
கருப்பெற்றுருப்பெற் றிளநடை
பெற்றுப் பின்னர் ஐந்தே ஆண்டு
வரப்பெற்றார், பத்திரிகை வாசித்தல்
உண்டென்றால் வாழ்க்கை பெற்றார்"

–இது பத்திரிகை பற்றித் தமிழில் வெளிவந்த முதல் பாடல். இதிலேயே சிறுவர் பத்திரிகையின் தேவையும் சிறப்பும் சேர்ந்து வந்திருப்பது குழந்தை இலக்கியத்துக்கே ஒரு பெருமை. இதனை இயற்றியவர் பாவேந்தர் பாரதிதாசன்.

அவர் கூறுவது என்ன?

ஐந்து வயது சிறுவர்களும் பத்திரிகை படித்தால் அதனால் நல்ல வாழ்க்கை பெற்றவர்கள் ஆவார்கள் என்று கூறுகிறார். ஐந்து வயது சிறுவ்ர்கள் பெரியவர்களின் பத்திரிகையைப் படிக்குமாறு கூறவில்லை. அவர்கள் தமக்கேற்ற பத்திரிகைகளைப் படிக்குமாறு கூறுகிறார். அதாவது, குழந்தைப் பத்திரிகைகளைக் குழந்தைகள் படிக்க வேண்டும் என்று கூறுகிறார், 'பாரதிதாசன் கவிதைகள்' - நூலின் முதல் பதிப்பு 1938இல் வெளிவந்தது. அதிலேயே இந்தப் பாடல் இடம் பெற்றுள்ளது.

சிறுவர் இதழ் பற்றிய முதல்பாடல்

இந்தப் பாடல்தான் பத்திரிகை பற்றிக்கூறும் முதல் தமிழ்ப்பாடல்.

தமிழின் முதல் பத்திரிகை 1831இல் தோன்றிய 'தமிழ்ப் பத்திரிகை' (Tamil Magazine) என்று கூறுகிறார்கள். இதன்படி தமிழின் முதல் பத்திரிகை வந்த ஏழே ஆண்டுக்குள் பாவேந்தர் 'குழந்தைப் பத்திரிகையைக் குழந்தைகள் படித்தால் நல்ல வாழ்க்கை பெறுவார்கள்' என்று கூறுகிறார். இதுதான் நமது நாட்டில் - இந்தியாவில் குழந்தைப் பத்திரிகை - சிறுவர் பத்திரிகை பற்றிப் பேசும் முதல் பாடல் என்பது தமிழர்க்குப் பெருமையாகும்.

முதல் சிறுவர் இதழ்

தமிழின் முதல் பத்திரிகை 1831இல் தோன்றிய 'தமிழ்ப் பத்திரிகை' (Tamil Magazine) என்பதுதான். அது தோன்றிய ஏழே ஆண்டுக்குள் சிறுவர் இதழின் தேவையைப் பற்றிப் பாவேந்தர் பாடுவது தமிழுக்குப் பெருமை. பெரியோர்க்கான முதல் தமிழ்ப் பத்திரிகை தோன்றிய பத்தே ஆண்டுக்குள் - 1840இல் முதல் தமிழ்ச் சிறுவர் இதழ் தோன்றிவிட்டது. பெயர்: பால தீபிகை. அன்றைய மரபுப்படி அதன் ஆங்கிலப் பெயராக, "Children's Lamp' என்பது அதிலேயே குறிப்பிடப் பெற்றது. இந்தச் சிறுவர் இதழ் 1852 வரை - அதாவது குறைந்தது பதின்மூன்று ஆண்டுகள் வரை வெளிவந்தது என்பதை, ஜான் முர்டாக் (John Murdoch) என்பவர் தாம் தொகுத்து வெளியிட்ட, 'Classified Catalog of Tamil Printed Books' - என்னும் நூலில் குறிப்பிடுகிறார். அதன்பிறகு வெளிவந்த பல சிறுவர் இதழ்களின் பட்டியலையும் அவர் தந்துள்ளார்.

அதையொட்டிய காலத்தில் பலப்பல சிறுவர் இதழ்கள் தமிழில் தோன்றின. குழந்தைக் கவிஞர் வள்ளியப்பா அந்தக் காலக்கட்டத்தில் சிறுவர் இதழ்களில் பங்கு கொண்டு சிறந்த பணி செய்துள்ளார்.

பாலர் மலர், டமாரம், சங்கு

1944இல் 'பாலர் மலர்' என்னும் சிறுவர் மாதம் இருமுறை இதழ் தோன்றியது. பாக்கெட் புத்தக அளவில் 16 பக்கங்களைக் கொண்டு - ஓரணா (ஆறுகாசு) விலையில் புதுக்கோட்டையி லிருந்து இது வெளிவந்தது. இதனை வெளியிட்டவர், இராய

வரத்தைச் சேர்ந்த வெ.சுப. நடேசன். அவரே 'டமாரம்' என்னும் அரையணா (மூன்று காசு) விலை கொண்ட வார இதழையும், வாரம் இருமுறை - அதாவது சனியும் புதனும் வெளிவந்த சங்கு இதழையும் வெளியிட்டார். சங்கின் விலை காலணா ($1^1/_2$ காசு) சென்னையிலிருந்த கவிஞர் வள்ளியப்பாதான் அந்த மூன்று இதழ்களுக்கும் உண்மையான ஆசிரியராக - பெயர் பிரசுரிக்கப்படாத மெய்யாசிரியராகத் திகழ்ந்தார்.

வள்ளியப்பாவின் சாதனை

வள்ளியப்பா சென்னையிலிருந்தே, இந்த மூன்று இதழ்களில் பிரசுரமாக வேண்டிய அனைத்தையும் தயார் செய்து அனுப்பினார். இந்த இதழ்களுக்குத் தேவையான படங்களை ஓவியர்களைக் கொண்டு இவரே தயாரித்து, அவற்றைப் 'பிளாக்' செய்து - அனைத்தையும் அஞ்சல் வழி புதுக்கோட்டைக்கு அனுப்பி வந்தார். சரியான நேரத்தில் தவறாமல் போய்ச் சேருமாறு அனுப்பி வந்தார். பாலர் மலர் சுமார் ஏழரை ஆண்டுக்காலாம் வெளிவந்தது. டமாரமும் சங்கும் அதற்குக் குறைவான காலம் வெளிவந்தன. மூன்று இதழ்களும் தீபாவளி மலர்கள் வெளியிட்டன. என்றாலும் வள்ளியப்பா, அவை குறித்த தேதியில் தவறாமல் வெளிவருமாறு தயாரித்து அனுப்பியது நம்ப முடியாத சாதனையாகும். அதுவும் தமது வங்கிப் பணியைப் பார்த்துக் கொண்டே இந்தச் செயல்களைக் குறையில்லாமல் செய்தது செயற்கரிய மாபெரும் சாதனையாகும்.

இந்த மூன்று இதழ்களுக்கும், தீபாவளி மலர்கள் தயாரித்து அனுப்பியதும் - அவை புகழ் பெற்றதும் மற்றொரு சாதனையாகக் கருதத் தக்கது.

அந்தக் காலக்கட்டத்தில் ஓவியர்கள் சொக்கன், தேவன் (பின்னர் இவர் 'மாயா' என்று தம் பெயரை மாற்றிக் கொண்டார்) அருண், பிரசாத் முதலிய ஓவியர்களின் திறன் வளர, செம்மையுற, வள்ளியப்பா உதவினார்.

இந்த மூன்று இதழ்களும் புதுக்கோட்டையில் இருந்த, பரசுராமையருக்கு உரிமையான கண்ணபிரான் அச்சகத்தில் அச்சிடப் பெற்றன.

மூன்று இதழ்களும் காலம் தவறாமல் வெளிவந்தன என்பதும் சிறப்பேயாகும்.

மெய்யாசிரியர்

வள்ளியப்பா இந்த மூன்று இதழ்களில் பெயர் அறிவிக்கப்படாத - மெய்யாசிரியராகத் திகழ்ந்து மேன்மையுறச் செய்தார். ஒரு புகழ் வாய்ந்த வங்கியில் பணியாற்றி வந்ததால் ஆசிரியர் என்று அவர் பெயர் அறிவிக்கப்படவில்லை.

வள்ளியப்பாவின் படைப்பாற்றலைப் போலவே இந்தப் பத்திரிகை ஆசிரியப் பொறுப்பையும் குறையற நிறை வேற்றியது, வேறு யாரும் செய்யாத சாதனை என்பது உண்மை.

பாலர் மலர் முதலிய இதழ்களுக்கு வேண்டிய அனைத்தும் - அவற்றின் முன் அட்டை முதல் பின் அட்டைவரை - பிரசுரிக்க வேண்டிய அனைத்தையும் அவர் தாமே தம் கைப்பட எழுதி அனுப்பினார். ஓவியங்களைத் தம் நேரடிப் பார்வையில் - உரிய யோசனைகள் சொல்லித் தயாரித்து அனுப்புவார். அப்போது சென்னை, பிராட்வேயில் இருந்த எஸ்.எஸ்.எஸ். பிரதர்ஸ் என்னும் புகழ் வாய்ந்த பிளாக் செய்யும் கம்பெனி மூலம் பிளக்குகள் செய்து அனுப்புவார். அது கூரியர் இல்லாத காலம். அதனால் அனைத்தையும் அஞ்சல் மூலம் அனுப்புவார். அவை தவறாமலும் தாமதமின்றியும் புதுக்கோட்டையை அடைந்து, இதழ்கள் யாவும் குறித்த நேரத்தில் வெளிவந்தன. இதை அன்றைய அஞ்சல் துறையின் செயல் திறத்துக்கு ஒரு நற்சான்றாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

இதழ்களுக்கான அனைத்தையும் தாமே தம் கைப்பட எழுதியனுப்பினார், கவிஞர்.

ஒரு முழுத்தாளை (flooscap) இரண்டாக மடித்து நோட்டுப் புத்தக அளவில் அமைத்துக் கொண்டு எழுதுவார், கவிஞர். இப்படி இரண்டாக மடிக்கப்பட்ட தாளின் ஒரு பக்கம், பத்திரிகையின் ஒரு பக்கம். அந்தப் பக்கத்தில் அச்சிட வேண்டிய பகுதியை எழுதுவதுடன், படம் எந்த இடத்தில் இடம் பெற வேண்டும் என்னும் குறிப்பையும் எழுதுவார். இதழில் விளம்பரம் இருந்தால் அதையும் தம் கைப்பட எழுதுவார்.

இப்படி பதினாறு பக்கங்கள் எழுதுவார், பாலர் மலருக்கு. பாலர் மலர், இன்றைய 'பாக்கெட் புக்' அளவில் வெளிவந்தது.

ஒரு மாதம் - பதினான்கு இதழ்கள்

டமாரத்துக்கும் இதே அளவில் தாளை மடித்து எழுதுவார். டமாரம் அளவு, விகடனின் அளவாகும். அதனால் அந்தப் பக்கத்துக்குத் தேவையான விஷயத்தை எழுதுவதற்காக, தம் கையெழுத்தின் அளவைச் சுருக்கிக் கொண்டு, சிறிய எழுத்துகளில் எழுதுவார்.

சங்கு, டமாரத்தில் பாதி அளவில் வெளிவரும் இதழ். அதற்கும் இதே அளவில்தாளை மடித்து, பாலர் மலரில் எழுதியதைவிடக் கொஞ்சம் பெரிய எழுத்தில் எழுதுவார்.

வள்ளியப்பா ஒரு பக்கத்துக்கு எழுதுவது அச்சில் கச்சிதமாக ஒரே பக்கம் இருக்கும்.

இப்படி ஒரு மாதத்தில், பாலர் மலர்-2, டமாரம்-4, சங்கு-8 ஆக, மொத்தம் 14 இதழ்களின் விஷயங்களைத் தம் கையாலே எழுதியினுப்பிய வள்ளியப்பாவின் பணி சிறந்தது, மட்டுமல்ல, ஒரு சாதனை! இவ்வளவு பணியையும் ஊதியம் பெறாமல், குழந்தை இலக்கியத்துக்குச் செய்யும் பணியாக - சேவை யாகவே கருதிச் செய்து வந்தார், என்பது அதிசயம்; ஆனால் உண்மை.

மூன்று இதழ்களும் வள்ளியப்பாவின் அனுபவத்தையும் உழைப்பையும் பெற்று வளர்ந்தன.

ஆனால் திடீரென மூன்ற இதழ்களும் ஒரே நேரத்தில் நின்றுவிட்டன. இந்த ஏமாற்றத்தைத் தாங்க முடியாமல் தமிழ்நாட்டுச் சிறுவர் சிறுமியர், கலங்கியதும் கண்ணீர் விட்டதும் உண்மை. சாதனைகளைத் தொடர்ந்து இந்த வேதனை வந்தது, குழந்தை இலக்கியத்தின் துரதிர்ஷ்டமே!

பாலர் மலர் 1951இல் நின்றது. டமாரம், சங்கு இதழ்களும் அதே சமயம் நின்றுவிட்டன.

இந்த இழப்பை ஈடு செய்வது போல அதே ஆண்டில் 'பூஞ்சோலை' மாத இதழ் தோன்றியது.

பூஞ்சோலை உதயம்

சென்னையில் சாந்திபிரஸ் என்னும் சிறந்த அச்சகத்தையும், 'புக்ஸ் இந்தியா லிமிடெட்' என்னும் சிறந்த பதிப்பகத்தையும் நடத்தியவர்களே இந்தப் பூஞ்சோலையைத் தொடங்கினர்.

அப்போது கவிஞர் தாம் பணியாற்றிய வங்கியிடம் அனுமதி பெற்று அதன் கௌரவ ஆசிரியரானார். கவிஞர் ஆசிரியர் என்று அறிவிக்கப்பட்டு வெளிவந்த முதல் இதழ் பூஞ்சோலையே!

பூஞ்சோலை, விகடன் அளவில் 64 பக்கங்கள் பெற்று, நாலணா (25 காசு) விலையில் மாத இதழாக 1951இல் வெளி வந்தது. இதழ் வெளியிட்ட மூன்று பொங்கல் மலர்களும் மூன்று சிறுவர் இலக்கியப் பெட்டகங்களாகும். மலரின் விலை ஒரு ரூபாய்.

துப்பாக்கிக் கதைகள்

கவிஞர் பூஞ்சோலையின் ஆசிரியராகத் திகழ்ந்தபோதுதான், குழந்தை இலக்கியத்தில் துப்பாக்கிக் கதைகள் புகுந்து ஒரு சர்ச்சை ஏற்பட்டது.

அப்போது குமுதம் நிறுவனம், சிறுவர்களுக்காக 'கல்கண்டு', இதழைத் தொடங்கியது. மாதமிருமுறை இதழாகத் தொடங்கிய கல்கண்டு, விரைவில் வார இதழானது. விற்பனையில் சாதனை செய்தது. 'குமுதம்' இதழுக்குரிய விளம்பரத்தைக் கல்கண்டில் வெளியிடுமளவு விற்பனை இருந்தது. இதன் ஆசிரியர் தமிழ்வாணன். இவர் 'அணில்' சிறுவர் வார இதழின் ஆசிரியராகத் திகழ்ந்து, அதைவிட்டுக் கல்கண்டுக்கு மாறியவர். இதழின் விற்பனையைப் பெருக்க அவர் சில புதிய வழிகளைப் பின்பற்றினார். அதில் ஒன்று, துப்பாக்கிக் கதைகளின் அறிமுகம்.

'நீதிகள் வேண்டாம்' என்ற அநீதி

தமிழ்வாணன், 1.10.1951 இதழ் கல்கண்டில் நீதிக்கதைகளை மறுத்து, துப்பாக்கிக் கதைகளை வரவேற்று ஒரு அறிவிப்பு வெளியிட்டிருந்தார்.

''மேல் நாடுகளில் குழந்தைகளுக்காக மயிர்க்கூச்செறியும் கதைகள் ஆயிரம் ஆயிரமாக எழுதப்படுகின்றன. குழந்தை களும் அவைகளை ஆசையோடு வாங்கிப் படிக்கிறார்கள். இங்கே அந்த மாதிரிக் கதைகள் மருந்துக்குக் கூடக் கிடையாது. இப்போது நமக்கு வேண்டியது நீதிகள் அல்ல. அவைகள் நம் சமுதாயத்திலும் நம் நூல்களிலும் ஏராளமாய், விதவிதமாய் இருக்கின்றன. நாம் மறந்துவிட்ட சமயங்களில் நினைவுபடுத்த நீதிபதிகள் இருக்கிறார்கள். இப்பொழுது நமக்கு வேண்டியது நெஞ்சு உரம். நேர்மைத்திறம். அச்சமில்லை என்று சொல்லும் ஆண்மைத் தனம். அந்தத் தன்மை அப்போதைக்கப்போது வளர்ந்து கொண்டே வரவேண்டும். கயிற்றைக் கண்டவுடன் பாம்பென்று பயப்படும் பயங்கொள்ளித்தனமும் நம் தம்பி, தங்கை களிடமிருந்து தகர்த்தெறியப்பட வேண்டும். துப்பாக்கியைக் கண்டு தூர ஓடக்கூடாது. அதைத் தொட்டுப் பார்க்கும் வீர உணர்ச்சி வரவேண்டும். அந்த உணர்ச்சி என்றைக்குத்தான் வரப்போகிறதோ!

'மர்ம மனிதன்' (அப்போது கல்கண்டில் தமிழ்வாணன் தொடங்கிய தொடர்கதை) மயிர்க்கூச்செறிய வைக்கும் மர்மமான, நீண்ட தொடர்கதை. திடீர் திடீரென்று கொலைகள் நடக்கின்றன. எத்தனைக் கொலைகள் எப்படி எப்படி நடக்கின்றன!''

தமிழ்வாணனின் கொலை-கொள்ளைக் கதைகளை ஆதரிக்கும் இந்த அறிவிப்பைக் கண்டு சிறுவர் சிறுமியரும் பெற்றோரும் மிகுந்த வருத்தத்தோடு வள்ளியப்பா அவர் களுக்குக் கடிதம் எழுதினார். பலர் நேரில் வந்து தம் கண்டனத்தைத் தெரிவித்தார்கள். அதனால் வள்ளியப்பா 1951, நவம்பர் பூஞ்சோலை இதழில், தமிழ்வாணன் கருத்தை மறுத்து ஒரு கட்டுரை வெளியிட்டார்.

''அரிசி பஞ்சம், துணிப்பஞ்சம், வீட்டுப் பஞ்சம் முதலிய வற்றுடன், ஒழுக்கப் பஞ்சம், நீதிப்பஞ்சம் முதலியன பெருகி நிற்கும் இந்தக் காலத்தில்தான் நமக்கு நீதிக் கதைகள் தேவை. எங்கு பார்த்தாலும் லஞ்சம்! எங்கு பார்த்தாலும் கள்ள வியாபாரம்! நீதிமன்றத்தில் தினந்தோறும் வரும் வழக்கு

களுக்குக் கணக்கில்லை! சிறைச் சாலைகளில் அடைத்து வைக்க இடமில்லை.

நீதிதேவை! நிதமும் தேவை!

''...நம் சமுதாயத்திலும், நம் நூல்களிலும் ஏராளமாய், விதம்விதமாக நீதிகள் இருக்கின்றன'' என்கிறார் (கல்கண்டு) ஆசிரியர். உண்மைதான்! 'பானையில் சோறு இருக்கிறது' என்று கூறிக்கொண்டே இருந்தால் வயிறு நிரம்பி விடுமா? பசி பறந்து போகுமா? தட்டிலே எடுத்துப் போட்டுச் சாப்பிட்டால்தானே வயிறு நிறையும்? அதுபோலத்தான் நீதி விஷயமும்... நீதிகளைக் குழந்தைகளுக்கு, அடிக்கடி, விதம் விதமான வகைகளில் எடுத்துக் கூறினால்தான் நீதி பெருகும், நியாயபுத்தி வளரும்...!

நீதிக்குக் காலம் கிடையாது; கணக்குக் கிடையாது! எந்த நேரத்திலும் அது நமக்கு வேண்டியதுதான். நீதி நம்முடைய இரத்தத்திலே ஊற வேண்டும். நெஞ்சிலே நிலைக்க வேண்டும். வாழ்க்கையிலே கலக்க வேண்டும்... நீதிக்கு விடுமுறை கிடையாது. எந்தக் காலத்திலும் நீதியை மறந்து நாம் வாழக்கூடாது.''

மேலே கண்டது தமிழ்வாணின் 'நீதிகள் நமக்கு வேண்டியதில்லை' என்னும் கருத்தை மறுத்து வள்ளியப்பா எழுதிய நீண்ட கட்டுரையின் ஒரு சிறுபகுதி.

வள்ளியப்பாவின் மறுப்புக்கட்டுரையை, எல்லாத் தரப்பினரும் வரவேற்று ஆதரித்தனர். அதனால் தமிழ்வாணனும், 'நீதிகள் தேவையில்லை' என்னும் குரலைத் தணித்துக் கொண்டார்.

கோகுலம்

'கல்கி' நிறுவனம் 'கோகுலம்' என்னும் அருமையான சிறுவர் இதழை 1972இல் தொடங்கியது. பின்னர் கல்கி நின்றுபோனபோது கோகுலமும் நிறுத்தப்பட்டது. சில காலம் கழித்து, வள்ளியப்பா வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றபோது, அவரைக் கௌரவ ஆசிரியராகக் கொண்டு

கோகுலம் மீண்டும் தொடங்கப்பட்டது. கோகுலத்தின் வளர்ச்சிக்குக் கவிஞரின் முன் அனுபவம் நன்கு பயன்பட்டது. கவிஞர் 1989, மார்ச் திங்களில் மரணமடையும்வரை அவரே கோகுலத்தின் ஆசிரியராகத் திகழ்ந்தார்.

சிறுவர் இதழை எவர் தொடங்கினாலும், அவர் வள்ளியப்பாவின் உதவியை நாடுவார். கவிஞரும் வாழ்நாள் முழுவதும் சிறுவர் இதழ்ப் பணிக்காகத் தம்மால் இயன்ற உதவிகளைத் தயங்காமல் செய்து வந்தார் என்பது அவரது சிறப்பு.

8

சங்கம்

குழந்தைகளுக்கு எழுதுவோர் தமிழகத்தில் மாணவர்களும் பெரியவர்களுளுமாக ஏராளமானவர் தோன்றினர். அவர்களில் பெரும்பாலோர் குழந்தைக் கவிஞர் வள்ளியப்பாவை நேரில் ஒருமுறையாவது சந்திப்பதைத் தம் இலட்சியமாகக் கொண்டிருந்தனர் என்பது மிகைக் கூற்று அன்று. விடுமுறை நாட்களில் அவரைக் காணவருவோர் மிகப்பலர்.

இருமணிகளின் ஒரு வேண்டுகோள்

அவர்களில் குறிப்பிடத்தக்க இருவர், தங்கமணி, நெ.சி. தெய்வசிகாமணி. இருவரும் கவிஞர் வீட்டுக்கு அருகே வசித்தனர். அந்த இருவரும் கவிஞரிடம், 'குழந்தைகளுக்காக இவ்வளவு பேர் எழுதுகிறார்கள். இவர்களுக்காக ஒரு சங்கம் அமைக்கலாமே!' என்று ஒரு யோசனை தெரிவித்தனர். கவிஞர் அந்த யோசனையை ஏற்றுக் கொண்டார். அதன்படி அந்த எழுத்தாளர்களைக் கூட்டி, ஒரு சங்கம் - குழந்தை எழுத்தாளர் சங்கம் - என்னும் பெயரில் ஓர் அமைப்பு உருவாக்க முடிவு செய்தார்.

குழந்தை எழுத்தாளர் சங்கம்

இங்கே ஒன்றைக் குறிப்பிடவேண்டும்.

குழந்தைகளுக்காக எழுதுவோரை 'குழந்தை எழுத்தாளர்', என்னும் பெயரால் முதன்முதலில் குறிப்பிட்டவர், வள்ளியப்பாவே. அதனால் தாமறிந்த எல்லாக் குழந்தை எழுத்தாளர்களையும், ஒரு நாள் 'பழனியப்பா பிரதர்ஸ்' பதிப்பகத்தின் உரிமையாளர், பழனியப்பாவின் வீட்டுக்கு வருமாறு கடிதம் மூலம் அழைப்பு விடுத்தார்.

சென்னை ஆயிரம் விளக்குப் பகுதியில் இருந்த பழனியப்பா வீட்டில் 1950ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13ஆம் தேதி, தமிழ்ப் புத்தாண்டு நாளில் குழந்தை எழுத்தாளர்கள் பழனியப்பாவின் வீட்டில் கூடினர். அக்கூட்டத்தில்தான் 'குழந்தை எழுத்தாளர் சங்கம்' தோன்றியது. வள்ளியப்பாவை அதன்முதல் தலைவராகத் தேர்ந் தெடுக்கவே எழுத்தாளர்கள் விரும்பினர். ஆனால் கூட்டத்துக்கு வருகை; தந்திருந்த சக்திக் காரியாலயம் உரிமையாளரும் அணில் சிறுவர் இதழை வெளியிட்டவருமான வை.கோவிந்தன் பெயரைக் கவிஞரே முன் மொழிய, அவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். வள்ளியப்பாவும், 'ஜில், ஜில்' இதழாசிரியர் ஏ. திருநாவுக்கரசும் (இன்று வானதி திருநாவுக்கரசு) பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர். இந்தக் கூட்டத்தில் இந்நூலாசிரியரும் கலந்து கொண்டார். 1956ஆம் ஆண்டு வை. கோவிந்தன் விரும்பியவாறு வள்ளியப்பா அதன் தலைவரானார். தலைவர் பொறுப்பில் அவர் செய்த செயல்கள். குழந்தை இலக்கியத்தை வளம்பெறச் செய்தன. குழந்தை எழுத்தாளரைப் பலனடையச் செய்தன.

உலகத்துக்கொரு புதுமை!

ஒருமுறை அமெரிக்காவின் சிறந்த குழந்தை எழுத்தாளரான மன்றோ லீஃப் (Munro Leaf) அவர்கள் சென்னைக்கு வந்தார். அவருக்கு, குழந்தை எழுத்தாளர் சங்கம் ஒரு வரவேற்பளித்தது. அப்போது இந்நூலாசிரியர் சங்கத்தின் செயலாளர். வள்ளியப்பா தலைவர். மன்றோ லீஃப்பிடம், 'உங்கள் ஊரில் குழந்தை எழுத்தாளர்க்கு என்று, தனியே ஒரு சங்கம் இருக்கிறதா?' என்று கேட்டனர்.

''இல்லை. இப்படி ஒரு சங்கம் எங்கள் நாட்டில் இல்லை. நான் சென்று வந்த எந்த நாட்டிலும் இல்லை'' என்று கூறினார்.

அப்போதுதான் கவிஞர் தொடங்கிய குழந்தை எழுத்தாளர் சங்கம் உலகத்துக்கு ஒரு புதுமை என்பது புரிந்தது.

சங்கத்தின் சாதனைகள்

தலைவர் வள்ளியப்பா இந்தக் குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் மூலம் செய்த சாதனைகள் பல. அவற்றில் முக்கியமான சிலவற்றை இங்கே காணலாம்.

1. தமிழ் நாட்டில் முதல் புத்தகக் காட்சியாக, குழந்தைப் புத்தகக் காட்சியை நடத்தினார்.

2. தமிழ் நாட்டிலே முதல் முறையாகக் குழந்தை எழுத்தாளர் புகைப்படக் காட்சி நடத்தினார். இதுவே முதல் எழுத்தாளர் புகைப்படக் காட்சியுமாகும்.

3. முதன் முதலாகக் குழந்தை இலக்கியத்துக்குப் பேரளவு தொண்டாற்றிய எழுத்தாளர்க்கும், பதிப்பாளர்க்கும் கேடயம் வழங்கிக் கௌரவித்தார்.

4. நேருவின் பிறந்த நாளான குழந்தைகள் நாளை, குழந்தை நூல்களின் வெளியீட்டு நாளாகத் தொடர்ந்து கொண்டாடினார்.

5. தமிழகத்தில் முதன் முதலில் குழந்தைகள் நாடக விழா நடத்தினார்.

- இவை சங்கம் செய்த சாதனைகளாகக் கருதக்கூடும். தனியொரு மனிதனின் முயற்சியால் இவை நடந்தன என்பதே உண்மை. ஆனால் சங்கத் தலைவர் வள்ளியப்பா அனைத்தையும் சங்கத்தின் சாதனைகளாகவே அறிவித்தது, அவரது அடக்கத்தைக் காட்டியது.

குழந்தை எழுத்தாளர் யார்? எவர்?

வள்ளியப்பா, சங்கத்தின் பெயரால் செய்த மற்றொரு சிறந்த செயல் - சிறந்த சாதனை, 'குழந்தை எழுத்தாளர் யார்? எவர்?' (Who is who of Children's writers) என்னும் நூலை 1950இல் சங்கத்தின் சார்பில் வெளியிட்டது. இதுவே தமிழில் வெளிவந்த முதல் 'யார்? எவர்?' நூல்.

இதே நூலை விரிவுபடுத்தி, விடுபட்ட பெயர்களைச் சேர்க்கச் செய்து 1972இல் பெரிய அளவு நூலாக வெளிவரச் செய்தவரும், வள்ளியப்பாவே.

பின்னர் 1987இல், "Who is who of Tamil writers for Children' என்னும் நூலையும் இச்சங்கத்தின் சார்பில் வெளியிட்டார். பிறமொழியினர்க்குப் பயன்பட வேண்டும் என்பதாலே இந்த ஆங்கில நூலை வெளியிட்டார்.

சங்கச் சார்பில் பல குழந்தை இலக்கிய மாநாடுகளைச் சிறப்புற நடத்திக் காட்டினார்.

தமிழ் எழுத்தாளர் சங்கம்

வள்ளியப்பா குழந்தை எழுத்தாளர் சங்கத்தில் செய்து வரும் பணியைப் பார்த்த, பெரியோர்க்காக எழுதும் எழுத்தாளர்களின் சங்கமான - தமிழ் எழுத்தாளர் சங்கம், இவரைத் தன் பொதுச் செயலாளராகவும், பின்னர் தலைவராகவும், தேர்ந்தெடுத்துக் கொண்டது. அந்தச் சங்கத்திலும் வள்ளியப்பா பல சாதனைச் செயல்கள் செய்து புகழ் பெற்றார்.

தென்மொழி புத்தக டிரஸ்டில் செய்த பணி

தமிழகத்தில் புதிதாக அமைந்த தென்மொழிப் புத்தக டிரஸ்ட்டின், குழந்தைப் புத்தகச் சிறப்பு அலுவலராக (Special Officer for Children Books-in Southern Languages Book Trust) சுமார் ஐந்தரை ஆண்டுக்காலம் சிறப்பாகப் பணியாற்றினார். பின்னர் மீண்டும் இந்தியன் வங்கிப் பணிக்கே திரும்பினார்.

டிரஸ்ட்டில் இருந்தபோது, கொழும்பு நகரில் யுனெஸ்கோ, நடத்திய கருத்தரங்கில் கவிஞர் கலந்து கொண்டு, ஒரு அடிப்படைக் கட்டுரை (Back ground Paper) தயாரித்து வழங்கினார்.

பிற பணிகள்

நேஷனல் புக் டிரஸ்ட், சிறுவர் நூல்களை வெளியிட விரும்பிய போது, அதுபற்றிய ஒரு கருத்தரங்கத்தை 1968இல் சிம்லாவில் நடத்தியது. அதிலும் கவிஞர் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

யுனெஸ்கோவுக்காக, 'தென்னிந்தியாவில் சிறுவர்களிடையே படிக்கும் பழக்கம்' பற்றி, கவிஞர் பல ஊர்களுக்கு

நேரில் சென்று ஆராய்ந்து ஓர் அருமையான - பயனுள்ள ஆங்கிலக் கட்டுரையை எழுதி வழங்கினார். வள்ளியப்பா, இவ்வாறு தாம் அமைத்த சங்கத்துக்கும் பிற இலக்கிய அமைப்புகளுக்கும் பேருதவிகள் செய்தார்; சிறந்த சாதனைகள் செய்து காட்டினார்.

9

பாராட்டு

பாராட்டு என்பது ஒரு மந்திரச் சொல். இச்சொல் சாதாரண ஒருவரைக்கூடச் சாதனையாளராக்கும் என்பர். குழந்தைக் கவிஞர் பலரைப் பாராட்டி, ஊக்குவித்து உயர்த்தியுள்ளார். இத்தகைய உத்தமரை எத்தனையோ பேர் தாம் அறிந்த வகையில் உரைநடையிலும், உயர் பாவிலும் பாராட்டி மகிழ்ந்துள்ளனர். அப்பாராட்டுகளில் சிலவற்றை இங்கே காணலாம்.

'பாலும் பழமும் ஏனம்மா?
பசியே இல்லை' எனக்கூறிச்
சீலச் சிறுவர் சிறுமியர்கள்
சிறந்த 'மலரும் உள்ளம்' இதைக்

காலை மாலை என்றென்றும்
கற்று மகிழச் செயும் இந்த்ர
ஜாலக் கவிஞன் வள்ளியப்பன்
தழைத்து வாழ்க! வாழ்கவே!

-கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

நல்ல கற்பனையும், சிறந்த உணர்ச்சிகளும், உயர்ந்த நோக்கங்களும், குழந்தைகளின் மனத்தில் பதியுமாறு பல பாடல்களைப் பாடித் தொகுத்துத் தந்துள்ளார், குழந்தைக் கவிஞர் திரு. வள்ளியப்பா.

-டாக்டர் மு. வரதராசனார்

புனிதமனக் குழந்தைகட்குப் புதுமையான
இலக்கியங்கள் படைத்தளித்த பூமானாகும்.

விநயகுண வள்ளியப்பா வெகுநீள் காலம்
சுகித்துவாழ விமலனருள் புரியும்திண்ணம்.

-நாமக்கல் கவிஞர்
வெ. இராமலிங்கம் பிள்ளை.

இனிய தமிழ்ப்பாட்டால் உள்ளத்தை அள்ளும் கவித்திறம் வாய்ந்தவர் திரு. வள்ளியப்பா. பிஞ்சு மனத்திற்கு உகந்த செஞ்சொற் கவிஞர் அவர்.

-சொல்லின் செல்வர்
ரா.பி. சேதுப்பிள்ளை

குடித்தவர் மேலும் குடித்துயர வந்து
வடித்தாய் கவிதை, வளர்தமிழில்! சென்று
பிடித்தால் பிடிபிருக்கும் பிஞ்சுகளும் வாங்கிப்
படித்தால் பதியும் படி!

- திருமதி சௌந்தரா கைலாசம்

வள்ளியப்பா ஒரு புள்ளியப்பா - அவர்
வரையும் பாக்கள் வெள்ளியப்பா!
வளரும் பிள்ளைக்குப் பள்ளியப்பா! - இளைஞர்
வருங்கா வத்திற்குத் தங்கமப்பா

-கொத்தமங்கலம் சுப்பு

திரு. வள்ளியப்பா இலக்கிய உலகில் பல சாதனைகளைப் புரிந்துள்ளார். தம் இளம் வயதில் இத்தனை சாதனைகளைப் புரிந்திருப்பது எவ்வளவு அரிய காரியம் என்பது பற்றிய பெருமையைச் சற்றும் இவரிடம் காண முடியாது. காலத்தில் தமக்கு முந்திக் குழந்தைக்கு எழுதியவர்களை - என்னைப் போல் ஒன்றிரண்டே எழுதியவர்களைக் கூடத்தான் - தனி மரியாதையுடன் போற்றுபவர், அழ. வள்ளியப்பா.

-தி.ஜ.ர.

குழந்தைகளுக்காக எழுதுவதையே இலக்கியப் பணியாகத் தம் வாழ்க்கையில் கொண்ட குழந்தைக் கவிஞர், குழந்தையைப் போல இயல்புடையவர். எப்பொழுதும் சிரித்த முகத்தோடு இருப்பார்.

-பெ.தூரன்

அவரோடு உரையாடுவது ஒரு சுகமான அனுபவம். மக்களைக் கூர்ந்து கவனித்து அவர்களின் குணங்களையும், செயல்களையும் நகைச்சுவையோடு சொல்வார்கள். நகைச்சுவை உணர்வு அவர்களுடன் பிறந்த ஒன்று.

-பாரி நிலையம்
க.அ. செல்லப்பன்

ஊர் என்றாலே 'உறையூர்'; பூ வென்றாலே 'தாமரை' என்பதுபோல, 'குழந்தைக் கவிஞர்' என்றாலே அது அழ. வள்ளியப்பாவைக் குறிப்பதாகவே அமைந்துவிட்டது.

-சிலம்பொலி செல்லப்பன்

10

முடிவுரை

குழந்தைக் கவிஞர் பெற்ற சிறப்புகளில் சிறந்தது, மதுரைக் காமராஜர் பல்கலைக்கழகம் அவருக்கு வழங்கிய 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' பட்டம்.

1982ஆம் ஆண்டு, ஜனவரித் திங்கள், ஒன்பதாம் நாளில், மதுரைக் காமராஜர் பல்கலைக்கழகத்தின் மு.வ. அரங்கில் - ஆன்றோரும் சான்றோரும் நிரம்பிய அவையில் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா சிறப்பிடத்தில் அமர்ந்திருக்க, பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் வ.சுப. மாணிக்கம் எழுந்து நின்று, கவிஞருக்கு வழங்கவிருக்கும் பட்டத்தின் தகுதியுரையைப் படித்தார்.

பேரவைச் செம்மல்

''. 'காணாத காடு' என்று தம் ஆறிரண்டாண்டில் பாடத் தொடங்கியவர் யார்? ''ஏடு தூக்கிப் பள்ளியில், இன்று பயிலும் சிறுவரே, நாடு காக்கும் தலைவராய், நாளை விளங்கப் போகிறார்'' என்று எதிர்காலம் கண்டவர் யார்? திட்டங்களில் எல்லாம் பெரிய திட்டம் குழந்தைகளை நன்முறையில் உருவாக்கும் திட்டமே என்று திட்டவட்டமாக அறைந்தவர் யார்? அவர்தாம் மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தில் பேரவைச் செம்மல் என்ற செம்மாந்த பட்டத்தினை இன்று பெறும் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள்... அவரே, தமிழன்னை பல்லாயிரம் ஆண்டு கருக்கொண்டு தாழாது பொறையுயர்த்த முதற் குழந்தைக் கவிஞர்.

குழந்தை இலக்கியத் தந்தை. இப்பிள்ளைக் கவி நாமறிந்த கவிஞர் வரிசையிலே எண்ணத்தக்க புள்ளிக்கவி. இந்தியக்

குடியரசில் குழந்தையிலக்கியக் களத்து முடிசூடா மன்னராகப் புகழ் பெற்றுவரும் தமிழ்க் குரிசில் அழ. வள்ளியப்பா அவர்களுக்குத் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்ற பட்டத்தினை வழங்கியும், தமிழ்ச் செம்மல்கள் பேரவையின் ஓர் உறுப்பினராக ஏற்றுக் கொண்டும் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் பாராட்டிச் சிறப்பிக்கின்றது.''

பள்ளியிறுதிவரை மட்டுமே படித்த வள்ளியப்பா பல்கலைக் கழகத்தின் பேரவைச் செம்மல் என்னும் பட்டம் வழங்கப்பட்டுச் சிறப்பிக்கப் பெற்றார். தமிழகத்தில் வேறு யாரும் பெறாத சிறப்பு இது. இந்தியாவில் வேறு குழந்தை இலக்கியப் படைப்பாளர் இச்சிறப்பினைப் பெற்றதாகத் தெரியவில்லை.

அன்று முதல் வள்ளியப்பா, அப்பல்கலைக்கழகத்தின் 'செனட்' உறுப்பினராகிவிட்டார். 1989, மார்ச் மாதம் 10ஆம் நாள் நடந்த 'செனட்' கூட்டத்தில் கலந்து கொண்ட வள்ளியப்பா, 'குழந்தை இலக்கியத்தைப் பல்கலைக்கழக அளவில் ஒரு பாடமாக அமைக்க வேண்டும்' என்று பேசினார். பேசி முடித்து உட்காரும்போது, இயல்பாக உட்கார முடியாமல் அருகில் இருந்த, இராமசாமி தமிழ்க் கல்லூரியின் முதல்வர் மீது சாய்ந்தார்.

இன்னுயிரும் ஈந்தார்

உடனே அவர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். அவர் குடும்பத்தார் மருத்துவமனைக்கு விரைந்து வந்தனர்.

டாக்டர்கள் மிகுந்த கவனத்தோடு உரிய சிகிச்சை வழங்கியும், 1989, மார்ச் 16ஆம் நாள் அதிகாலை ஏழரை மணியளவில், குழந்தை இலக்கியத்துக்காகவே தம் வாழ்வை, பொருளை வழங்கியிருந்த குழந்தைக் கவிஞர் தம் உயிரையும் வழங்கிவிட்டார்.

குழந்தை இலக்கியத்துக்குப் புதுவாழ்வு வழங்கி, புத்துணர்ச்சி யூட்டிய குழந்தைக் கவிஞர் புகழ் தமிழ் வாழும் அளவும் வாழும் என்பதில் ஐயமில்லை.

குழந்தைக் கவிஞரின் இலக்கியப் பணியை நினைவு கூர்ந்து, அவர் புகழ் பரப்பும் சீரிய தொண்டை, அவர் பெயரால் கோவையில் அமைக்கப்பட்ட 'வள்ளியப்பா இலக்கிய வட்டம்' என்னும் இலக்கிய அமைப்புத் தொடர்ந்து செய்து வருகிறது.

கவிஞர் இறக்கும்போதும், குழந்தைப் பாடல் ஒன்றை உரு வாக்கிக் கொண்டே இருந்தார்போலும். அதைத் தமிழ் நாட்டுக் குழந்தைகளுக்குக் கொடுத்துவிடும் துடிப்புடன், பேனா இல்லா மல், பேப்பர் இல்லாமல், தானாக எழுதமுற்பட்டார் போலும். ஏனென்றால், உயிர் பிரிந்த நேரத்தில் அவரது வலக்கையின் மூன்று விரல்கள் மடிந்தும், இரண்டு விரல்கள் பேனா பிடிப்பதும் போன்றும் இருந்தன.

குழந்தைக் கவிஞர் வள்ளியப்பா தம் இறுதி நிமிடத்திலும் குழந்தைகளுக்கு ஒரு பாடல் எழுத முயன்றவாறே உயிர் துறந் தார் என்று தோன்றுகிறது.

எழுதிய நூல்கள்

பாடல்கள்

1. மலரும் உள்ளம் (முதல் தொகுதி)
2. மலரும் உள்ளம் (இரண்டாம் தொகுதி)
3. சிரிக்கும் பூக்கள்
4. பாட்டிலே காந்தி கதை
5. ஈசாப் கதைப் பாடல்கள்
6. பாப்பாவுக்குப் பாட்டு
7. சின்னஞ்சிறு பாடல்கள்
8. வெளிநாட்டு விடுகதைகள்
9. நேரு தந்த பொம்மை
10. சுதந்திரம் பிறந்த கதை
11. பாடிப் பணிவோம்.

கதைகள்

12. பர்மா ரமணி
13. நீலா மாலா
14. மணிக்கு மணி
15. பாட்டிக்குப் போட்டி
16. நல்ல நண்பர்கள்
17. குதிரைச் சவாரி
18. ரோஜாச் செடி
19. உமாவின் பூனைக்குட்டி

20. அம்மாவும் அத்தையும்

21. மூன்று பரிசுகள்

22. வேட்டை நாய்

23. திரும்பி வந்த மான்குட்டி

கட்டுரை நூல்கள்

24. பிள்ளைப் பருவத்திலே

25. பெரியோர் வாழ்விலே

26. சின்னஞ்சிறு வயதில்

27. கதை சொன்னவர் கதை

28. எங்கள் கதையைக் கேளுங்கள்

29. நேருவும் குழந்தைகளும்

30. மிருகங்களுடன் மூன்று மணி

31. விடுகதை விளையாட்டு

32. நம் நதிகள்

நாடகம்

33. வெற்றிக்கு வழி

ஆய்வு நூல்

34. வளர்ந்து வரும் குழந்தை இலக்கியம்

மொழிபெயர்ப்பு

35. எக்காலத்துக்கும் ஏற்ற கதைகள்

36. ரோகந்தாவும் நந்திரியாவும்

தொகுப்பு நூல்

37. சிறுவர் கதைப்பாடல்கள்

மேற்கண்ட நூல்களில் பரிசு பெற்றவை

மத்திய அரசின் பரிசு பெற்றவை

1. மலரும் உள்ளம் (முதல் தொகுதி)
2. பாட்டிலே காந்தி கதை

தமிழக அரசின் பரிசு பெற்றவை

1. மலரும் உள்ளம் (முதல் தொகுதி)
2. பாப்பாவுக்குப் பாட்டு
3. நல்ல நண்பர்கள்
4. பெரியோர் வாழ்விலே
5. சின்னஞ்சிறு வயதில்
6. பிள்ளைப் பருவத்தில்

அழ.வள்ளியப்பா: 'குழந்தைக் கவிஞர்' என்னும் தொடரைத் தோற்றுவித்த பெருமைக்குரியவர், அழ.வள்ளியப்பா. இவர் பல்வேறு துறைகளில் ஈடுபட்டுப் புகழீட்டும் ஆற்றல் பெற்றிருந்தும் தம் படைப்பாற்றல் முழுவதையும் குழந்தை இலக்கியத்துக்கே அர்ப்பணித்தவர். குழந்தை எழுத்தாளர் சங்கம் என்னும் அமைப்பை உலகத்திற்கே ஒரு புதுமையாய் இவர் தோற்றுவித்தார். முதல் குழந்தைப் புத்தகக் காட்சி, முதல் குழந்தை எழுத்தாளர் புகைப்படக் காட்சி, முதல் குழந்தை இலக்கிய மாநாடு - இப்படி அவர் முதல் முதலாக ஏற்படுத்திய பலதுறைச் சாதனைகள்தாம் தமிழகத்தில் இன்றும் குழந்தை இலக்கியத்தை வளப்படுத்தி வருகின்றன. இவரின் **மலரும் உள்ளம்** என்னும் படைப்பு மத்திய மாநில அரசுகளின் பரிசு பெற்றது.

டாக்டர் பூவண்ணன்: பூவண்ணன் பள்ளிப் பருவத்திலிருந்தே வள்ளியப்பாவைக் குருவாகக் கொண்டு, குழந்தை இலக்கியப் பணி செய்து வருகிறார். 'கரும்பு' என்னும் சிறுவர் வார இதழின் ஆசிரியராகத் தொண்டாற்றியவர். இவர் எழுதிய சுமார் நூறு சிறுவர் நூல்களைத் தொகுத்து டாக்டர் பூவண்ணனின் "சிறுவர் இலக்கியக் களஞ்சியம்" என்று 15 தொகுதிகளாக வெளியிட்டுள்ளார். டாக்டர் பூவண்ணன் 1990-இல் டில்லியில் உள்ள தேசிய சிறுவர் கல்விக் கழகத்தால் (National Council for Child Education) "இந்தியாவின் தலை சிறந்த குழந்தை எழுத்தாளர்" என்று தேர்ந் தெடுக்கப்பட்டு, பரிசும் விருதும் வழங்கிச் சிறப்பிக்கப் பெற்றார்.

I SBN 812602612-X

9798126026127

Azha Valliappa
(Tamil) Rs. 40

